
# தமிழரசு

16·4·1988 ரூ.1







சென்னை அடையாறு ஆற்றின் குறுக்கே கோட்டூர்புரத்தில் ரூ. 176 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்ட பாலத்தை 2.4.1988 அன்று மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் திறந்து வைத்தார்.

# உறுதி ஏற்போம்!

மகாத்மா காந்தி அடிகள் 1930-ஆம் ஆண்டு குஜராத் மாநிலம் தண்டி கடற்கரையை நோக்கி நடத்திய உப்புச் சத்தியாக்கிரக யாத்திரை 58 ஆண்டுகள் கழித்து, 1988-ஆம் ஆண்டு மார்ச் 12-ந் தேதி அன்று மீண்டும் நடத்தப்பட்டது. இந்திய ஒற்றுமை யாத்திரை என்று பெயரிடப்பட்ட இந்த வரலாற்று நிகழ்ச்சியில் மைய அமைச்சர்கள், மாநில முதல்வர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பல பெருமக்கள் பங்கேற்றனர். அன்றைய உப்புச்சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று இன்றும் நம்முடன் இருக்கும் 12 வீரத் தியாகிகளுக்கு மாண்புமிகு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சிறப்புச் செய்தார்.

இந்தப் பயணத்தின் இடையில் மேதகு குடியரசுத் துணைத் தலைவர் திரு சங்கர்தயாள் சர்மா அவர்களும், இறுதி நாளான 6.4.88 அன்று மேதகு குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தொடக்க நாளில் யாத்திரையைத் தொடங்கி வைக்குமுன், மாண்புமிகு பிரதமர் அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டதாவது:

''இதே நாளில்தான் 58 ஆண்டுகளுக்கு முன்பு அண்ணல் காந்தி அடிகள் பாதயாத்திரை மேற்கொண்டார். அவர் காட்டிக்காத்த கொள்கைகளை நாம் இந்த நாளில் பின்பற்ற வேண்டும். வகுப்பு ஒற்றுமை, சகோதரத்துவம், அகிம்சை ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

''நாட்டில் இப்போது உள்ளேயும் வெளியில் இருந்தும் அபாயம் அதிகமாக உள்ளது. ஒற்றுமை, ஒருமைப்பாட்டைக் காக்க இளைஞர்கள் ஒத்துழைக்க வேண்டும். சிக்கலான காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். அண்ணல் காந்தி அடிகள் கற்றுக் கொடுத்த அகிம்சை, ஒற்றுமைப் பாடத்தை நாம் பின்பற்றி நாட்டைக் காக்க வேண்டும்.

''நாட்டைப் பிளவுபடுத்தச் சில சக்திகள் முயற்சி செய்கின்றன. அகிம்சை வழியில் சென்று அவற்றை இளைஞர்கள் ஒடுக்க வேண்டும்''



திருச்சிராப்பள்ளியில் 13.4.1988 அதிகாலையில் மேதகு குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரக யாத்திரையைத் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்களும், உயர் அதிகாரிகளும், விடுதலைப் போராட்ட வீரர்களும் பங்கேற்றனர்.

# பயணப் போர்ப் பரணி

நாமக்கல் கவிஞர்



"கத்தி யின்றி ரத்த மின்றி
  யுத்த மொன்று வருகுது
சத்தி யத்தின் நித்தி யத்தை
  நம்பும் யாரும் சேருவீர் (கத்தி)

ஒண்டி அண்டிக் குண்டு விட்டிங்
  குயிர்ப றித்த லின்றியே
மண்ட லத்தில் கண்டி ராத
  சண்டை யொன்று புதுமையே! (கத்தி)

குதிரை யில்லை யானை யில்லை
  கொல்லும் ஆசை யில்லையே
எதிரி யென்று யாரு மில்லை
  எற்றும் ஆசை யில்லதாய் (கத்தி)

கோப மில்லை தாப மில்லை
  சாபங் கூறல் இல்லையே
பாப மான செய்கை யொன்றும்
  பண்ணு மாசை யின்றியே (கத்தி)

கண்ட தில்லை கேட்ட தில்லை
  சண்டை யிந்த மாதிரி
பண்டு செய்த புண்ணி யந்தான்
  பலித்த தேநாம் பார்த்திட! (கத்தி)

காந்தி யென்ற சாந்த மூர்த்தி
  தேர்ந்து காட்டும் செந்நெறி
மாந்த ருக்குள் தீமை குன்ற
  வாய்ந்த தெய்வ மார்க்கமே. (கத்தி)

[வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரகிகள் தமது பாத யாத்திரையின்போது பாடிச் செல்வதற்காக, நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் புதிதாகப் புனைந்து கொடுத்த பாடல்.]

## வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரகக் காட்சிகள்:

# தேசபக்தர்களின் நினைவுச் சித்திரம்

**ஜி: ராமச்சந்திரன்**

உப்புயாத்திரையை மீண்டும் நடத்திக்காட்டுவது ஒரு பெரிய தேச சேவையாகும். ராஜாஜியின் தலைமையில்நடந்த உப்புசத்தியாக்கிரக யாத்திரைதொடர்பாக எனது நினைவுகள் இன்னும் பசுமையாக உள்ளன. திருச்சியில் டாக்டர் ராஜன் அவர்களுடைய பெரிய மாளிகையிலிருந்து இந்த யாத்திரை தொடங்கியது. பலவேறு நகரங்களில் இருந்து தொண்டர்கள் வருவதும் போவதுமாக இருந்ததால் திருச்சி நகரே கலகலப்பாக இருந்தது. பம்பாயிலிருந்து வந்தவர்கள் பாண்டுவாத்தியங்களை முழக்கினர். ராஜாஜி அதையெல்லாம் நிறுத்திவிட்டு பாடல்கள் பாடுமாறு கூறினார். அதிகாலையில் தொண்டர்கள் அணிவகுத்து நின்றனர். ராஜாஜி தலைமை தாங்கினார். 'ரகுபதிராகவ ராஜாராம்' பாடல் தொடங்கியவுடன் படை நடக்கத் தொடங்கியது. நான் ராஜாஜி அவர்களுக்குப் பக்கத்தில் இருந்தேன்.

திருச்சி மாவட்ட எல்லையைக் கடக்கும் நேரத்தில் தஞ்சை மாவட்டக் கலெக்டர் தார்ன், ஐ.சி.எஸ். பிறப்பித்த உத்தரவைப் பற்றிய செய்தி கிடைத்தது. ராஜாஜி தலைமையில் வரும் சத்தியாக்கிரகப் படைக்கு வரவேற்பு உணவு எதுவும் அளிக்கக்கூடாது என்றும், மீறி அளித்தால் கடும் தண்டனை கொடுக்கப்படும் என்றும் தஞ்சை ஆங்கிலக் கலெக்டர் உத்தரவு கூறியது. இதைப் பார்த்த உடன் ராஜாஜி வழக்கமான தமது அலட்சியச் சிரிப்பை உதிர்த்தார். 'இந்த உத்தரவு போட்டவர்கள் கையைப் பிசைந்துகொண்டு நிற்கப் போகிறார்கள். சத்தியாக்கிரகிகளான நமக்கு எந்தவிதக் கவலையுமில்லை. மக்களின் மகத்தான உற்சாகத்தை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்பதுதான் நமது கவலை'' என்று எங்களிடம் ராஜாஜி கூறினார்.

உடனே அவர் பத்திரிகைகளுக்கு ஒரு செய்தி சொன்னார். ''எனது மக்களை நான் அறிவேன். மக்கள் என்னை அறிவார்கள். இதனால் மக்களுடைய உற்சாகம் பலமடங்கு பெருகும். அதை எப்படிச் சமாளிப்பது என்ற தர்மசங்கடம்தான் ஏற்படப்போகிறது. நாட்டுமக்கள் சுதந்திர உணர்வில் நீந்தி வருகிறார்கள். அந்த உணர்ச்சிப் பெருக்கத்தை முள்ளும், நெருஞ்சியும், ஒன்றும் செய்ய முடியாது,' என்பது தான் ராஜாஜியின் அறிக்கை. ராஜாஜி தமது அறிக்கையில் கூறிய ஒவ்வொரு சொல்லும் உண்மை என்ற வகையில் யாத்திரை நிகழ்ச்சிகள் அமைந்தன.



மூதறிஞர் ராஜாஜி தலைமையில் 1930-ஆம் ஆண்டு நடந்த வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்குகொண்ட பெருமைமிக்க தேசபக்தர்களான ஜி. ராமச்சந்திரன், ஏ. என். சிவராமன், ஓ. வி. அளகேசன் ஆகிய மூவரின் நினைவுச் சித்திரங்கள்:

யாத்திரையின் முதல் கட்டமாக ஸ்ரீரங்கத்திலேயே மகத்தான வரவேற்பு. விருந்துபசாரங்களைக் கண்ட ராஜாஜிக்குக் கவலை வந்துவிட்டது. தமது உத்தரவின்றி எந்தத் தொண்டரும் பொதுமக்களிடமிருந்து எதையும் பெறக்கூடாது என்று கட்டளை இட்டார். அதை அடுத்து மன்னார்குடி போன்ற இடங்களில் பிரமாண்ட வரவேற்பு. இந்தச்செய்திகளால் தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் பரபரப்பு அதிகரித்தது.

'நான் உப்பு அள்ளிக் கைதாகும் வரை மற்றவர்கள் காத்திருக்க வேண்டும். அதன் பிறகு மற்றவர்கள் சத்தியாக்கிரகம் செய்யலாம்' என்று ராஜாஜி கூறியிருந்தார்.

மகாத்மாவின் தண்டியாத்திரை நாட்டில் பெரிய எழுச்சியை ஏற்படுத்தி இருந்தது. அதே போல் ராஜாஜியின் வேதரணியம் யாத்திரையும் உணர்ச்சியைக் கிளறிவிட்டது.

வேதாரணியத்தில் ஏராளமாக உப்பளங்கள் இருந்தன. அதனால் தான் வேதாரணியத்தை ராஜாஜி தேர்ந்து எடுத்தார். வேதாரணியத்தில் ராஜாஜிக்குக் கிடைத்த வரவேற்பை வார்த்தைகளால் சொல்ல முடியாது. சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்களில் இருந்து மக்கள் திரண்டிருந்தனர். கணக்கு வழக்கின்றி ராஜாஜிக்கு மாலைகள் போடப்பட்டன. ராஜாஜி அவற்றையெல்லாம் தடுத்து நிறுத்திவிட்டுப் பேசினார். ''இவ்வளவு மாலைகளையும் தாங்கும் சக்தி எனது சிறிய கழுத்துக்கு இல்லை. இன்று எல்லோரும் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். நாளைக்கு நெருக்கடிகள் தோன்றலாம். சுற்றிலும் போலீசார் கண்காணித்தபடி இருக்கிறார்கள். நாளை என்னைக் கைது செய்து கொண்டு போய்விடுவார்கள். அதற்குப் பிறகு எழுகின்ற நிலைமையை நீங்கள் உறுதியுடன் சமாளிக்க வேண்டும். அகிம்சையைக் கடைப்பிடிக்க வேண்டும். போலீசார் உங்களைக் கைது செய்தாலோ, தடியால் அடித்தாலோ, யாரும் ஒரு விரலைக்கூட போலீசாருக்கு எதிராகக் காட்டக்கூடாது. தமிழ் மக்களாகிய நாம் நெஞ்சு நிமிர்த்தி நிற்க வேண்டும். தமிழன் என்ற பெருமையுடன் தமிழ்ப் பண்பாட்டின் உருவமாக நின்று, நாம் எல்லாம் நமது பெருமையைக் கட்டிக் காப்பாற்ற வேண்டும்'' இவ்வாறு ராஜாஜி பேசினார்.

மிகவும் சுருக்கமாகத்தான் ராஜாஜி பேசினார். ஆனால் அவருடைய பேச்சு மக்களுடைய இதயங்களிலெல்லாம் ஊடுருவி நின்றது.

ராஜாஜி மறுநாள் அதிகாலை உப்பை அள்ளினார். போலீசாருக்கு முன்பே அறிவிப்பு கொடுக்கப்பட்டிருந்தது. கோவிந்தமேனன் என்கிற மாவட்ட போலீஸ் அதிகாரிதான் ராஜாஜியைக் கைது செய்தார். அந்த அதிகாரி ராஜாஜிக்கு மிகவும் வேண்டியவர். ராஜாஜியிடம் மிகுந்த மதிப்பு கொண்டவர். ராஜாஜி கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார். வேதாரணியம் வட்டாரம் அன்று மவுனமாகப் பிரார்த்தனையில் ஈடுபட்டது.

அடுத்த நாள் புயலைப்போல தொண்டர்கள் பாய்ந்து சென்று உப்புச் சட்டத்தை மீறினார்கள். ராஜாஜி தலைமையில் வந்த சத்தியாக்கிரகப் படையினருக்காக வேதாரணியத்தில் ஒரு முகாம் அமைக்கப்பட்டிருந்தது. இதற்கான ஏற்பாடுகளை சர்தார் வேதரத்தினம் பிள்ளை எனும் தேசபக்தர் செய்திருந்தார். அவருடைய அழைப்பின்பேரில் தான் ராஜாஜி வேதாரணியத்தைத் தேர்ந்து எடுத்திருந்தார். பின்னர் வேதரத்தினமும் கைது ஆனார்.

ராஜாஜி தலைமையில் வந்த தொண்டர் படையில் நானும் இருந்தேன். கே. சந்தானம் தான் அடுத்த தலைவர். அவர் மிகுந்த ஒழுக்க சீலர். அறிவாளி. பிற்காலத்தில் மத்திய அமைச்சராக இருந்தவர். அவரும் கைது செய்யப்பட்டார். அடுத்து மட்டப்பாறை வெங்கடராம அய்யர் என்பவர் இருந்தார். மிகுந்த பலசாலி. சிங்கம் போன்றவர். க்ஷத்திரியர்களைப் போல வீரம் கொண்டவர். அவரும் கைது ஆனார்.

பிறகு என் தலைமையில் சத்தியாக்கிரகம் நடந்தது. போராட்டம் சீக்கிரம் முடிவடைந்துவிடக்கூடாது என்பதற்காக நான் இயக்கத்தை நீடித்து நடத்தினேன். அணி அணியாகச் சென்று உப்பை அள்ளி, வேதாரணியம் வந்து தொண்டர்கள் கைது ஆவது வழக்கம். சில நாட்களில் வேதாரணியத்தில், கூட்டம் நடத்தி உப்பை ஏலம் போடுவதும் உண்டு. பத்து காசு மதிப்புள்ள சத்தியாக்கிரக உப்பு இருபது முப்பது ரூபாய்களுக்குக்கூட ஏலத்தில் விற்பனையாகும்.

வேதாரணியத்தில் புகழ்மிக்க பெரிய கோயில் இருக்கிறது. சத்தியாக்கிரகத் தொண்டர்களுக்காக அவ்வூர்ப் பெண்கள் வேண்டிக் கொள்வார்கள்.

நாள் ஆகஆக, போலீசார் பொறுமை இழந்தனர். ஈவு இரக்கமின்றி, தொண்டர்களைத் தடியால் அடித்தனர். சித்திரவதை செய்தனர். ஒரு நாள், தொண்டர்களை மயக்கம் வரும் வரை அடித்து, மயங்கி விழுந்த தொண்டர்களை முள் புதர்கள் நிரம்பிய பாதையில்



**திரு ஜி. இராமச்சந்திரனும், திரு சுப்ரியும். (பழைய படம்)**

தரதரவென்று இழுத்து வந்து, ரத்தம் சொட்டச் சொட்ட வீசிவிட்டுச் சென்றனர்.

இந்தக் கொடுமையைக் கண்டு வேதாரணியத்தில் பெரியகொதிப்பு ஏற்பட்டது. மக்கள், குறிப்பாக பெண்கள் போலீசை வசைபாடிச் சாபம் இட்டனர்.

நாளடைவில் சத்தியாக்கிரகத் தொண்டர்கள் எண்ணிக்கை ஐம்பது ஆகக் குறைந்தது.

அன்றாடம் காலையில் பிரார்த்தனை. பிறகு காலை உணவு. அடுத்து நூல் நூற்பது. பின்னர் கும்பலாகச் சென்று உப்பு அள்ளி வருவது. இவை அன்றாட நிகழ்ச்சி. ஒரு நாள் ஏராளமாக உப்பு அள்ளி வந்து விட்டனர் தொண்டர்கள். முகாமின் நடுவே உப்புகுவிக்கப்பட்டிருந்தது. அந்த உப்புக் குவியலுக்குப் பாதுகாப்பாக தொண்டர்கள் சுற்றி உட்கார்ந்தனர். போலீஸ் அதிகாரிகள் வந்து உப்பைப் பறிமுதல் செய்ய முனைந்தனர். திருமதி ருக்மிணி லட்சுமிபதி எனும் வீராங்கனை (இவர் பிற்காலத்தில் அமைச்சராக இருந்தார்) உப்புக் குவியலின் மேல் உட்கார்ந்து கொண்டார். மற்ற தொண்டர்கள் சுற்றி நின்றனர். 'இது சுதந்திர உப்பு. எங்கள் பிணத்தின்மீது தான் போலீசார் இதைப் பறிமுதல் செய்ய முடியும்' என்று உறுதியுடன் கூறிவிட்டோம். பின்னர் போலீசார் மூர்க்கத்தனமாகத் தொண்டர்களை அடித்தனர். சித்திரவதை செய்தனர். அப்போது திருச்சியிலிருந்து வந்திருந்த டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜனும் இதில் கலந்து கொண்டார்.

அரக்கத்தனமான போலீசாரின் தாக்குதல் இரண்டு மணிநேரம் தொடர்ந்தது. எல்லாத் தொண்டர்



சர்தார் வேதரத்தினம்

களையும் இழுத்து வெளியே போட்டார்கள். நானும் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனும் எங்களைக் கைது செய்யுமாறு போலீஸ் அதிகாரியிடம் சொன்னோம். எங்களைக் கைது செய்து அங்கிருந்து அகற்றினார்கள். சத்தியாக்கிரகத் தொண்டர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு கோர்ட்டில் நிறுத்தப்பட்டார்கள். கைது செய்யப்பட்ட உடன் சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டது.


உள்ளூர் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணை என்ற பெயரில் ஒரு நாடகம் நடந்தது. நானும் டாக்டர் ராஜனும் சிறைக்குச் சென்றோம். இவ்வாறாக ஒரு யுத்தம் முடிந்தது.

எனக்கு ஓராண்டுக்கடுங்காவலும், ஐந்நூறு ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டன. தொண்டர் படைத்தலைவன் என்பதால் ஐந்நூறு ரூபாய் அபராதம் எனக்குக் கூடுதலாக விதிக்கப்பட்டது. அபராதத் தொகைக்காக சத்தியாக்கிரக முகாமிலிருந்து பாத்திரங்கள் சாமான்களையெல்லாம் கூட போலீசார் பறிமுதல் செய்தனர்.

அதை அடுத்து, தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் உப்புச் சட்டத்தை எதிர்த்து மறியலும் போராட்டமும் நடைபெற்றன. இந்தச் சத்தியாக்கிரகம் இப்போது இந்திய வரலாற்றில் இடம பெற்று விட்டது.

தண்டியாத்திரையைப் போலவே தமிழ்நாட்டில் நடந்த வேதாரணியம் யாத்திரை நமது சுதந்திர வரலாற்றில் தனி இடம் பெற்றுத் திகழ்கிறது.


வேதாரணியம் உப்புச்சத்தியாக்கிரகம் இப்போது மீண்டும் நடத்திக் காட்டப்படுகிறது. இந்த நிகழ்ச்சிக்கு நான் அளிக்கும் செய்தி இது தான்: ''நமது சரித்திரத்தில் மிக முக்கியமான கட்டத்தில் சுதந்திர இயக்கத்தின் ஒரு பகுதியான உப்புச்சத்தியாக்கிரகக் காட்சியை மீண்டும் நடத்திக் காட்டுகிறார்கள். வேதாரணியம் சத்தியாக்கிரகத்தைத் தலைமை ஏற்று நடத்திய ராஜாஜி அவர்களை நினைவில் கொள்ளுங்கள். இந்த யாத்திரையில் நீங்கள் நடந்து செல்கிறபோது தென்னாட்டின் புகழ்மிக்க வரலாறு படைத்த அந்த மெலிந்த உருவத்தை-யோகியை நினைவில் நிறுத்துங்கள். நமது சுதந்திரப் போராட்டத்தின் மிகப் புனிதமான ஒரு இயக்கத்தை மீண்டும் நடத்திக் காட்டும் பெருமை உங்களுக்குக் கிட்டியிருக்கிறது. யாத்திரையின் போது ராஜாஜி கடைப்பிடித்த அதே சிறப்புத் தன்மைகளைக் கடைப்பிடியுங்கள். இன்றைக்கு நாம் காணுகின்ற சுதந்திர இந்தியா எப்படி உருவாகியது என்பதை மக்களுக்கு எடுத்துக்கூறுங்கள்.



மட்டப்பாரை

திரு ஆர்.எஸ். வெங்கடராமய்யர்

நமது தேசமான இந்தியாவை மகத்தான தேசமாக வலிமைமிக்க நாடாக ஒற்றுமையுடன் கட்டிக் காக்க இன்றைய சூழ்நிலையில் இந்திய மக்கள் குறிப்பாக தமிழ்மக்கள் என்னென்ன கடமைகளை ஆற்றவேண்டும் என்பதை மக்களுக்கு எடுத்துக் கூறுங்கள். இதுவே எனது செய்தி.''



## ஏ.என். சிவராமன்

லாகூரில் (1929இல்) காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் நடைபெற்றது. அந்த மகாசபையில்தான் பூரண சுதந்திரத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்த ஆண்டில் உப்புச் சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டது.

இந்த உப்புச் சத்தியாக்கிரகத்தில் சில பெயர்களை நாம் மறக்கக் கூடாது. ஒருவர் ஹரிஹர சர்மா. இவர் மகாத்மா காந்தியடிகளின் சபர்மதி ஆசிரமத்தில் இருந்தவர். இந்திப் பிரச்சாரச் சபையைத் தமிழ் நாட்டில் நிறுவியவர். இந்தியைப் பிரசாரம் செய்வதற்காக ஹரிஹர சர்மாவை மாகத்மா தமிழ்நாட்டுக்கு அனுப்பினார். அவருடன் தமது மகன் தேவதாஸ் காந்தியையும் அனுப்பினார்.

உப்புச் சத்தியாக்கிரகத்துக்குத் தொண்டர்களைச் சேர்க்கும் பொறுப்பு ஹரிஹர சர்மாவிடம் விடப்பட்டது. அவரிடம்தான் உப்புச் சத்தியாக்கிரகம் செய்ய தொண்டனாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று சொன்னேன். அவர்தான் என்னை ராஜாஜியிடம் அழைத்துச் சென்றார். அப்போது சென்னை திருவல்லிக்கேணி நெடுஞ் சாலையில் காங்கிரஸ்காரர்களின் கூட்டம் நடைபெற்றது. நான் சத்தியாக்கிரகப் படையில் சேரவேண்டும் என்று சொன்னேன். பல விவரங்கள் கேட்ட பிறகு என்னைச் சேர்த்துக் கொண்டார்கள்.

அப்போது என் மனைவி கருவுற்றிருந்தார். என் மனைவியைக் காணத் திருநெல்வேலிக்குச் சென்றேன். அம்மாவட்டத்திற்கு ராஜாஜி வந்திருந்தார். அவர் பேசிய கூட்டங்களுக்கெல்லாம் தவறாமல் போனேன். திரு யக்ஞேசுவரசர்மா என்பவர் அங்கு முக்கியமான காங்கிரஸ் தலைவர். அவருடன் தான் நான் சென்றேன். ராஜாஜி கலந்து கொண்ட கூட்டங்களில் மிகப் பெரிய கூட்டம் தூத்துக்குடியில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கும் நாங்கள் சென்றிருந்தோம்.

ராஜாஜி ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகிறார் என்றால், அதற்கு எந்த விளம்பரமும், தலைமையும் வேண்டியதில்லை. ராஜாஜி வந்திருக்கிறார் என்றால் போதும், முக தரிசனத்தைப்பார்த்துவிட்டு உட்கார வேண்டியதுதான். ராஜாஜி பேசுவதற்கு முன் இன்னொருத்தர் பேசுவது என்பது அநாவசியம். அப்போது எல்லாம் ராஜாஜி அவர்களின் பேச்சு, சேலம் தமிழாக இருக்கும். அதாவது அவரது சொந்த ஊர் ஒசூர். கர்நாட்கா எல்லைப்

பகுதி அவர் படித்ததே பெங்களூர் காலேஜில். ஆகவே அவர் சரிவரத் தமிழில் பேசும் சந்தர்ப்பமே இந்த யாத்திரையின்போதுதான் கிடைத்தது. ஏனெனில் மாலையில் தினமும் கூட்டம் நடைபெறும். அதனால் அவர் பேசுவதை நான் திருநெல்வேலி தமிழிலே சொல்வதுண்டு.

உடனே ராஜாஜி அவர்கள் யக்ஞேசுவர சர்மாவைக் கூப்பிட்டு 'யார் இந்தப் பையன்?' என்று கேட்டார். அப்போது எனக்கு வயது 26 தான். அப்பொழுதெல்லாம் இந்த யாத்திரையில் கலந்து கொள்ள சில நிபந்தனைகள் இருந்தன. ஒருவர் ஒழுக்கமும் நன்னடத்தையும் கொண்டவராகவும் இருக்க வேண்டும். அதன் பின்பு பந்தலு ஐயர் என்பவர் இந்த யாத்திரைக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பலவழிகளில் உதவி புரிந்தார். ராஜாஜி அவர்கள் இந்த யாத்திரையை அறிவித்தவுடன் தஞ்சாவூரில் தார்ன் என்ற ஒரு கலெக்டர் இருந்தார். அவர் ஒரு பகிரங்க உத்தரவைப் பிறப்பித்திருந்தார். அந்த உத்தரவில் 'ஒரு திருட்டுக் கூட்டம்-கொள்ளைக் கூட்டம் ஊர் ஊராக வந்து கொண்டு இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். அவர்களுக்கு யார் உணவு கொடுத்தாலும் அல்லது வரவேற்பு அளித்தாலும் கடுந்தண்டனைக்கு ஆளாவார்கள்' என்று ஊர் முழுக்கத்தமுக்கு அடிக்கப்பட்டது. இந்த யாத்திரையில் பங்கு கொண்டவர்கள் கையில் காசு கிடையாது. ஊர் ஊராகச் சென்றால் அங்கங்கே சத்திரங்கள் இருக்கும். அவர்கள்தான் சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்வார்கள். நாங்கள் வீட்டிலே சாப்பிட்டது கும்பகோணத்தில் மட்டுந்தான். மற்ற இடங்களில் எல்லாம் சத்திரங்கள், வேதபாடசாலைகள், பொது இடங்களாகும். யாத்திரையில் வருபவர்கள் காசு வைத்திருக்கக்கூடாது. ஏனெனில் இங்குக் கஞ்சி குடித்துவிட்டு கையில் காசிருந்தால் அல்வாவும், மிட்டாயும் வாங்கிச்சாப்பிட்டு விடுவார்கள் அல்லவா? அப்படிச் சாப்பிடவும் முடியாது. திருச்சியில் சித்திரை மாதம் 1ந்தேதி டாக்டர் ராஜன் பங்களாவிலிருந்து யாத்திரை கிளம்பியது. அதிகாலை சுமார் 5 மணியளவில் கிளம்பியது. நாங்கள் எல்லாம் 12ந் தேதி இரவு வந்துவிட்டோம்.

அந்த யாத்திரையில் கலந்து கொண்டவர்கள் தினமும் காலையில் 4½ மணிக்கு எழுந்திருக்க வேண்டும். ஒரே ஒரு விளக்குதான் இருக்கும். ஒரு கால்மணி நேரம் சின்ன பஜனை நடக்கும். பின்பு ஊர்வலம் புறப்பட்டு ஒரு குறிப்பிட்ட இடத்தை அடையும். அங்கு பருப்புக் கஞ்சி கொடுக்கப்படும். வேறு எதையும் கொண்டு செல்வதில்லை. ஒரு பையை (ஜோல்னா பை) மட்டும் கொண்டு செல்வோம். இப்படி ஊர்

## உப்பு யாத்திரை— பயண விவரம் திருச்சியில் தொடங்கி வேதாரணியம் வரை

| | |
|---|---|
| 13.4.88 | காலை<br>திருச்சியிலிருந்து புறப்பாடு<br>பகல்-ஸ்ரீரங்கம்<br>இரவு-திருவளர்சோலை |
| 14.4.88 | பகல்-கல்லணை<br>இரவு-கோவிலடி |
| 15.4.88 | பகல்-திருக்காட்டுப்பள்ளி<br>இரவு-சாத்தனூர் |
| 16.4.88 | பகல்-திருவையாறு<br>இரவு-தஞ்சாவூர் |
| 17.4.88 | பகல்-தஞ்சாவூர்<br>இரவு-தாண்டான்கோரை |
| 18.4.88 | பகல்-அய்யம்பேட்டை<br>இரவு-வழுத்தூர் |
| 19.4.88 | பகல்-பாபநாசம்<br>இரவு-நல்லூர் |
| 20.4.88 | பகல்-தாராசுரம்-கும்பகோணம்<br>இரவு-கும்பகோணம் |
| 21.4.88 | பகல்-கும்பகோணம்<br>இரவு-வலங்கைமான் |
| 22.4.88 | பகல்-செம்மங்குடி(ஆலங்குடி)<br>இரவு-நீடாமங்கலம் |
| 23.4.88 | பகல்-பூவனூர்<br>ராஜப்பையன்சாவடி<br>இரவு-மன்னார்குடி |
| 24.4.88 | பகல்-மன்னார்குடி<br>(தட்டாங்கோயில்)<br>இரவு-ஆதிச்சபுரம் |
| 25.4.88 | பகல்-விளக்குடி<br>இரவு-திருத்துறைப்பூண்டி |
| 26.4.88 | பகல்-திருத்துறைப்பூண்டி<br>இரவு-மேல்மருதூர் |
| 27.4.88 | பகல்-தகட்டூர்<br>இரவு-ஆயக்காரன் புலம் |
| 28.4.88 | வேதாரண்யம்<br>சென்றடைதல். |



வலமாக ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து கடைசியாக வேதாரணியம் போய்ச் சேர்ந்தோம். இராஜாஜி அவர்கள் தடையை மீறி, யாருக்கும் தெரியாமல் காலையிலேயே உப்பை அள்ளிவந்துவிட்டார். மற்றவர்கள் அனைவரும் சிறு சிறு பிரிவினராகப் பிரிந்து சென்று உப்பு எடுக்கப்பட்டது. அப்போது காவலர்கள் பலத்த தடியடி நடத்துவார்கள். பலர் கைது செய்யப்பட்டனர்.

## ஐந்து முதல்வர்களை அளித்த உப்புச் சத்தியாக்கிரகம்

வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரகத்துக்குத் தலைமை தாங்கிய இராஜாஜி தமிழ்நாட்டின் முதல் அமைச்சராக இருமுறை பதவி வகித்தார்.

உப்புச் சத்தியாக்கிரக இயக்கத் தொண்டர்களில் ஒருவராகக் கலந்துகொண்டு சிறை சென்ற ஓ.பி. ராமசாமி (ரெட்டியார்), உப்புச் சத்தியாக்கிரகத் தொண்டர்களைச் சேகரிக்கும் பொறுப்பு ஏற்றிருந்த ராஜபாளையம் பி.எஸ். குமாரசாமி (ராஜா), விருதுநகரிலிருந்து தூத்துக்குடி சென்று உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்ட பெருந் தலைவர் காமராசர், சென்னையில் உப்புச் சத்தியாக்கிரகத்துக்குத் தலைமை தாங்கிய ஆந்திரகேசரி டி. பிரகாசம் ஆகிய நால்வருமே தமிழக முதல்வராகப் பதவி வகித்தார்கள். ஆக இந்த சத்தியாக்கிரகம் 5 முதல்வர்களை உருவாக்கிய பெருமை படைத்ததாகும்.

## ஓ. வி. அளகேசன்

**1929இல்** காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் நடைபெற்றது. அந்த மாநாட்டில் ''பூரண ஸ்ரவாஜ்யம்' தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த மாநாட்டில் மோதிலால் நேருவும் கலந்து கொண்டார். அவரது மகன் ஜவகர்லால் நேருவைப் பற்றி மகாத்மா காந்தியடிகள் பெரிதும் மதிப்பு வைத்திருந்தார்கள். சுதந்திரநாடு என்பதை நம்முடைய மொழியிலே சொல்லப் போனால் 'பூர்ண ஸ்வராஜ்யம்' என்று தமிழ் நாளேடுகளில் எழுதப்பட்டது. உண்மையில் சொல்லப்போனால், ஜனவரி 26ந் தேதி தான் நமக்கு சுதந்திர நாள். 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ந் தேதி நாளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியிருந்ததால், இந்த நாள் சுதந்திர தினமாகவும், ஜனவரி 26 குடியரசு தினமாகவும் ஆக்கப்பட்டது.

சரித்திர முக்கியம் வாய்ந்த குடியரசு நிகழ்ச்சி சென்னைக் கடற்கரையில் - திலகர் கட்டத்தில் - (தற்போது மீன்காட்சி சாலைக்குப் பின்புறம்) கொடியேற்றி வைக்கப்பட்டது. அந்த திலகர் கட்டத்தில் தான் காங்கிரஸ் கூட்டம் எல்லாம் நடைபெறும். சத்தியமூர்த்தி போன்றவர்கள் பேசுவார்கள். மகாத்மா தலைமையில் எல்லா ஏற்பாடுகளும் நடந்தன. எந்தத் தடைச் சட்டத்தை மீறுவது என்று கலந்தாலோசித்தபோது, அப்போது முக்கியமாக உப்புத்தடைச் சட்டத்தை மீறுவது என்றுதீர்மானிக்கப்பட்டது. அங்கே சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டிக்கு மகாத்மா தலைமையில் யாத்திரை நடைபெற இருந்தது. காந்தியடிகள் ஒருபோதும முன் வைத்த காலைப் பின்வைக்கமாட்டார். அந்தச் சத்தியாக்கிரகத்திற்குத் தேவையான ஆட்களை சபர்மதி ஆசிரமத்திலிருந்தே தேர்ந்தெடுத்தார். தேசியத் தலைவர் யாரையும் சேர்க்கவில்லை. அப்போது அவருக்கு 61 வயது.

நான் இங்கிருந்து அந்தச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலில் 10ந்தேதி புறப்பட்டு, 13ந்தேதி போய்ச் சேர்ந்தேன். சபர்மதி ஆசிரமத்திற்குச் சென்றபோது யாத்திரை புறப்பட்டுப் போய்விட்டதாகவும், வழியில் காந்தியடிகளைச் சந்திக்கச் சொல்லியும் ஆசிரமத்திலிருந்து திரு. நாராயணன் என்பவர் ஒரு கடிதம் கொடுத்தார். கடிதத்தினைப் பெற்றுக் கொண்டு, ஊர்வலம் போன இடத்தை நோக்கி விரைந்து சென்று, காந்தியடிகள் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று சந்தித்தேன். அப்போது அவர், நான் ஆசிரமத்திருந்தவர்கள் அனைவரையும் கூட சேர்க்கவில்லை. தமிழ்நாட்டில் இராஜாஜி ஆரம்பிக்கப் போகிறார். எனவே அதில் போய் கலந்து கொள்ளும்படியும் சொன்னார். உடனே நான் இராஜாஜி அவர்கள் தலைமையில் நடக்கவிருக்கும் யாத்திரையில் பங்குபெறச் சென்னைக்குத் திரும்பிவிட்டேன்.

சென்னைக்கு வந்தபோது, என் வீட்டில் இராஜாஜியின் யாத்திரையில் பங்குபெற பலத்த எதிர்ப்பு கிளம்பியது. இருப்பினும் நான் விடவில்லை. அழுதேன், அடம்பிடித்தேன். இருந்தாலும் அனுமதிக்கவில்லை. அப்போதைய வழக்கப்படி திருவுளச் சீட்டு போட்டு சீட்டுகூட எடுக்கப்பட்டது. அச்சீட்டில் போகக்கூடாது என்றுதான் வந்தது. இருந்தாலும் என் வேகத்தையும், ஆர்வத்தையும் கண்டு, சரி இனி எப்படியும் இவனை எந்த முறையில் தடுத்தாலும் நிற்கமாட்டான் போலிருக்கிறது, எனவே போய் கலந்துகொள் என்று உத்தரவிட்டார்கள். அப்போது எனக்கு 18 வயது. நானும் என் நண்பர் ஒருவரும் புறப்பட்டு இராஜாஜியைச் சந்திக்கச் சென்றோம.

இராஜாஜி அவர்கள் வருஷப் பிறப்பு அன்றைக்கே டாக்டர் ராஜன் பங்களாவிலிருந்து யாத்திரையை ஆரம்பித்து புறப்பட்டுப் போய்விட்டார்கள். நாங்கள் ராஜன் பங்களாவை அடைந்தபோது அவர்கள் புறப்பட்டுப் போகிறார்கள். வழியில் தங்குமிடத்தில் போய்ப் பார்க்கலாம் என்றார்கள். அதன்படி நாங்கள் ஸ்ரீரங்கம், கல்லணை வந்து, கல்லணையில் ராஜாஜி அவர்களைக் கண்டு பேசினோம். இராஜாஜி அவர்களிடம், 'ஐயா நான் இதுபோல் தண்டிக்குச் சென்று மகாத்மா காந்தியைச் சந்தித்தேன். அவர்கள்தான் தங்களின் யாத்திரையில் போய்க் கலந்துகொள்ளும்படி சொல்லியனுப்பினார்'' என்றேன். நான் நேற்றே வந்திருப்பேன், எங்கள் வீட்டில் ரகளை நடந்தது என்று எடுத்துச் சொல்லி, தாமதத்திற்கு மன்னிக்கும்படியாகவும் கேட்டுக் கொண்டேன். உடனே ராஜாஜி பக்கத்திலிருந்த கே. சந்தானம் அவர்களிடம் ''இவன் தண்டியெல்லாம் போய் வந்திருக்கிறான். இவனை முதல்லே சேர்த்துக் கொள். பிறகு அவரது நண்பனைப் பற்றிப்பார்க்கலாம்' என்று சொன்னார். என்னைச் சேர்த்துக் கொண்டதில் மிக்க மகிழ்ச்சி.

காலை 5 மணிக்கெல்லாம் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வந்தால், ஒரு தம்ளர் மோரும், ஒரு வாழைப்பழமும் கொடுப்பார்கள். சாப்பிட்டுவிட்டுப் புறப்பட்டு விடுவோம். ஊர்வலத்தில் இப்போது போடும் கோஷம் போல போடுவதில்லை. ராம் ரஙம் ஜெயராம் என்ற பாட்டையே பாடிச் செல்வர். மாகத்மாவுக்கு ஜே என்று கூட அதிகம் கோஷம் போடுவதில்லை. இந்த யாத்திரை

யில் மொத்தம் 98 பேர் கலந்து கொண்டார்கள் என்று சொல்லப் பட்டது. இது தவறு. 99-வது நப ராக திரு.ஏ.என்.சிவராமன் (தற் போதைய தினமணி ஆசிரியர்) இருந்தார். நான் போனவுடன் 100 ஆனது. நான் 100-ஆவது ஆள். ஊர்வலத்தில் கோஷங்களுக்குப் பதி லாகப் பாடல்கள் பாடப்பட்டன. நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவர்களின் ''கத்தியின்றி ரத்த மின்றி யுத்தம் ஒன்று வருகுது, சத்தி யத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்'' என்றும், பாரதி யாரின் 'அச்சமில்லை, அச்சமில்லை' என்ற பாடலையும் திரும்பத்திரும்ப பாடிக்கொண்டே போவார்கள். அதன்பின்பு திருவருட்பாவிலிருந்து ''ஒருமையுடன் நின்று திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்'' என்ற பாடலையும் பாடிச் செல்வர்.

அப்போது தஞ்சையில் தார்ன் என்று கலெக்டர் ஒருவன் இருந் தான். அவன் ஒரு சட்டம் போட்டு விட்டான். என்னவென்றால், இந்த யாத்திரையில் வருபவர்களுக்கு வர வேற்போ அல்லது உணவோ அளித் தால் கடுமையாகத் தண்டிக்கப்படு வார்கள் என்று உத்தரவிட்டான்.




திரு கே. சந்தானம்

சித்திரை மாத வெயில் காய்ந்து கொண்டிருக்கிறது. ஊர்வலம் தொடர்ந்து போய்க்கொண்டிருக் கிறது. கும்பகோணம் பந்தலு அய் யர் என்பவர் அனைவருக்கும் சாப் பாடு போட்டு, துணிந்து செயல்பட் டார். நாங்கள் மன்னார்குடி போய்ச் சேர்ந்தோம். மேல்கரையில் தங்கினோம். திருத்துறைப் பூண்டி ஆற்றங்கரையிலே கூட்டம். கூட் டம் நிரம்பி வழிந்தது. ராஜாஜியின் தமிழ்ப் பேச்சைக் கேட்க ஆவலோடு கூடினார்கள். ராமச்சந்திர நாயுடு தலைமையில் கூட்டம் நடந்தது. அப்போது அவர் கைது செய்யப் பட்டார். இருப்பினும், ராஜாஜி அமைதியாக இருந்து மற்ற தொண் டர்களுக்கு ஆறுதல் கூறி யாத்தி ரையை மேற்கொண்டு நடத்திச் சென்றார். சர்தார் வேதரத்தினம் பிள்ளை என்பவரும் ஏற்பாடுகளில் பங்கு கொண்டார். வேதாரணியம் போய்ச் சேர்ந்தபோது, பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட் டிருந்தது. எப்படியும் தடையை மீறிட வேண்டும் என்ற எண்ணத் தில், ராஜாஜி அவர்கள் போலீஸ் வருவதற்கு முன்னயே காலையி லேயே யாருக்கும் தெரியாமல் உப்பை அள்ளி வந்துவிட்டார். அதன்பிறகு 10,14,16 பேராகப் போய் உப்பை எடுத்து வருவோம். போலீஸ் டலரைத் தடியடி செய்து, காவலில் வைத்தார்கள். 144 தடை உத்தரவின்படி நான் திருச்சியில் கைது செய்யப்பட்டு ஜெயிலில் அடைக்கப்பட்டேன்.



# வெற்றிக்கு வித்திட்ட வேதாரணியம்

**மூதறிஞர் இராஜாஜி**



**1930** ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 13ந்தேதி அதாவது தமிழ் வருஷப் பிறப்பன்று உப்பு சத்தியாக்கிரகப் பட்டாளம் திருச்சியிலிருந்து வேதாரண்யத்திற்குக் கிளம்பிற்று. டாக்டர் தி. சோ. சௌ. ராஜன் வீட்டிலிருந்து அன்று நான் உப்பளம் நோக்கித் தொண்டர் குழாத்துடன் புறப்பட்டபோது அவர் மகள் மௌனமாகப் பிரார்த்தித்துக் கொண்டு என் நெற்றியில் திலகமிட்டாள்.

இந்தியாவின் விடுதலைக்காக நம் தேசத்தவர் இதற்கு முன்பு என்னென்ன கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்களோ, அதை எல்லாம் நாங்கள் அனுபவிக்கத் தயாராக இருந்தோம். எங்களில் பலர் பட்டங்களைத் துறந்தார்கள்; பதவிகளை விட்டார்கள்; கல்லூரிப் படிப்பையும், தொழில்களையும் உதறி எறிந்து வந்தார்கள். அத்துடன் தாமாக வருவித்துக் கொண்ட வறுமைக் கொடுமையையும் மேற்கொண்டார்கள். அவ்வனைத்தையும் விடக் கோரமான சோதனைக்கும் நாங்கள் நிமிர்ந்து நிற்கவும் ஆயத்தமாயிருந்தோம்.

## தாரன் துரை தர்பார்

1930-ல் தஞ்சாவூர் ஜில்லா மாஜிஸ்திரேட்டாக இருந்த எ.ஜே. தாரன் (பிற்பாடு டில்லி மத்திய இலாகாவில் காரியதரிசியாகவும் இருந்தவர்) துரையே அஹிம்சா போராட்டத்தை மடக்கப் புதுப்புது ஆயுதங்களை சிருஷ்டித்த சீமான். அவற்றைச் சர்க்கார் பின்னால் இந்தியா எங்கிலும் கையாண்டது. அவசரச் சட்டங்கள் வருமுன்பே சாதாரணமாக அமலில்இருந்துவரும் குற்றச் சட்டங்களுக்குப் புதுப்புது வியாக்கியானங்களைச் சொந்த ஜோராகச் செய்தார். காங்கிரஸ் சத்தியாக்கிரகிகளுக்கு இடமோ, உணவோ கொடுப்போர் யாவரும் அபராதமும், சிறைத்தண்டனையும் பெறக் கூடிய குற்றம் செய்தவர் ஆவர் என ஜில்லாவெங்கும் பறை சாற்றினார். காங்கிரசை எதிர்க்க நம் மக்களையே உபயோகித்து முற்றுகை போடச் செய்வதென்ற துணிச்சலான திட்டத்தைக் கண்டுபிடித்தது அம்மகானே. காங்கிரஸ்காரர்கள் யாவரும் சட்டத்துக்கு விலக்கானவர் என்றும், அவருக்கு உணவோ உறைவிடமோ கொடுப்போர் எவரும் குற்றஞ் செய்ய உடந்தையாக இருந்ததாகக் கருதப்பட்டுத் தண்டிக்கப்படுவரென்றும் தஞ்சை ஜில்லா எங்கிலும் ஜனங்களிடையே துண்டுப் பிரசுரங்களை வினியோகிக்கச் செய்தார். அதைக் குறித்து அதிகாரிகள், கிராமங்கள் எங்கிலும் தண்டோராவும் போடச் செய்தார்கள். என்றாலும் எங்களைப் பட்டினி போடச் செய்வதென்ற அதிகாரிகளின் திட்டம் மகா மோசமாகவே முடிந்தது. யாத்திரை சென்ற வழி எல்லாம் எங்களுக்கு விருந்து; பிரமாதமாக வரவேற்பு. ஜனங்களை கிலி அடிக்கச் செய்யலாமென்ற திட்டமிட்ட அதிகாரிகள் மனதில் இந்த ஆடம்பர உபச்சார வரவேற்புகள் திகைப்பைத் தட்டியது. ஜில்லா மாஜிஸ்திரேட் கண்ணெதிரிலேயே மங்கள வெற்றிகரமாக 15 நாட்கள் பெரும் சீரும் சிறப்புடன் வேதாரணிய சமுத்திர தீரம் வந்து சேர்ந்தோம். யாத்திரையாகத் திருச்சியிலிருந்து வேதாரணியம் நடந்து வந்தபோது முனனும் பின்னும் அதிகாரிகள் கண்காணிப்புடனே சென்றோம். அப்படியும் ஜனங்கள் குதூகலமாகத் தொண்டர்களுக்கு ஆதரவு தரவே சென்றோம்.

அந்த ஜில்லா மாஜிஸ்திரேட் அத்துடன் நிற்கவில்லை. மற்றோர் அஸ்திரத்தைக் கண்டுபிடித்தார். பிறகு அந்தப் பெரும் ஆயுதத்தை இந்தியா சர்க்கார் தேசம் எங்கும் பிரயோகித்தது. அஹிம்சா போராட்டத்தில் ஈடுபட்ட சாத்வீகச் சத்தியாக்கிரகிகளைக் கைது செய்யாமல் கடூரமாய் அடித்துக் காயப்படுத்தும்படி போலீஸ்காரர்களை ஏவிவிடுவது, சட்ட நியாயத்துக்கும், தர்மத்துக்கும் சரியானதாகத் தாரன் துரையால் வகுக்கப்பட்டதாயிற்று.

## தடியடி தர்பார் தாரன்

1930-ல் இந்தியா எங்கிலும் காங்கிரசை அடிக்கப் பிரிட்டிஷ் சர்க்கார் கைக்கொண்ட ஆயுதமான கனத்தடியைக் கண்டுபிடித்தது தாரன் துரையே. சிலர் இந்தக் கௌரவம் தாரன் துரையிடம் வேலை பார்த்த இந்திய அதிகாரி ஒருவருக்கே சேருமென்பர். அதனை நம்ப என்மனம் இடந்தரவில்லை. அது எப்படி இருந்தாலும், அதன் பூராக் கௌரவத்தையும் தாரன் துரைக்கே தர ஆசைப்படுகிறேன்.

தென்னாப்பிரிக்காவில் காந்திஜி சத்தியாக்கிரகம் நடத்தியபோது எதைப் பிரயோகித்துப் பார்க்க மார்ஷல் ஜான் ஸ்மட்ஸ் மனங் கூசினாரோ, அதனைச் சத்தியாக்கிரகிகள் மீது பொதுவாகவே எடுத்தாளும்படி இந்தியா சர்க்காருக்கு வழி காட்டியவர் தாரன்தான்.

முதல் ஐரோப்பிய (1914-18) யுத்தத்தையடுத்து மிருகத்தனம் உலகெங்கிலும் வளர்ந்ததுதான், இத்தகைய மனப்போக்கிற்குக் காரணமாகும். இந்த முறையே எளிதானதாகவும், சகஜமானதாகவும் பலருக்குத் தோன்றிவிட்டது.

## சின்னதொரு கதை


இந்தப் பிரபந்தத்தையொட்டிய கதையொன்றை இங்கு சொல்ல விரும்புகிறேன். ஜில்லா மாஜிஸ்திரேட் தாரன் துரையின் தலைமை ஸ்தலம் தஞ்சை நகரம். அது தென்னாட்டவர் பண்பாட்டுக்கே பிரதானமாக விளங்குவதாகும். ஜனங்களுக்குப் பயத்தை ஊட்டிச் சாமர்த்தியமாகச் சாந்தியை ஸ்தாபித்தாகிவிட்டது என்று அதிகாரிகள் நினைத்துவந்த இடம். அத்தஞ்சையின் வழியே வேதாரண்ய யாத்திரையின்போது போகவேண்டி வந்தது. தஞ்சை நகருக்கு வெளியே ஓடும் கால்வாயின் கரையிலுள்ள வீடொன்றில் அப்போதைய சத்தியாக்கிரகப் பட்டாளம் கூடாரமடித்தது. அந்த வீட்டு அம்மாளும், அவர் சகோதரரும் எங்களுக்கு இடந்தந்து அதிதி உபசாரம் செய்தனர். சத்தியாக்கிரகிகள் முகாமிலிருக்க, நான் மாத்திரம் நகரின் நிலைமை எப்படி இருக்கிறது என்று நேரில் கண்டறிந்துவர அன்று மாலை ஊருக்குள் சென்றேன். பொதுக்கூட்டத்துக்குத் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. தவிர வேறு எந்த ஏற்பாடும் அப்போது செய்யப்படாதது கண்டு என் மனம் சோர்ந்தது. மேற்கொண்டு தகவல் கொடுப்பவர் கூட எங்கிலும் எவரும் காணோம். கூட்டம் நடத்த ஒரு பெஞ்சு அல்லது நாற்காலியேனும் இரவல் தருவோர் கூட எவருமில்லை. கடைசியாக ஒரு வக்கீல் நண்பரை அணுகி ஒரு

பழைய விரிசல் மேஜை பெற்றேன். அதைத் தரக்கூட அவர் ஆயிரந் தரம் தயங்கினார். ஏதாவது வம்பு வந்தால் அந்த விரிசல் தனது அல்ல என்று பின்னால் சொல்லிவிடலாம் என்றுதானோ என்னவோ, அதனைக் கடைசியாகத் தரத் தைரியம் கொண்டார். அவர் வீட்டுத் தோட்டக்காரன் உதவியுடன் பொதுக்கூட்டம் நடைபெறுவதாக இருந்த மைதானத்தில் அதனைப் போடச் செய்தேன். அப்போது பொழுது விழும் சமயம். மைதானத்தின் பக்கம் ஓராள்கூட இல்லை. 'சரிதான், இன்றையக் கூட்டம் மோசமாகத்தானிருக்கும்' என்ற நினைப்புடன் எங்கள் பாசறைக்குத் திரும்பினேன். 'என்ன இருந்தாலும் தாரன் துரையின் தலைமைப் பீடமல்லவா? இந்த இடத்திலாவது அவருக்கு ஜெயக்கொடி வேண்டாமா? அப்படித்தான் இருக்கட்டுமே; நாமும் விட்டுக்கொடுப்போம் என்றெல்லாம் சிந்தித்த வண்ணம் நான் தங்கிய இடத்துக்கு வந்தேன்.

பொதுக் கூட்டத்துக்கு குறிப்பிட்ட நேரத்தில் சத்தியாக்கிரகிகளுடன் திரும்ப, மைதானத்துக்கு வந்தேன். அப்போது நான் கண்ட காட்சி என்ன! அம்மாபெரும் மைதானம் முழுதும் எள் விழ இடமின்றி ஏகப்பட்ட ஜனங்கள் அலைகடல் திரண்டு வந்ததுபோல குழுமியிருந்தனர். அன்று நாங்கள் இதுவரையில் கண்டறியாத பிரமாத வரவேற்பு. அதுவும் சுயமாகவே ஏற்பட்டது. சுமார் இருபதாயிரம் ஜனங்களாவது அக்கூட்டத்திலிருக்கும். அத்தனை ஜனங்களும் எவ்வித சந்தடியுமின்றி ஒழுங்காக எங்கள் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டார்கள். அம் மாபெரும் கூட்டங் கண்டு பொங்கிய மனதுடன் பிறகு நான் பேசினேன். அன்றையக் கூட்டத்தை நான் என்றென்றும் மறக்க முடியாது.

**தாரன் துரை தரிசனம்**

வேதாரணியத்தில் என்னைக் கைது செய்து தண்டனை தந்தார்கள். திருச்சி ஜெயிலுக்கு அனுப்ப என்னையொரு ரயில் வண்டியில் இட்டுச் சென்றார்கள். அன்றைய ரயில் பிரயாணத்தின்போது என்னுடன் அவ்வண்டியில் மாஜிஸ்திரேட் தாரனும் வந்து கலந்துகொண்டார். வேதாரணிய சத்தியாக்கிரக யாத்திரையின்போது அவர் போட்ட முற்றுகையை நாங்கள் அல்லும் பகலும் எதிர்த்து நின்றோமென்றாலும், அன்றுதான் அதாவது 1930ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 30ந்தேதியே தாரனை நேருக்கு நேரில் சந்தித்தது. எனக்குக் கைலாகு கொடுக்க வண்டிக்குள் நுழைந்தபோது தம் கையை நீட்டிய வண்ணம் வந்தார். உள்ளே வருவதற்கு என் சம்மதம் பெறப்



பெருந்தன்மையுடன் கையை நீட்டினார்.

''நீங்கள் தான் தாரனோ?'' என்று நான் கேட்டுவிட்டு ''ரொம்ப பயங்கரப் பேர்வழி மாதிரி இருக்கும் என்று அல்லவோ நினைத்தேன்'' என்றேன். அவரைப் பார்த்தபோது எனக்கு அவர் சாதாரண மனிதராகவே தோன்றியது. ஆள் ஆகிருதியும் பிரமாதமல்ல. என்னிடம் பிற்பாடு அவர் நடத்திய சல்லாபத்தின் போது அவர் தாமே, தம்மைச் ''சாது, சாந்தப் பேர்வழி' என்று சொல்லிக் கொண்டார். அப்படித்தான் யாவருக்கும் அவரைக் கண்டதும் நினைக்கத் தோன்றும்.

ஆனால் அந்தச் சின்னப் பேர்வழிதான் இந்தியா எங்கிலுமுள்ள போலீசாருக்குத் தடி தண்டாயுதம் கண்டு தந்தவர். அவசரச் சட்டங்களையும் கண்டு பிடித்தவர். அதற்கு முன் நம் அஹிம்சையால் சர்க்காரும் அதில் வசியப்பட்டு நின்றனர். அஹிம்சைக்கு எதிராகப் பலாத்காரத்தை உபயோகிக்கத் தனக்குள்ள சட்டரீதியான உரிமையைக் கையாளும்படிச் சர்க்காரைத் தட்டிக் கிளப்பிய முதற் பெருமை தாரன் துரைக்கே தான் உண்டு.

''இத் தேசத்தாராகிய எங்களை எதிர்த்து எங்கள் ஜனங்களையே முற்றுகைபோடச் செய்ய முயன்றீர்கள். அது ரொம்பத் துணிச்சலானது தான். ஆனால் ஒன்று; நாங்கள் எங்கள் தேசத்தில்தான் இருக்கிறோம் என்பதனை ஏனோ மறந்து போனீர்கள்'' என்று அவரை ரயில் பிரயாணத்தின் போது கேட்டேன். தாரன் முறுவலுடன், ''வாஸ்தவம்! இரண்டு பேரும்தான் அவரவர்களால் முடிந்தவரையில் பிரயாசைப்பட்டோம். நல்லதையும் கெட்டதையும் செய்து பார்க்கவும் முயன்றோம்'' என்று பதில் சொன்னார்.

பிற்பாடு எனக்குக் காப்பியும், இதர சிற்றுண்டிகளையும் கொண்டு வரும்படி தமது சிப்பந்திகளுக்கு ஆக்ஞாபித்தார். அந்த மாதிரி அவர் என்னை உபசரித்தது அண்டையிலிருந்த போலீஸ் ஜவான்களுக்கும் ரயில் சிப்பந்திகளுக்கும் வழியிலுள்ள சின்னஞ்சிறு ஸ்டேஷன்களிலிருந்த பொது ஜனங்களுக்கும் உவகை ஊட்டுவதாக இருந்தது. 'சண்டை போடுவதைக் காட்டிலும், இது எவ்வளவோ தேவலையே'' என்று அவர்கள் தம் மனத்திற்குள் சொல்லிக்கொள்வதுபோல் இருந்தது.

சாந்தமே இந்தியாவின் சுபாவம். அது சச்சரவுகளையும் கிளர்ச்சிகளையும் வெறுப்பது. ஆனால் என்ன செய்வது? சில சமயம் போராட்டம் நமக்கும் அவசியமாகிவிடுகிறது. ஆகவே நம் சம்பந்தப்பட்ட வரையிலாவது அப்போராட்டத்தை அஹிம்சா முறையிலேனும் நடத்தலாம். அது ஒன்றே தான் நாம் செய்ய முடிந்தது.

(வேதாரணியம் கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம் 1950இல் வெளியிட்ட வேதாரணியம் உப்பு சத்தியாக்கிரகச் சரித்திரம் என்ற நூலிலிருந்து)



# உலகைக் கலக்கிய உப்புப் போர்

'களர் நிலத்துப் பிறந்த
உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லில்
விழுமிதாக் கொள்வர்''

என்று உப்பின் பெருமை குறித்துக் கூறுகிறது நாலடியார்.

''ரெண்டு உப்புக் கல் இருந்தால் போதும்' அதை வச்சு, கஞ்சி குடிச்சிரலாம்'' என்று ஏழை எளிய மக்கள் திருப்தி அடைவதுண்டு.

'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்பது பழமொழி.

இப்படி உப்பு, நமது வாழ்வில் மிக மிக முக்கியமான இடம் பெற்றிருக்கிறது.

ஆங்கிலேயர்கள் இந்தியத் திருநாட்டை அடிமைப்படுத்தி ஆட்சி செய்து வந்த காலத்தில் அவர்களால் நமது பொருளாதாரம் பல வகையிலும் சுரண்டப்பட்டது. நமது நாட்டு உப்பளங்களில் உற்பத்தியாகும் உப்புக்குக் கூட அதிகமான அளவில் வரி விதித்தது ஆங்கிலேய அரசு. இதனால் உப்பு உற்பத்தியாளர்கள் சொல்லவொண்ணாத் தொல்லைக்காளானார்கள்.

மேலும், கப்பல்கள், பயணத்தின் போது ஆடாமல் இருப்பதற்காக- அவற்றின் அடிப்பகுதியில் உப்பு ஏற்றிக் கொண்டு வரப்பட்டது. ஆங்கிலேயர்கள் தமது குடியிருப்பு நாடுகளான ஏடன் முதலான இடங்களிலிருந்தும் லிவர்பூலிலிருந்தும் உப்பு ஏற்றிக் கொண்டு வருவது வாடிக்கை. அந்த உப்பை, இந்தியச் சந்தையில் விற்று வந்தனர். இந்த விற்பனை நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்ற காரணத்திற்காகவும், இந்தியாவில் உற்பத்தியாகும் உப்புக்கு அதிக அளவில் வரி விதித்து வந்தனர்.

இந்திய உப்பளங்களைச் சுற்றி 24 மணி நேரமும் அரசினரின் கெடுபிடியும் காவல்களும் இருந்தன. உப்பு, மூட்டை ஆக்கப்படும் இடங்களில் உள்ள பெரிய அதிகாரிகள் பெரும்பாலும் ஆங்கிலோ இந்தியர்களாகவே இருந்தனர்.

மக்களின் அன்றாடத் தேவையான இரண்டணா பெறுமானமுள்ள உப்பிற்கு மூன்று ரூபாய் இரண்டணா இரண்டு காசு வரிவிதிக்கப்படுவது கொடுமையான செயல் என்பதை மக்களுக்கு எடுத்துக்காண்பிப்பதற்காகவும், இனிமேல் இந்தியாவில் இது போன்ற வரிவிதிப்பின் மூலம் மக்களைச் சுரண்ட முடியாது என்று ஆங்கில அரசுக்கு உணர்த்துவதற்காகவும், அண்ணல் காந்தி உப்புச் சத்தியாக்கிரகத்தைத் தொடங்குவதற்குத் திட்டமிட்டார்.

1930 மார்ச் 12ஆம் நாள் உப்பு சத்தியாக்கிரகத்தைத் தொடங்கினார். சபர்மதி ஆசிரமத்திலிருந்து புறப்பட்ட அவர், 200 மைல் நடந்து சென்று, தண்டி என்ற கிராமத்தை ஏப்ரல் 5ஆம் நாளன்று அடைந்தார். 79 தொண்டர்கள் அவருடன் அணிவகுத்துச் சென்றனர்.

தாம் கைது செய்யப் பெற்றால் அப்பாஸ் தயாப்ஜி தலைமை ஏற்பார் என்றும், பின்னர் சரோஜினி நாயுடு தலைமை ஏற்பார் என்றும் காந்தியடிகள் அறிவித்தார்.

ஏப்ரல் 6 காலை 8.30 மணிக்கு அண்ணலும் தொண்டர்களும் கடற்கரையில் உப்பு எடுத்து-உப்புச் சட்டத்தை மீறினர். அப்போது காவலர்கள் எவரும் அங்கே இல்லை.

அதன் பின்னர், பத்திரிகைகளுக்கோர் அறிக்கை கொடுத்தார் காந்தியடிகள். அது வருமாறு:

''இப்போது உப்புச் சட்டத்தை மீறும் சடங்கு நடைபெற்றுவிட்டது. கைதாவதற்குத் தயாராக இருக்கும் யாரும் இப்போது தங்களுக்கு விருப்பமான இடத்தில் அல்லது சௌகரியமான இடத்தில் உப்புக் காய்ச்சலாம். உப்புச் சட்டத்தைப் பற்றிய முழு விவரங்களையும் சட்டத்தை மீறும் கிராம மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்''

தண்டி யாத்திரை திரைப்படம் எடுக்கப்பட்டது. ஆனால் அது ஆங்கில அரசினால் தடை செய்யப்பட்டது. நாடெங்கும் பரபரப்பு ஏற்பட்டது. தலைவர்கள் பலரும் நூற்றுக்கணக்கான தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர்.

''இயற்கையாகக் கிடைக்கும் உப்பு, காற்றைப் போலவும் தண்ணீரைப் போலவும் ஒரு பொதுச் சொத்தாகும்'' என்று தெரிவித்த அண்ணல், தர்ஸனா, சார்ஸடா ஆகிய இடங்களில் உள்ள உப்புக் கிடங்குகளை முற்றுகையிடப் போகும் திட்டத்தை மே 4ஆம் நாளன்று அறிவித்தார்.

ஆங்கில அரசு-1827ஆம் ஆண்டு பம்பாய்ச் சட்டத்தின் 25வது பிரிவின்கீழ் காந்தியடிகளைக் கைது செய்தது. நள்ளிரவில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த அண்ணலை எழுப்பிக் கைது செய்து ஒரு லாரியில் ஏற்றி எரவாடா சிறைக்கூடத்திற்கு அழைத்துச் சென்றது.

அண்ணல் கைது செய்யப்பெற்றதும் நாடெங்கும் எதிர்ப்புகள் கிளம்பின. உலகெங்கும் எதிரொலிகள் எழுந்தன. இந்தியா முழுதும் முழு வேலைநிறுத்தம் செய்யப்பட்டது. புகைவண்டித் தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்டனர்.

உப்புச் சத்தியாக்கிரகம் துவளாமல் தொடர்ந்தது. தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகளுடன் தொண்டாற்றிய இமாம்சாகிப் தலைமையில் 2500 பேர் தர்ஸனா உப்புக் கிடங்கை முற்றுகையிட்டனர். ஆங்கில அரசின் அடக்கு முறை காரணமாக நூற்றுக் கணக்கானவர்கள் காயமுற்றனர்.

வாடலா உப்புக் கிடங்கு பல முறை முற்றுகையிடப்பட்டது.

அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்தது.

1931 ஜனவரி 18இல் முதலாவது வட்டமேஜை மாநாடு இங்கிலாந்தில் நடைபெற்றது. அதன்பின்னர் காந்தியடிகளும் காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களும் நிபந்தனையின்றி ஜனவரி 25இல் விடுதலை செய்யப் பெற்றனர்.

மார்ச் 4ஆம் நாளன்று, வைஸ்ராய் இர்வின் -அண்ணல் காந்தி ஒப்பந்தம் நிகழ்ந்தது. அதன் விளைவாகச் சில முடிவுகள் கிடைத்தன. அவை யாவன;

வெளிநாட்டுப் பொருள்களின் மீது காட்டப்படும் எதிர்ப்பு நிறுத்தப்படும்.

சுதேசிப் பொருள்கள் வாங்கும்படி பிரச்சாரம் செய்வதற்கு அனுமதி உண்டு.

அமைதியான முறையில் மறியல் செய்வது அனுமதிக்கப்பட்டது.

சட்டங்களை மீறுவது நிறுத்தப்படவேண்டும்.

தடுப்புச் சட்டங்கள் எல்லாம் திரும்பப் பெறப்படவேண்டும்.

குற்றஞ் சாட்டப்பட்ட அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படவேண்டும்.


கடற்கரையில் வாழும் மக்கள் உப்புக் காய்ச்சுவதற்கும், விற்பதற்கும் உரிமை வழங்கப்பட்டது.



## நமது ஒற்றுமையே நமது வலிமை!

இந்தியா வலிமையாக இருந்தால்தான் ஒவ்வொரு இந்தியனும் வலிமையோடு இருக்கலாம். இந்தியாவின் பலவீனம் ஒவ்வொரு இந்தியனுக்குமே பலவீனம். இந்திய மக்களை வலிமை கொண்டவர்களாக்குவதும், நாட்டிற்கு ஒளிமயமான எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதும் எப்போதுமே நமது முயற்சியாக இருந்து வருகிறது. நமது மதிப்பும், முன்னேற்றமும் நமது வலிமையில் உள்ளன. இந்தியனாக இருப்பது என்பதற்கு இந்த நாட்டில் வசிப்பவர்கள் நாம் என்பது மட்டுமே பொருள் அல்ல. ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அற்புதமான நாகரிகத்திற்குச் சொந்தமானவர்கள் நாம் என்பது அதன் பொருள்: வேறுபட்ட பல கலாச்சாரங்களை நாம் பெற்றிருக்கிறோம். இந்து, முஸ்லீம், சீக்கியர், கிறிஸ்துவர், ஜைனர், பார்ஸி, புத்த மதத்தினர் என்று பல்வேறு மதங்களுக்கும் உரியவர்கள் நாம். பல்வேறு மொழிகளையும் நாம் பேசுகிறோம். அவை நமது சகிப்பு உணர்வால் வளர்கின்றன. எல்லா மத நம்பிக்கைகளுக்கும் நாம் சமமான மதிப்பளிக்கிறோம். நமது வலிமையும் ஒற்றுமையும் இந்த உண்மையிலிருந்தே ஊற்றெடுக்கின்றன. நமது வலு நமது ஒற்றுமையில் உள்ளது என்பதால், இது ஒன்றே நாம் கடைப்பிடிக்க வேண்டிய பாதை.

மாண்புமிகு இந்தியப் பிரதமர்
**திரு ராஜீவ் காந்தி அவர்கள்**



# மக்களைக் கவர்ந்த ராஜாஜி

**பேராசிரியர் கல்கி**

இந்திய நாட்டில் காந்தி மகானின் தலைமை ஏற்பட்டுப் பத்து ஆண்டுகள் ஆயின. 1929-ஆம் வருஷ இறுதியில் நடந்த அமிருதரசஸ் காங்கிரசில் பூரண சுதந்திரமே காங்கிரசின் இலட்சியம் என்று தீர்மானமாயிற்று. 1930ஆம் வருஷ ஆரம்பத்தில் மகாத்மா காந்தி உப்பு சத்தியாக்கிரஹ இயக்கத்தைத் தொடங்கினார். நூறு தொண்டர்கள் அடங்கிய கோஷ்டியுடன் கால் நடையாகத் தண்டி என்னும் இடத்தில் உப்புச் சத்தியாக்கிரகம் செய்யப் புறப்பட்டார். அந்தப் பிரயாணத்தின் விவரங்கள் இந்திய தேசத்திற்கே புத்துயிர் அளித்தன.

காந்திஜி காட்டிய வழியைப் பின்பற்றித் தமிழ்நாட்டிலும் ராஜாஜி வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தார். திருச்சியில் டாக்டர் டி. எஸ்.எஸ்.ராஜன் அவர்களின் இல்லத்திலிருந்து நூறு சத்தியாக்கிரகத் தொண்டர்கள் ராஜாஜியின் தலைமையில் கால்நடையாக யாத்திரை கிளம்பினார்கள்.

அந்த யாத்திரையின்போது தமிழ்நாடு என்றும் காணாத காட்சிகளைக் கண்டது.


சுமார் பதினைந்து நாட்கள் சத்தியாக்கிரகப் படையினரின் யாத்திரை நடைபெற்றது. இந்த யாத்திரையின்போதுதான் ராஜாஜியின் தமிழ்ப் பேச்சுத் திறமை முதன் முதலாக நன்கு வெளியாயிற்று. மாபெரும் பொதுஜனக் கூட்டங்களில் தமிழிலே பேசி ஜனங்களைக் குலுங்கிச் சிரிக்கும்படி செய்யவும், வாதத்துக்கு மேல் வாதமும் உதாரணத்துக்கு மேல் உதாரணமுமாகச் சொல்லி ஜனங்களின் மனத்தைக் கவரவும் ராஜாஜிக்கு ஆற்றல் உண்டு என்பது தெரிந்தது. ராஜாஜி அதுவரையில் திருச்செங்கோடு கிராமவாசிகளிடம் பேசியதைத் தவிர அவ்வளவாகத் தமிழில் பேசியதில்லை. அறிவாளிகளும் ஆங்கிலம் படித்தவர்களும் அடங்கிய கூட்டங்களிலேதான் தம்மால் பேசிச் சமாளிக்க முடியும் என்று எண்ணியிருந்தார். வேதாரணிய யாத்திரையின் போது கிராமவாசிகளும் பாமர ஜனங்களும் ரசித்துப் பரவசப் அடையும்படிப் பேச முடியும் என்பதைக் கண்டார்.

ராஜாஜியின் பிரசங்க முறை ஜனங்களின் உணர்ச்சியைத் தூண்டி அறிவை மங்கச் செய்து, மனத்தைக் கவரும் முறையல்ல. ''ஆஹா! அந்தோ தேசம் அடிமையில் ஆழ்ந்து கிடக்கிறதே! அதை நினைக்க நினைக்க என் நெஞ்சம் கரைகிறதே, கண்களிலே இரத்தக் கண்ணீர் வருகிறதே! மக்களே! எழுங்கள்! அந்நியனை விரட்டுங்கள்!'' என்றெல்லாம் அவரால் பேசமுடியாது. தம்முடைய கட்சி எதுவானாலும் அதைக் கேட்பவர்கள் அறிவினால் ஒப்புக்கொள்ளும்படியாகக் காரணங்களை அடுக்கி உதாரண ரூபத்தில் மனத்திலே பதியச் செய்வார். இவ்விதப் பேச்சினாலும் பதினாயிரக்கணக்கான பொதுமக்களின் கருத்தைக் கவரலாம் என்பது ராஜாஜியின் வேதாரணியம் யாத்திரையின்போது தெளிவாயிற்று.

தஞ்சை ஜில்லா கலெக்டர் மிஸ்டர் தாரன் துரை, ராஜாஜியின் தலைமையில் வரும் சத்தியாக்கிரகப் படைக்கு உணவளித்தல் முதலிய உதவிகளைக் கிராமவாசிகள் செய்யக்கூடாது என்று உத்தரவு போட்டார். இந்த உத்தரவு காரணமாக ராஜாஜியின் யாத்திரை பெரும் முக்கியத்தை அடைநத்து. தாரன் துரையின் உத்தரவைத் தாக்கியும் பரிகசித்தும் கண்டித்தும் ராஜாஜி செய்த பிரசங்கங்கள் ரசிகர்களான தஞ்சை ஜில்லா வாசிகளை அவருடைய பக்தர்களாகச் செய்துவிட்டன. தாரன் துரையின் உத்தரவை ஒருவரும் பொருட்படுத்தவில்லை. ராஜாஜிக்கும் அவருடைய தலைமையில் வந்த தொண்டர்களுக்கும் தஞ்சை ஜில்லாக் கிராமங்களிலே இராஜோபசாரம் நடந்தது.

யாத்திரை முடிந்து வேதாரணியத்தை அடைந்தது; ராஜாஜியைச் சட்ட மறுப்புச் செய்யமுடியாமல் தடுத்துவிடுவதென்று போலீசார் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சூழ்ச்சி பலிக்க முடியாதபடி ராஜாஜி முந்திக்கொண்டார். அதிகாலையில் போலீசார் விழித்தெழுந்து வருவதற்கு முன்னால் கடற்கரைக்குச் சென்று உப்பு எடுத்தார். போலீசாரால் கைது செய்யப்பட்டு ஒரு வருஷம் சிறைத் தண்டனையும் அடைந்தார்.

(நாட்டுக்கொரு புதல்வர்-நூலில் வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகம் பற்றி எழுதிய பகுதி).



# வேதாரணியம் யாத்திரை

'சிலம்புச் செல்வர்' டாக்டர் ம. பொ. சிவஞானம்

ராஜாஜி பஞ்சாப் படுகொலை நிகழ்ந்த நாளான ஏப்ரல் 13-இல் திருச்சியிலிருந்து வேதாரண்யத்திற்கு 100தொண்டர்களுடன் புறப்படத் தயாரானார்.

காந்தியடிகள் வரலாற்றுச் சிறப்பு மிக்க தமது தண்டி யாத்திரையைத் தொடங்கிய ஒரு திங்களுக்குப் பின், தமிழகத்தின் தளபதி ராஜாஜி வேதாரண்ய யாத்திரையைத் தொடங்கினார். ராஜாஜியின் படை புறப்படுவதற்கு முன்பே திருச்சி டி.எஸ்.எஸ். ராசன் அவர்கள் வேதாரண்யம் சென்று செய்ய வேண்டிய முன் ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத் திரும்பினார். வழி நெடுகிலும் உள்ள ஊர்களுக்குச் சென்று, ராஜாஜியின் படை வருங்கால் அது தங்கி இளைப்பாற வேண்டிய இடங்களைத் திரு ராசன் தேர்ந்தெடுத்தார். வேதாரண்ய வாசியான திரு வேதரத்தினம் பிள்ளை ஸ்தலத்தில் ஆக வேண்டிய காரியங்களுக்குப் பொறுப்பேற்றார். ராஜாஜியின் படை புறப்படுவதற்கு முதல் நாளே தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து காங்கிரஸ் பிரமுகர்களும் ஊழியர்களும் உப்புச் சத்தியாக்கிரகப் படையை வழியனுப்பி வைப்பதற்கென்று திருச்சியில் வந்து குழுமிவிட்டனர்.

1930 ஏப்ரல் 13; இந்த நாள் இந்திய தேசத்தோடும் தமிழர் வாழ்வோடும் உறவு கொண்ட நாளாகும். இந்த நாளிலேதான் தமிழருக்குப் புத்தாண்டு பிறக்கிறது. இந்த நாளிலேதான் பஞ்சாப் மாநிலத்தின் ஜாலியன்வாலாபாக்கில் கொடுங்கோலன் ஓட்வியரும், ஜெனரல் டயரும் கூட்டுச்சேர்ந்து ஒரு பொதுக் கூட்டத்தில் திரண்டிருந்த மக்கள் மீது பீரங்கிப் பிரயோகம் செய்தனர்.

தேசியத்திலிருந்து தமிழையோ, தமிழிலிருந்து தேசியத்தையோ பிரிக்க முடியாது என்பதற்கு ஏப்ரல் 13 சிறந்த சான்றாகும். இந்த நன்னாளில் படை நடத்திச் செல்ல ராஜாஜி தீர்மானித்தது தமிழுக்கும் தேசியத்திற்கும் உள்ள உறவைக் காப்பதில் அவருக்கிருந்த உறுதியைக் காட்டுவதாகும்.

ராஜாஜியின் படையில் சேர்ந்து கொள்ளத் தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலிருந்தும் தேச பக்தர்கள் போட்டி போட்டுக்கொண்டு முன் வந்தனர். அவர்களிலே தகுதி பார்த்து 98 பேரைத்தான் ராஜாஜி தேர்ந்தெடுத்தார். மாவட்ட வாரி சத்தியாக்கிரகிகளின் எண்ணிக்கை வருமாறு:

மதுரை 24, சென்னை 11, திருச்சி 6, வடார்க்காடு 1, தஞ்சை 7, கோவை 4, திருநெல்வேலி15, இராமநாதபுரம் 12, சேலம் 9, பம்பாய்(தமிழர்) 9.

**படை நடந்தது**

இந்த 98 பேரும் ஏப்ரல் 12-ஆம் தேதியன்று இரவே திருச்சி டாக்டர் தி.சோ.சௌ. ராசன் இல்லத்தில் குழுமி விட்டனர். ஏப்ரல் 13-ம் தேதியன்று அதிகாலை 5 மணிக்கு டாக்டர் ராசன் இல்லத்திலிருந்து ராஜாஜியின் தலைமையில் உப்பு சத்தியாக்கிரகப் படை புறப்பட்டது.

ராஜாஜியின் விசாலமான நெற்றியிலே டாக்டர் ராசன் மகள் திலகமிட்டு வழியனுப்பி வைத்தார்.

முன்னே தேசியக் கொடி செல்ல, தளபதி ராஜாஜி தமது வலது காலை முன் வைத்து வேதாரண்ய உப்பளத்தை நோக்கி நடைபோடத் தொடங்கினார். அப்போது அவருக்கு வயது 51.

தேர்ந்தெடுக்கப்பட்ட 98 சத்தியாக்கிரகிகளும் வரிசைக்கு இருவராக 49 வரிசையாக அணிவகுத்து நடைபோட்டனர். காந்தியடிகளுக்கு மிகவும் பிடித்தமான ''ரகுபதி ராகவ ராஜாராம்'' என்ற குஜராத்திப் பாடலைப் பாடினர். ஆம்; பிரார்த்தனைப் பாடலாக! அனைத்து மதங்களின் தெய்வங்களையும் வழிபடும் சர்வ சமய கீதமாக !

குழுமியிருந்த மக்களெல்லாம் ''மகாத்மா காந்திஜிக்கு ஜே!'', ''ராஜாஜிக்கு ஜே!, ராஷ்ட்ரீய ஜண்டேக்கு ஜே!, ''உப்பு சத்தியாக்கிரகிகளுக்கு ஜே!'' என்று ஜெய கோஷம் எழுப்பிச் சத்தியாக்கிரகப் படையை வழியனுப்பி வைத்தனர். அந்த நாளிலே 'ஜே'' என்று சொல்வதுதான் வழக்கம்.

தரைப்படை, கடற்படை, விமானப் படைகளையும் பெற்றுள்ள பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை வீழ்த்தி வெற்றி காணப் புறப்பட்டது தமிழினத்தாரின் உப்புச் சத்தியாக்கிரகப் படை! ராஜாஜியின் படைக்கு முன்னே வெற்றிச்சங்கு முழங்கியது. முரசு ஒலித்தது! வாழ்த்தொலி எழுந்தது.

## உப்புச் சத்தியாக்கிரகம் பற்றி...



புழுதி நிரம்பிய குஜராத் சாலையில் அதோ அவர் நடந்து செல்கிறார்....அவருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள தடைகள் ஏராளம். ஆனால் அவருடைய உள்ளத்து உறுதி, கனல் போல எரிகிறது. இந்த மகாத்மாவின் மந்திர சக்தியால் கவரப்படாதவர் எவர்? உணர்ச்சியற்ற சாமானிய மனிதர்களைக் கூட அவருடைய தீவனுள்ள ஈர்ப்புச் சக்தி கவர்ந்துவிடும்.

—ஆசிய ஜோதி பண்டிதநேரு

### வார்தா முனிவர் சீடரின் வருணனை

காந்திஜியின் சீடரான திரு ஜி. இராமச்சந்திரன், ராஜாஜியின் படை சென்ற காட்சியை வருணிக்கிறார். கேட்போம்:

''திருச்சியிலிருந்து ராஜாஜியின் படை சென்ற காட்சி, படையெடுப்பு ராணுவமோ அல்லது யாத்திரை செல்லும் துறவியர் கூட்டமோ என்று ஐயுறத்தக்க வகையில் தோற்றமளித்தது. அதன் தளபதி ஒடிந்து மெலிந்த யோகி போல் காட்சியளித்தார். தவசியைப்போலவே தம கரத்தில் தடி பிடித்துக் கிளம்பினார் . அதைத் தவிர வேறு ஆயுதம் அவரிடம் இல்லை.

''தமிழ்நாட்டின் முடிசூடா மன்னரான ராஜாஜிக்கும் அவரது 98 சீடர்களுக்கும் வழிநெடுக மக்கள் செய்த உபசாரம் சொல்லுந்தரமன்று.

''இந்த பைராகிகளின் நேம நிஷ்டை ரொம்பவும்கடுமையானது. புத்தபிரான் தாம் தேசாந்திரம் போனபோது தம் சிஷ்யர்களுக்கு இப்படித்தான் கடும் விதி முறைகளை வகுத்தாராம். எந்தத் தொண்டரும் தனக்கெனப் பிரத்யேகமான சலுகையோ, உபசாரமோ தேடக் கூடாது. அப்படி யாரேனும் அளித்தாலும் பெறவும் கூடாது. எதுவும் எல்லோருக்கும் பொதுவாக இருக்க வேண்டும். யாரும் புகை பிடிக்கக்கூடாது. காப்பி, தேத் தண்ணீர் அருந்தவும் வெளிக் கிளம்பக் கூடாது. சுகாதார விதிகளைக் கவனமாகக் கடைப்பிடிக்க வேண்டும். போகும் வழியிலுள்ள கிராமங்களைச் சுத்தி செய்வதும் தொண்டர்களின்பொறுப்பு''

### நாமக்கல் கவிஞரின் பாடல்

பாரதியார் புனைந்த 'அச்சமில்லை' என்னும் தலைப்பைக் கொண்ட பாடலைச் சத்தியாகிரகிகள் பாடிச் சென்றனர். அது பழம் பாட்டு. அதற்கு, பண்டாரப் பாட்டு என்று பாரதியாரே தலைப்புத் தந்துவிட்டார். அதனால், புதிதாகப் புனைந்த போர்ப்பாட்டு தேவைப்பட்டது. உப்புச் சத்தியாக்கிரகப் படைக்கு! அதனை,நாமக்கல் கவிஞர் புனைந்து கொடுத்தார். இதோ அந்தப் பாடல்!

''கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது
சத்தி யத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர்!''

நாமக்கல் கவிஞர், முன்பே தேசியப் பாடல்கள் சிலவற்றை இயற்றியிருந்தாரென்றாலும், ''கத்தியின்றி ரத்தமின்றி, யுத்தமொன்று வருகுது'' என்ற பாடலின் வாயிலாகத் தான் தமிழக மக்களுக்கு அவர் நன்கு அறிமுகமானார். சத்தியாக்கிரகத் தொண்டர் படையுடன் சேர்ந்து ராஜாஜியே இந்தப் பாடலைப் பாடிக்கொண்டு நடைபோட்டாரென்றால், அதன் பெருமைக்கு வேறு சான்றும் வேண்டுமோ?

### தாரன் போட்ட தடையுத்தரவு

உப்புச் சத்தியாக்கிரகம் தொடங்கியபோது திரு ஏ.ஜே.தாரன் என்ற ஆங்கிலேயர் தஞ்சை மாவட்டத்தின் ஆட்சியாளராக இருந்தார். அந்தக் 'கனவான்' தம்மையே மாநில ஆளுநராகவும் இந்திய வைசிராயாகவும் எண்ணிக் கொண்டவர் போல, இந்தியாவில் வேறெங்கினும் கடைப்பிடிக்காத அடக்குமுறை நடவடிக்கைகளை அமல்படுத்தலானார்.

இ.பி.கோ. 159-வது பிரிவின்படி கலெக்டர் தாரன் தஞ்சை மாவட்டம் முழுவதிலும் தடை உத்தரவு பிறப்பித்தார். சத்தியாக்கிரகப் படையினரை வரவேற்பதோ, உபசரிப்பதோ, விருந்தளிப்பதோ, வேறு வகையில் உதவிகள் புரிவதோ கடுமையான தண்டனைக்குரிய குற்றங்களாகும் என்று கலெக்டரின்ஆணை கூறியது. சத்தியாக்கிரகப் படை புறப்படுவதற்கு முன்பே தாரனின் இந்த ஆணை பிறந்துவிட்டது. தாரனுக்குக் கீழிருந்த குட்டி அதிகாரிகள் தங்கள் தலைவனின் ஆணையை அச்சுப் பிரசுரங்களாக வெளியிட்டு விநியோகித்தும், தண்டோரா மூலமும் தஞ்சை மாவட்ட மக்களுக்கு அறிவித்தனர். இதனால், மாவட்டம் முழுவதிலும் பீதி நிலவியது! பழுத்த தேசபக்தர்கள்கூட ராஜாஜி உள்ளிட்ட சத்தியாக்கிரகப் படையினரை வரவேற்க உபசரிப்பதற்குப் பயந்தனர். ஆனால், இந்தப் பீதி, படை புறப்படும்வரைதான் இருந்தது.

### வழி நெடுக விருந்துபசாரம்!

ஏப்ரல் 13இல் படை புறப்பட்டு கிராமம் கிராமமாகச் செல்லத் தொடங்கியதும் கலெக்டர் தாரனுடைய ஆணையால் பிறந்த அச்சம் அகன்று விட்டது. சத்தியாக்கிரகிகள் கிளப்பிய போர் முழக்கங்கள் தஞ்சை மாவட்ட மக்களின் நெஞ்சங்களில் பதிந்தன. ராஜாஜியின் திருமுகத்தைக் கண்டதும் பயம் பறந்தோடி விட்டது. ஒவ்வொரு ஊரிலும் மங்கலத் தோரணங்கள் கட்டி, வேட்டுகள் வெடித்து மக்கள் வரவேற்றனர். தாய்மார்கள் பூரண கும்பம் எடுத்தனர். தங்கள் தளபதிக்கும் படை வீரர்களுக்கும் திருஷ்டி கழித்தனர். குளிர் பானங்களும், பண்டங்களும் வழங்கினர். பல ஊர்களிலே பகல் நேரத்திலும் இரவு நேரத்திலும் பெரிய அளவில் விருந்துகளும் நடைபெற்றன.

இரகசியப் போலீசார் ஊர்ப் பிரமுகர்களைப் பயமுறுத்தியும் பலன்

கிடைக்கவில்லை. தஞ்சையிலும் குடந்தையிலும் பல்லாயிரக்கணக்கில் தமிழர் கூடினர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எதிரிகளான சத்தியாக்கிரகப் படையினரை வரவேற்றுப் பொதுக்கூட்டங்களிலே ராஜாஜி சொற்பொழிவாற்றினார். திருவண்ணாமலை என். அண்ணாமலைப் பிள்ளை, திருச்சி டி.எஸ். எஸ். ராஜன், பண்ருட்டி எஸ்.ஏ. தேவநாயகய்யா, மதுரை ஏ.வைத்தியநாத ஐயர், பிரபல எழுத்தாளர் வ.ரா. ஆகியோர் பொதுக் கூட்டங்களிலே சத்தியாக்கிரகப் படையினருக்கு மக்களுடைய ஆதரவைத் திரட்டித் தரும் வகையில் சொற்பொழிவாற்றினர்.

சத்தியாக்கிரகப் படையினர் சென்ற வழியில் சிற்சில ஊர்களில் போலீசாரின் அடக்குமுறைக் கொடுமைகளையும் அவர்கள் அனுபவிக்க வேண்டியிருந்தது. ஊர்ப் பிரமுகர்களில் சிலர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுதலை செய்யப் பெற்றனர். குடந்தையில்தமிழரிலே பிரிட்டிஷ் விசுவாசிகளாக இருந்தவர்கள் ராஜாஜி பேசுகையில் கேள்விகள் கேட்டும் கூச்சல் எழுப்பியும் தொல்லை கொடுத்தனர். "சுயராஜ்யம் என்பது பிராமணர் ராஜ்யம்தான்'' என்று கூறும் பிரசுரங்களை அச்சடித்து, அவற்றைச் சத்தியாக்கிரகப் படையினர் நடத்திய கூட்டங்களிலே வழங்கினார். இவற்றையெல்லாம் வெற்றிகரமாகச் சமாளித்து ஏகாதிபத்திய எதிர்ப்புப் படையினர் தங்குதடையின்றி நடைபோட்டனர். தாங்கள் தங்கிய கிராமங்களிலும் நகரங்களிலும் தீண்டாமையை விலக்கக் கோரியும், மதுப் பழக்கத்தைக் கைவிடுமாறு வேண்டிக் கொண்டும் பிரசாரம் செய்தனர். அரிசன மக்கள் வாழும் சேரிகளிலே சுகாதாரத் தொண்டும் புரிந்தனர். பலவிடங்களிலே அந்நியத் துணிகளை மலையெனக் குவித்துத் தீ வைத்துக் கொளுத்தினர். இந்தச் சட்ட விரோதமான பணியில் தளபதி ராஜாஜியும் பங்கு கொண்டார்.

**வேதாரணியத்தில் வரவேற்பு**

சரியாக 16 நாட்கள் யாத்திரை செய்த பின்னர் ஏப்ரல் 28ஆம் தேதியன்று தளபதியும் சத்தியாக்கிரகப் படையினரும் ''குருஷேத்திரப் பூமி'' யான வேதாரண்யத்தை அடைந்தனர். அங்கு முன்னரே பல்லாயிரக் கணக்கான மக்கள் சத்தியாக்கிரகப் படையினரை எதிர்பார்த்துக் காத்திருந்து, அவர்களைக் கண்ணுற்றதும் வாழ்த்தொலியெழுப்பி வரவேற்று ஆரவாரித்தனர். அவர்களிலே என். அண்ணாமலைப் பிள்ளை, வேதரத்தினம் பிள்ளை ஆகியோருமிருந்தனர். ஏப்ரல் 29ஆம் தேதியன்று ராஜாஜியும், அவருடன் சென்ற ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர் வீரர்களும் முழுநாள் உண்ணா நோன்பைக் கடைப்பிடித்தனர். மறுநாள் தொடங்கவிருக்கும் போரிலே வெற்றி கிடைப்பதற்கு இறையருளைப் பிரார்த்திப்பதே இந்த ஒரு நாள் உண்ணா நோன்பின் குறிக்கோளாகும்.

ஏப்ரல் 30ஆம் தேதியன்று 16 சத்தியாகிரகிகளுடன் ராஜாஜி அகஸ்தியம்பள்ளியிலுள்ள உப்பளத்தை அடைந்து, சட்டத்தை மீறி உப்பை அள்ளினார். சத்தியாக்கிரகிகளும் உப்பை அள்ளிச் சட்டத்தை மீறினர்.

தயாராகக் காத்திருந்த போலீஸ் அதிகாரிகள் ராஜாஜியை மட்டும் கைது செய்தனர். சட்டத்தை மீறிய மற்ற சத்தியாக்கிரகிகளைக் கைது செய்யவில்லை. போலீஸ் சூப்பிரண்டெண்ட் தமது காரிலேயே ராஜாஜியை அழைத்துச்சென்று மன்னார்குடி சப்டிவிசனல் மாஜிஸ்திரேட் முன்பு ஆஜர் செய்தார்.

ராஜாஜி மீது உப்பு வரிச் சட்டம் 74-ஆவது பிரிவின்படியும், இ.பி.கோ.146 ஆவது பிரிவின்படியும் இரண்டு குற்றங்கள் சாட்டப்பட்டன. எதிர் வழக்காடவும் வாக்குமூலம் கொடுக்கவும் ராஜாஜிமறுத்துவிட்டார். மாஜிஸ்திரேட், உப்பு வரிச் சட்டத்தை மீறியதற்காக 200 ரூபாய் அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் மூன்று மாத வெறுங்காவல் சிறைத் தண்டனையும் விதித்தார். அடுத்து, இ.பி.கோ. 146-வது பிரிவுக்கான குற்றத்திற்காக ஆறு மாத வெறுங் காவல் தண்டனை விதித்தார். இந்த இரு தண்டனைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டுமென்றும் கூறினார்.

வேதாரண்யத்தில் தொடர்ந்து ஒரு மாதக் காலம் நாள்தோறும் அரசாங்க உப்பளத்தில் பிரவேசித்து உப்பை அள்ளும் சட்டமறுப்பில் சத்தியாக்கிரகிகள் ஈடுபட்டனர். ராஜாஜிக்குப் பின் அடுத்தடுத்து பிரமுகர்பலர் தளபதிப் பொறுப்பை ஏற்றுச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு, ஒருவர் பின் ஒருவராகக் கைதாகி சிறைத்தண்டனை பெற்றனர். வரிசைக் கிரமப்படி அவர்களுடைய பெயர்கள் வருமாறு: திரு க. சந்தானம், திரு மட்டப்பாறை வேங்கடராம ஐயர், திரு கே.சுப்பிரமணிய ஐயர், திரு ஜி.ராமச்சந்திரன், இவர்களில் முதலிருவருக்கு தலா 6 மாதச் சிறைத் தண்டனையும், அடுத்த இருவருக்கும் தலா ஒரு வருடச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டன.

கடைசித் தளபதியான திரு ஜி. இராமச்சந்திரன் கைதானதையடுத்து, சத்தியாக்கிரக முகாமிலிருந்து அவ்வளவு சத்தியாக்கிரகிகளையும் ஒருமிக்கக் கைது செய்து, அவர்கள் மீது வழக்குகள் தொடுத்து அவர்கள் அனைவரையும் அரசு சிறையில் தள்ளியது. சத்தியாக்கிரகிகளுக்கென அமைக்கப்பட்ட முகாமையும் பிய்த்தெறிந்தது.

வேதாரண்யத்தில் சத்தியாக்கிரகம் நடைபெற்ற நாட்களிலே ராஜாஜியுடன் சென்ற 98 சத்தியாக்கிரகிகளே யன்றி, மற்றும் ஏராளமானவர்கள் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வேதாரண்யத்தை வந்தடைந்து உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறை புகுந்தனர். இவர்களில் 10 மாதத் தண்டனை பெற்ற திரு ஏ.என். சிவராமனும் ஒருவராவார்.

வேதாரண்யத்தில் உப்புச் சத்தியாக்கிரகம் நடைபெற்ற நாட்களிலே அங்கு மாலை நேரத்தில் 144 தடையை மீறி நடைபெற்ற பொதுக் கூட்டங்களிலே பேசியதற்காகவும், சத்தியாக்கிரகிகளுக்குப் பல வகையிலும் உதவி புரிந்ததற்காகவும் மதுரை வைத்தியநாத ஐயர், என்.அண்ணாமலைப்பிள்ளை, சென்னை என்.எஸ்.வரதாச்சாரி, பிரபல எழுத்தாளர் வ.ரா, வேதாரண்யம் வேதரத்தினம் பிள்ளை ஆகியோர் மீது வழக்குத்தொடுக்கப்பட்டது. மாஜிஸ்திரேட் இவர்களனைவருக்கும் தலைக்கு 6 மாதச் சிறைத் தண்டனை விதித்தார். திருமதி ருக்மணி லட்சுமிபதி, திரு அரிஹர சர்மா, திருச்சி டாக்டர் டி.எஸ்.எஸ். இராசன் ஆகியோருக்கு மட்டும் ஒரு வருடத் தண்டனை விதிக்கப்பட்டது. சரியாக ஒன்றரை மாதக்காலம் நடைபெற்று மே 29இல் வேதாரண்யத்தில் சத்தியாக்கிரகம் முடிவடைந்தது.

('விடுதலைப்போரில் தமிழகம்' என்ற நூலிலிருந்து)

**உப்புச் சத்தியாக்கிரகம் பற்றி...**

**காந்தியடிகளின் இந்தப் படைபெடுப்பு நெப்போலியனின் படைபெடுப்பை நினைவூட்டுகிறது.**

**—சுபாஷ் சந்திரபோஸ்**

# ஒப்பில்லாத உப்புப் போர்!

ஒப்பில்லாத உப்புப் போரை, 1930 மார்ச் 12ஆம் நாள் மகாத்மா காந்தி, ஆமதாபாத்திலுள்ள சபர்மதி ஆசிரமத்தில் தொடங்கினார். உப்பு சத்தியாக்கிரகத் தண்டி யாத்திரை என்று வரலாற்றில் அது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுவிட்டது.

தேசப்பிதா காந்தியடிகள் தேசியக் காங்கிரஸ் தொண்டர்கள் 78 பேர் பின் தொடர, இந்தத் தண்டி யாத்திரையை மேற்கொண்டார்.

தியாகத்திற்குத் தயாராகுமாறு மக்களைத் தட்டியெழுப்பவே இந்தப் போராட்டம். இதில் பெண்கள் பங்கு கொண்டால், போராட்டம் கட்டுக்கடங்காமல் போகலாம் என்றும், அந்நிய ஆட்சியாளரின் அடக்குமுறைகளுக்குப் பெண்கள் ஆளாகக்கூடும் என்றும் மகாத்மா காந்தி கருதியதால், போராட்டத்தில் பெண்கள் பங்கு கொள்ள அவர் சம்மதிக்கவில்லை.

சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டி சென்று சேரும்வரை அவர் தமது வழிப்பயணம் நெடுகிலும் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான பாமர மக்களிடையே பேசினார். பக்தியோடும் பரவசத்தோடும் அவரது பேச்சைக் கேட்ட மக்கள் வீராவேசம் கொண்டனர். விடுதலைக்கான என்ன விலைகொடுக்கவும் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டனர்.

காந்தியடிகள் 24 நாட்கள் நடந்து 241 மைல் தூரத்தைக் கடந்து 1930 ஏப்ரல் 5ஆம் நாள் தண்டியை அடைந்தார். அடுத்தநாள் காலை சுமார் 2,000 பேருடன் கடலில் குளித்து, தண்டியில் பூத்துச் சிரித்த இயற்கை உப்பைத் தமது புனிதக் கரத்தால் அள்ளி, உப்புச் சட்டத்தை உடைத்தெறிந்தார் உத்தமர் காந்திஜி.

உப்புச் சட்டத்தை மீறியதற்காகக் காந்தியடிகளை அரசு கைது செய்யவில்லை. ஆனால், நாடெங்கும் காங்கிரஸ் தொண்டர்கள் பல்லாயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டனர்; காட்டுமிராண்டித்தனமாக அடித்துத் துன்புறுத்தப்பட்டனர்.

1930 ஜனவரி 26 லாகூர் காங்கிரஸ் பூரண சுயராஜ்யத்தைப் பிரகடனம் செய்தது. நாடெங்கும் மக்கள் விழாக்கள் எடுத்து, தியாக வேள்விக்குத் தங்களது தயார் நிலையைப் புலப்படுத்தினர். 1930 பிப்ரவரியில் கூடிய அனைத்திந்தியக் காங்கிரஸ் செயற்குழு, சட்ட மறுப்பு இயக்கத்திற்குத் தலைமையேற்று நடத்த, காந்திஜிக்கு அங்கீகாரம் அளித்தது. அதனையொட்டி அடிகள் தேர்ந்தெடுத்த அறப்போராட்ட உத்திதான் உப்புப் போர்.



பஞ்சுப் பொதியில் விழுந்த நெருப்புப்போல், இந்தப்போராட்ட உணர்வு நாடு முழுதும் பற்றிக் கொண்டது. உப்புச் சட்டத்தை மீற ஒவ்வொருவரும் கொதித்தெழுந்தனர். நகரமாயினும் கிராமமாயினும் எங்கணும் மக்களின் எழுச்சியைக் காண முடிந்தது.

தமிழகத்தில் இந்த இயக்கத்திற்குத் தலைமையேற்றார் மூதறிஞர் இராஜாஜி. திருச்சியிலிருந்து வேதாரணியத்திற்குப் பாதயாத்திரை செய்யத் திட்டமிட்டார். இதற்காக அவர் சுமார்100 தொண்டர்களைத் திரட்டினார்.

இந்தத் தொண்டர்களுக்குச் சில தகுதிகளை விதித்தார் இராஜாஜி. போராட்டத் துடிப்பு மட்டும் இருந்தால்போதாது; உடல்நலனைப் பேணுகிறவர்களாகவும், நல்ல பழக்க வழக்கங்களைக்கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். திருவாளர்கள் கே. சந்தானம், ஏ.என் சிவராமன், ஜி. இராமச்சந்திரன் போன்ற சிறந்த தேசபக்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமிழ்நாட்டில் இராஜாஜி சுற்றுப் பயணம் செய்து, உப்புப் போராட்டத்திற்குத் தக்கதொரு கடற்கரைப் பகுதியைத் தேர்ந்தெடுத்தார். வேதாரணிய உப்பளப்பகுதி அவருக்குப் பொருத்தமானதாகப் பட்டது. அங்கு முகாமிட்டுப் போராட்டத்தை நடத்த முடிவு செய்து, அந்த முகாமில் நிர்வாகத்தைக் கவனிக்கும் பொறுப்பை, சர்தார் வேதரத்தினத்திடம் ஒப்படைத்தார்.

வடக்கே மகாத்மாவின் தண்டி யாத்திரை என்றால், தெற்கே ராஜாஜியின் வேதாரணிய யாத்திரை என்று சொல்லும் அளவிற்கு அது முக்கியத்துவம் பெற்றுவிட்டது. 52 வயதான இராஜாஜி உடல்நலம் குன்றியிருந்தபோதிலும், உறுதி தளரா மனப்பான்மையைக் காட்டி களைப்பின் சுவடுகூடத் தெரியாமல் போராட்டத்தில் முன் நின்றார். குழுவினர் மூன்று வாரம் நடந்து வேதாரணியத்தை அடைந்தனர்.

வழியெங்கும் இக்குழுவினருக்கு மக்கள் வரவேற்பளித்து வாழ்த்திப் போற்றினர். வேதாரணியக் கடற்கரையில் இராஜாஜி உப்பை அள்ளியதும் கைது செய்யப்பட்டார். தொண்டர்கள் காவலர்களால் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டனர். ஒரு தொண்டர் தன் கையில் இருந்த உப்பைக் கீழே கொட்ட மறுத்தார். அவரது கைவிரல்கள் கூழாகிப் போகும் வரை தடியடி நடத்தப்பட்டது.

58 ஆண்டுகளுக்கு முன்மகாத்மா சென்ற தண்டி யாத்திரையைஇன்று நம் இளைஞர்களுக்கு நினைவூட்டி, அவர்களை எழுச்சி கொள்ளச் செய்ய, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி வரலாற்றுப் புகழ்மிக்க இந்தத் தண்டி யாத்திரையை, காந்தியடிகள் தொடங்கிய இடத்திலிருந்தே தொடங்கி வைத்தார்.

சுதந்திரத்திற்கு வித்திட்ட புரட்சிப் பயணம் அது. அதனை மீண்டும் நடத்திக் காட்டுவதன் மூலம், சுதந்திரப் போராட்டக் கால உணர்வுகளை இளைஞர்களிடையே ஊட்ட முடியும். 1988 மார்ச் 12இல் பிரதமர் தொடங்கி வைத்த இரண்டாவது தண்டி யாத்திரை இதில் வெற்றி பெற்றுவிட்டது.

அன்றைக்குப் போராட்டவீரர்கள் 'விடுதலை! விடுதலை' என்று முழக்கமிட்டுச் சென்றார்கள். இன்றைக்கு வீர இளைஞர்கள் 'ஒற்றுமை! ஒற்றுமை' என்று ஓங்கிக் குரல் கொடுத்துச் சென்றார்கள்.

**மு. முத்துக்காளத்தி**



# வேதாரணியத்தில் வீரப் போர்

ஸ்ரீ சி. ராஜகோபாலாச்சாரியார் இந்தச் சமயத்தில் சென்னை அரசியலில் முன்னணித் தலைவராக இருந்தார். காந்திஜியின் வலது கரம்போல் விளங்கி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவியையும் அடைந்தார். உப்புச் சத்தியாக்கிரகத்துக்கு அவர் வேதாரணியத்தைத் தேர்ந்தெடுத்தார். 1930 மார்ச் 12-இல் காந்திஜி, சரித்திரப் பிரசித்தி பெற்ற தண்டி யாத்திரையை மேற்கொண்டபோது, இவர் நிதியும் தொண்டர்களும் வேண்டி வேண்டுகோள் விடுத்தார். தமிழ்நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து வேதாரணியத்துக்கு சத்தியாக்கிரகிகள் படை செல்லச் செய்வதற்காக அநேக பொதுக் கூட்டங்களில் பேசினார். நிதிகள் வந்து குவிந்தன. அவர் விரும்பிய தரம் வாய்ந்த சத்தியாக்கிரகிகளும் எல்லா மாவட்டங்களிலிருந்தும் வந்து குவிந்தனர். பின்னர் ஸ்ரீ.சி.ராஜகோபாலாச்சாரியார் திருச்சியிலிருந்து வேதாரணியம் வரை யாத்திரைப் பாதையில் வசதியான தங்குமிடங்களில் தொண்டர்களுக்கு இட வசதி, சப்ளைகளை ஏற்பாடு செய்வதற்காகவும், மக்கள் அனுதாபத்தைப் பெறவும், ஒரு முன்னணிக் கோஷ்டியை அனுப்பிவைத்தார். இதிலும், இயக்கம் சம்பந்தப்பட்ட இதர எல்லாப் பணிகளிலும் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன், ஸ்ரீமதி லட்சுமிபதி ஆகியோர் அவருக்கு உற்ற துணைவர்களாக இருந்தனர்.

**தொண்டர்கள் யாத்திரை**

இயக்கம் பற்றிய தகவலைக் கேள்விப்பட்டவுடனே தஞ்சை மாவட்ட அதிகாரிகள் பாடு பெரும் சங்கடத்துக்குள்ளாகியது. நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்பதுபற்றி அரசாங்கம் அவர்களுக்கு உத்தரவு ஏதும் அனுப்பவில்லை. மாறாக, ஸ்ரீ. சி. ராஜகோபாலச்சாரியாரை, உப்புச் சட்டத்தை கிரியாம்சையில் மீறாத வரை, கைது செய்யக்கூடாது என்று உத்தாவு பிறப்பித்திருந்தனர். ஆனாலும் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீ ஏ. ஜே. தார்ன் சத்தியாக்கிரகிகள் படையின் யாத்திரையைத் தடை செய்ய முற்படாவிட்டாலும், அதற்கு இடையூறுகளை ஏற்படுத்த முயன்றார். யாராவது, தொண்டர் படைக்கு இடவசதியோ, உணவு முதலியவைகளோ அளித்தால், அவர்கள் மீது 'இ.பி.கோ. 157' பிரிவுப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தும்கூட, திருச்சியிலிருந்து உப்புச் சத்தியாக்கிரகப் போராட்ட வீரர் யாத்திரை, நிர்ணயிக்கப்பட்ட தேதியான 1930 ஏப்ரல் 13-இல் ஆரம்பமாகியது.



ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் பொறுக்கி எடுக்கப்பட்ட 99 உப்புச் சத்தியாக்கிரகிகளுடன் கோயிலடிக்கு வந்தபோது, பிரபலமான அந்த ஊர் சத்திரம் மூடித் தாளிடப்பட்டு இருந்தது. ஆனால், அதனால் அவர் சோர்ந்து விடவில்லை. தனிப்பட்டவர் ஒருவர் வீட்டில் அவர் தங்கினார். இதர சத்தியாக்கிரகிகள் நதிப்படுகையில் இரவைக் கழித்தனர்.

ஸ்ரீ தார்னின் உபாயங்கள் வெற்றியடைந்த இடம் இது ஒன்றுதான். பின்னர் திருவையாறு, தஞ்சை, குடந்தை ஆகிய இடங்களில் ஸ்ரீ. சி.ராஜகோபாலாச்சாரியாரும் அவரது கோஷ்டியினரும் நன்கு வரவேற்கப்பட்டனர். குடந்தையிலிருந்து, கோஷ்டியினர் மார்ச் 28-இல் வேதாரணியம் அடைந்த வரை அவர்களுக்குக் குதூகல வரவேற்பு அளிக்கப்பட்டது. படை நடத்திச் செல்லப்பட்ட நேர்த்தி கண்டு தார்னே வியந்தார். ஸ்ரீ. சி. ரர்ஜகோபாலாச்சாரியார் மிக ஒழுங்கான கட்டுப்பாடான முறையில், தொண்டர் படையை நடத்தி வருவதாகவும், அஹிம்சையையே கடைப்பிடிக்கிறார் என்றும் ஸ்ரீ தார்ன் அறிக்கை கொடுத்தார். ஆனாலும் ஸ்ரீ. சி. ராஜகோபாலாச்சாரியார் உப்பு எடுக்க முற்பட்டதும் கைது செய்யப்பட்டார். ஸ்ரீ. கே. சந்தானம், ஸ்ரீ வேதரத்னம் பிள்ளை, ஸ்ரீமதி லட்சுமிபதி, டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் போன்ற இதர தலைவர்களும், இதர தொண்டர்களும், சத்தியாக்கிரகம் நடத்த முன் வந்தனர். அதிகாரிகள் பாடு பெரும் சங்கடமாகிவிட்டது. பலரைக் கைது செய்த பின்னரே நிலைமையைச் சமாளித்தனர்.

---

(சென்னை அரசாங்க செய்தித் துறை 1957-இல் வெளியிட்ட 'சுதந்திரச் சுடர்' என்ற நூலில் டாக்டர் பி.எஸ். பாலிகா 'சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி.)

# மூதறிஞர் இராஜாஜி



அரசியல் புரட்சியுடன் அறிவியல், கலை, இலக்கியத்துறைகளிலும் மறுமலர்ச்சியை உருவாக்கிய காந்திய சகாப்தம், வரலாற்றில் தனிச் சிறப்பு வாய்ந்தது. ஆன்மீக அடிப்படையில், அகிம்சை முறையை வலியுறுத்திய காந்தியப் புரட்சி, இந்திய உணர்வுகளில் புதியதொரு வாழ்வுமுறையை உருவாக்கியது. ஆண்டாண்டுக் காலமாய் அடிமைத் தளையிலிருந்த மக்களை விடுவித்து, ஒவ்வொரு துறையிலும் புத்துணர்ச்சியையும் அது உருவாக்கியது. தங்கம் நிகர்த்த தனிப்பெரும் தலைவர்கள், கவிஞர்கள், தத்துவ அறிஞர்கள், அறிவியலாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், வரலாற்றாசிரியர்கள் என எண்ணிறந்த மக்கள் காந்திய சகாப்தம் பேரொளி விட்டுப் பிரகாசிக்க அரும் பணியாற்றினர்.

### காந்திய அரசியல் புரட்சி

அனைத்துத் தரப்பு மக்களின் விடுதலைக்காகவும் தோன்றிய பல புரட்சிகளிலும் முக்கியமான காந்திய அரசியல் புரட்சிக்கு உதவ முதுபெரும் தலைவர்கள் பலர் முன்வந்தனர். அவர்களில் மிக முக்கியமானவர்களாகக் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்கள் ஜவஹர்லால் நேரு, வல்லபாய் படேல் மற்றும் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி ஆகியோராவார். ஒருவருக்கொருவர் முற்றிலும் மாறுபட்டிருந்த இத் தலைவர்கள் ஒருவருக்கொருவர் துணையாய் இருந்து தேசிய இயக்கத்தை வளர்த்தனர். அவர்கள் தோன்றி வளர்ந்த பகுதியின் இயல்புகள் அவர்களுடைய ஆளுமையில் வெளிப்பட்டன.

### இமயத்தின் குழந்தை ஜவஹர்லால் நேரு

இமயத்தின் குழந்தையான ஜவகர்லால் நேரு செல்வக்குடியில் பிறந்தவர் என்றாலும் அவருடைய இதயம் என்றும் ஏழைமக்களுக்காகவே இரங்கியது. கவிஞனின் ஆன்மாவையும், அறிவியலாளரின் அறிவையும் கொண்டு விளங்கியவர் அவர்;

காந்தியிடம் அவர் கொண்டிருந்த உணர்ச்சிப் பிணைப்பு, காரல் மார்க்ஸ் மீதான அறிவார்ந்த மதிப்பீடுகளுடன் பிணக்கம் ஏற்படுத்தியது. அனைத்து மக்களாலும் அவர் நேசிக்கப்பட்டார்.

### சர்தார் பட்டேல்

குஜராத்தி வணிகர்களுக்கேயுரிய கூர்மதியும், விவசாயினுடைய அனுபவ அறிவும், இந்தியர்களுக்குரிய ஆழ்ந்த அமைதியும், ஆற்றலும், வலிமையும் கொண்டு விளங்கியவர் சர்தார் படேல். அவருடைய செய்கைகளில் தீர்க்கமான ஞானம் புலப்படும்.

ஆதிசங்கரரின் இணையில்லாத் தத்துவ அறிவையும், தெளிவையும் திருவள்ளுவரின் அறவழியையும், வைணவத் துறவியரின் மனிதாபிமானம், கருணை, கட்டுப்பாடு ஆகியவற்றையும் சுவீகரித்துக் கொண்டவர் மூதறிஞர் இராஜாஜி.

தனித்தனியே பார்க்கும்போது ஒவ்வொருவரும் அவர்களுடைய இயல்பால் மாண்புடையவர்களே. அவர்கள் ஒன்றாக இணைந்து செயலாற்றியபோதெல்லாம், இந்த தேசம் பெரும் நன்மையை அடைந்தது; அவர்கள் கருத்து வேறுபட்ட போது நாட்டுக்கு ' இழப்பே நேர்ந்தது.

### தெளிந்த சிந்தனையாளர்

கவர்ச்சியாலோ, ஜனரஞ்சகமான கொள்கைகளாலோ, இராஜாஜி தலைவராய் மதிக்கப்படவில்லை. கூர்மையான, நுணுகி ஆராய்கிற தொலைநோக்குடைய அறிவினால் அவர் தலைவராய் ஏற்கப்பட்டார். வழக்கறிஞர் பயிற்சி, எந்தப் பிரச்சினையானாலும் தீர்க்கமாகப் பகுத்தாய்வு செய்ய அவருக்கு உதவியது. கண்ணியமான குடும்பப் பின்னணி, கட்டுப்பாடான கடுமையான உழைப்பு, கஷ்டத்திலிருப்பவர்களுக்கு உதவும் கருணை, நமது கலாச்சாரத்தின் பெருமைகளை ஆழ்ந்து கற்ற அறிவு, அனைத்துமே அவரைத் தலைமைப்பொறுப்புக்கு இட்டுச்சென்றன. இராஜாஜியினுடைய தொலைநோக்குப் பார்வையினால், அடுத்தவர்கள் தடுமாறும்போது கூட, அவரால் உறுதியாய் இருக்க முடிந்தது; பரபரப்பான சூழலில் அமைதியாகவும், குழப்பமான நிலையில் தெளிவான சிந்தனையுடனும் அவர் விளங்கினார்.

### கதர்ப் பிரச்சாரம்

பயிற்சியற்ற கற்றுக்குட்டியாக அவர் காந்தியின் அரசியல், சமூக சீர்திருத்தப் பணிகளில் சேரவில்லை. பழமையை எதிர்த்துப் போராடிய வீரத் தழும்புகளுடனும், சேலம் நகராட்சியின் தலைசிறந்த நிர்வாகி என்ற புகழுடனும் அவர் காந்தியின் பாசறைக்கு வந்தார். சாதாரண மனிதர்களாய்த் தம்மிடத்து வந்தவர்களைச் சிறந்த தலைவர்களாக்க, முழுமையாக அவர்களைச் செதுக்கிய காந்திக்கு இராஜாஜியைப் பொறுத்தவரையில் ஒரு சில மேற்பூச்சு வேலைகளே போதுமானதாய் இருந்தன. அறிவார்ந்த திறமும், அறநெறிக் கோட்பாடுகளும்கொண்டு இராஜாஜியைப் போல வேறு எவரும் காந்தியின் கொள்கைகளைப் பரப்பியதில்லை. வழக்கறிஞருக்குரிய அரிய குணநலங்களை வெளிக்காட்டியவர் அவர். கயாவில் நிகழ்ந்த காங்கிரஸ் மாநாட்டில் சி. ஆர். தாஸ் முன்மொழிந்த, கவுன்சிலில் இடம்பெறும் திட்டத்தை, சிறையிலிருந்து காந்தியின் விருப்பத்திற்கேற்ப, இராஜாஜி கைவிடச் செய்தார். கதர்ப்பிரச்சாரப் பணி முழு வெற்றி பெற இராஜாஜி உழைத்தார்.

எம். சி. சுப்ரமணியம்

## செயலில் தூய்மை

சத்தியாக்கிரக முகாம்களை நடத்துவதில் கூட மாபெரும் யுத்த நடவடிக்கையை மேற்கொள்ளும் படைத்தலைவனின் திறமையுடன் இராஜாஜி செயல்பட்டார். இயக்க நடவடிக்கைகளுக்கு எதிராக ஆங்கில அரசு மேற்கொள்ள எத்தனித்த செயல்களை முன்கூட்டியே சிந்தித்தவர் அவர். பெருங்கூட்டத்தில் வேண்டுமென்றே கலவரம் உண்டாக்க முனைந்தபோது அதைத் தடுக்கத் தக்க நடவடிக்கை மேற்கொண்டவர். போராட்டத்தில் ஈடுபடும் சத்தியாக்கிரகிகளைத் தேர்ந்தெடுப்பதில் கூட கூரிய கவனம் செலுத்தியவர். போராட்டம் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக மட்டுமே, அவர் அப்படிச் செய்ததில்லை; சத்தியாக்கிரகிகளின் அளவிறந்த ஆர்வம் காரணமாகவோ, அல்லது அந்நிய ஆட்சியின் தூண்டுதலின் காரணமாகவோ இயக்கத்தின் சீர்மை குலைந்து விடாமல் இருக்க அவர் அக்கறை கொண்டிருந்தார். செயல்முறை தூய்மையாய் இருக்கவேண்டும் என்பதில் காந்தியைப் போலவே ,இராஜாஜியும் மிகுந்த அக்கறை செலுத்தினார்.

## கொள்கையில் உறுதி

எந்தவொரு போராட்டமாயினும், நியாயமானதாயும், அப்போதையச் சூழலுக்கு அவசியமான ஒன்றாயும் இருக்கும் பட்சத்தில் மட்டுமே, இராஜாஜி மனம் தளராது உறுதியுடன் அதில் ஈடுபடுவார். விரைவாகச் சிந்திக்கும் கூரிய மதியும், தொலைநோக்குப் பார்வையும் இருந்ததால், இராஜாஜியால் மற்றவர்களைக் காட்டிலும் துரிதமாகச் செயல்பட முடிந்தது. நிகழ்காலச் சூழலைக் கவனமாக ஆராய்ந்து, அதனால் எதிர்காலத்தில் ஏற்படும் தவிர்க்கமுடியாத விளைவுகளை உணர்ந்து, எடுக்கப்படும் முடிவு பொருத்தமற்று இருந்தால், அதில் தனது கருத்துவேறுபாட்டை வெளிக்காட்ட அவர் ஒருபோதும் தயங்கியதில்லை. இது போன்ற சூழலில் உணர்வுப் பிணைப்புகளுக்கோ, நீண்டகாலத் தோழமை உறவுகளுக்கோ, அதிகாரக் கவர்ச்சிகளுக்கோ அவர் அசைந்து கொடுத்ததில்லை.

1936இல் மாகாண ஆட்சியை ஏற்றுக்கொள்ளப் பரிந்துரை செய்தார். பாகிஸ்தான் உருவாவது தவிர்க்க முடியாதது என்பதை அவர் உணர்ந்ததால், முஸ்லிம் லீகுடன் உடன்பாடு செய்துகொள்ள வலியுறுத்தினார். ''ஆறுமாதங்களுக்கு அப்பால் என்ன நிகழும் என்று, என்னைக்காட்டிலும் தீர்க்கமாய்க் காண்பவர் இராஜாஜி'' என்று காந்தி ஒருமுறை குறிப்பிட்டார். உலகயுத்தத்தில் காங்கிரஸ் மேற்கொண்ட நிலையால் விளையும் அபாயங்களை உணர்ந்தவர் இராஜாஜி. 1940ஆம் ஆண்டு லக்னோ பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்புப் பேருரை நிகழ்த்திய போது அகிம்சையின் எல்லையை வரையறுத்துக் கூறினார். கிரிப்ஸ் மிஷன் வழங்க முன்வந்ததை ஏற்றுக் கொண்ட அவர், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை எதிர்த்தார். எல்லாச் சிக்கலான சூழலிலும் தெளிவாக முடிவறிவிக்க அவர் தவறியதேயில்லை.

1942-இல் ஐப்பானியப் படையெடுப்பு அச்சம் தோன்றியபோது ஆளுநர் உள்ளிட்ட அனைத்து அரசுப் பொறுப்பாளர்களும் சென்னை நகரத்தை விட்டு ஓட எத்தனித்த போது, "எங்கே செல்கிறீர்கள்? இருக்கும் இடத்தில் இருந்து கொண்டு எதிர்ப்படும் அபாயத்தை எதிர்கொள்ளுங்கள்'' என்று உரக்கக் குரலெழுப்பினார். சாந்தமான முகமும், தைரியமான இதயமும் இராஜாஜியின் அடிப்படை குணாதிசயங்கள்.

> **உண்மையான அகிம்சை ஒரு நாளும் எதிரியின் இதயத்தை மாற்றாமல் வீண் போவதில்லை என்றே நான் கருதுகிறேன். அது எதிரியின் இதயத்தை மாற்றாமல் போனால், அந்த அளவிற்கு அது குறைபாடு உள்ளதேயாகும்.**
>
> **— அண்ணல் காந்தியடிகள்**

சத்தியாக்கிரகக் கொள்கைகளை உறுதியுடன் பின்பற்றி விடுதலைக்காக உழைத்ததற்காக மட்டுமே இராஜாஜியை சீரிய சத்தியாக்கிரகவாதி என்று காந்தி பாராட்டவில்லை. காந்தியின் கொள்கைகளை நிர்வாகத்தில் சிறப்பாகப் பயன்படுத்தினால் பெரும் நன்மைகள் கிட்டும் என்பதை இராஜாஜி மெய்ப்பித்துக் காட்டினார்.

அமைதியாக, வன்முறையில்லாமல், பெருத்த பூகம்ப மாற்றங்கள் ஏதுமின்றி புரட்சி உருவெடுக்க முடியுமென்று அவர் காட்டினார். மதுவிலக்கு, ஆலயப்பிரவேசம், கடன் நிவாரணம், உணவுதானியம் கட்டுப்பாட்டை நீக்குதல், பண்ணையாள் உரிமைகள் போன்ற புரட்சிகர மாற்றங்களை எந்தவித வாக்குறுதியும் இல்லாமல், மக்கள் ஆதரவைத் திரட்டாமல், அவர் செயலாக்கிக் காட்டினார். நலவாழ்வுக்காகப் பொதுமக்களின் ஆதரவைத் திரட்டினார் அவர். சட்டமன்றத்திலும், நிர்வாகத்திலும் மக்கள் நலம் நோக்கும் திட்டங்களையே அவர் செயல்படுத்தினார். அனைத்திற்கும் மேலாக உயர்ந்த நற்குணங்களைப் பின்பற்றி நிர்வாகத்தில் தூய்மையைக் கடைப்பிடித்தார்.

எந்தக் கொள்கை அல்லது நடைமுறையும் சரியானதென எண்ணினாலும், அல்லது தீங்கு பயப்பது என்று நம்பினாலும், அதற்காக காரண காரிய விளக்கத்தை எதிராளிகள் எதிர்த்துப் பேச வாய்ப்பு இன்றி, மிகவும் ஆணித்தரமாக, எடுத்துரைத்தவர் இராஜாஜி. மதுவிலக்குக்காகப் பலகோணத்திலிருந்தும், பலமுனைகளிலிருந்தும் அயராது போராடியவர் அவர். தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் அதிகாரமிக்க சக்திகளைக் கண்டும் அஞ்சாது, அணு ஆயுதக்குவிப்பு, ஊழலை வளர்க்கும் கொள்கைகள் போன்றவற்றையும் அவர் எதிர்த்தார்.

## சொல்வலை வேட்டுவர்

பொதுமக்களின் நலனை மேம்படுத்துவதையே தனது கடமையாக எண்ணி ஒழுகியவர் இராஜாஜி. இந்தக் கடமையைச் செய்ய மேற்கொள்ளும் முறைகள் நம் மண்ணின் பண்பாட்டு, ஆன்மீகப் பின்னணியுடன் நேரடித்தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். நாட்டின் அரசியல் நிலையை விளக்கவோ அல்லது பொருளாதாரச் சீர்கேட்டைக் கிண்டல் செய்யவோ நாட்டில் வழங்கிய நாடோடிக் கதைகள் போன்றவற்றை அவர் பயன்படுத்தினார். மக்களின் பிரச்சினைகள் குறித்துத் தெளிவாகவும், சீராகவும், கேட்பவர் எளிதில் புரிந்துகொள்ளும்படியும் அவர் எடுத்துரைத்தார்.

## மலரினும் மென்மையானவர்

நம் மக்களின் நற்குணங்களை வளர்க்க அயராது பாடுபட்டார். இராமாயணத்தையும், மகாபாரதத்யும், இதிகாச வனப்புடன் எளிய நடையில் எழுதி, பலதலைமுறையாக இந்திய மக்களின் வாழ்வை மேம்படுத்தத் தூண்டுகோலாக இருந்த கதாபாத்திரங்களை இளந்தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தினார். காந்தியடிகள், ராமகிருஷ்ணர், ஆழ்வார்கள்போன்றோர், கீதை, உபநிஷத்துக்கள் போன்றவை பற்றிய அவருடைய படைப்புகளினால் முதியோரின் மனதில் நீங்கா இடம் பெற்றார். அவருடைய படைப்புகளில் அது பேத்திக்கு எழுதும் கடிதமாகட்டும் அல்லது பட்டமளிப்புப் பேருரையாகட்டும் அதில் மெல்லிய நகைச்சுவை இழைந்தோடும். பாறையைக் காட்டிலும் கடுமையானவராக இராஜாஜி தோற்றமளித்தபோதிலும், உண்மையில் அவர் மலரைக் காட்டிலும் மென்மையானவர். காந்தியத்தை இராஜாஜியைப் போல் வேறெவரும் அவ்வளவு உறுதியுடனும், அர்ப்பணிப்புடனும் பின்பற்றியதில்லை.

# மூதறிஞர் இராஜாஜி பொன்மொழிகள்



நம்முடைய சமூகம் சுதந்திர வாழ்க்கை அடைந்து விட்டது. சுதந்திரத்துடன் சுகமும் பெற வேண்டுமானால், மக்கள் அறவழியில் நிற்க வேண்டும்.

சுதந்திரம் பெற்ற பின்னர் 'இது ஒழிக' 'அது ஒழிக' என்ற கோஷங்களெல்லாம் ஒழிய வேண்டும். அதற்குப் பதிலாக 'ஓங்குக' என்ற சொல்லே ஓங்க வேண்டும்.

தீண்டாமை என்பது நமது சமூகத்தின் ஒரு மாசு. தீண்டாமை ஒரு விஷப் பாம்பு. அதைக் கொன்றாக வேண்டும்.

நாம் கஷ்டப்பட்டு, மனச்சாட்சிக்கு நியாயமாகப் பக்தி சிரத்தையுடன் உழைத்தாலன்றி வெற்றி பெற முடியாது.

பரஸ்பர நம்பிக்கை, நன்னடத்தை, நல்லொழுக்கம் ஆகியவை வெற்றிக்கு மார்க்கங்கள்.

நம்முடைய தேகமும் உள்ளமும் ஆண்டவனுடைய கோயில். அதைச் சுத்தமாக வைத்துக்காப்பது நம் கடமை.

நீங்கள் உண்மை பேசினால், மற்றவர்களும் உங்களைப் பின்பற்றுவார்கள். நீங்கள் கட்டுப்பாட்டுடன் இருந்தால் மற்றவர்களும் உங்களைப்போல் இருப்பார்கள்.

எந்தச் சந்தர்ப்பத்திலும், மனம்போனபடி விட்டு விடாமல், பேச்சிலும் காரியத்திலும் அடக்கம் இருக்க வேண்டும். எவ்வளவு கல்வியும், செல்வமும் இருந்தாலும், அடக்கம் இல்லாவிடில் பண்பாடென்பது இல்லை.

அவரவர் குறைகளை அவரவர் உணர்ந்து தக்கபடி நடந்தால், குறைகள் தீர்ந்துபோய், பலன் ஏற்பட்டு விடும். இதுபற்றிச் சந்தேகமே தேவை இல்லை.

தவறைச் சரிபடுத்திக் கொள்ளப் பிரயாசைப்படுவதால், அவமானம் கிடையாது.

மனதில் எழும் தீய எண்ணங்களை எல்லாம் அகற்றி விட வேண்டும். ஒரு தீய எண்ணத்துக்கு இடம் தந்தால், உடனே கோட்டைத் துவாரத்து வழியாகப் பகைவருடைய படைகள் நுழைவதுபோல் ஆயிரக் கணக்காக வந்து நுழைந்துவிடும்.

கோபம் கூடாது; அது முகத்தின் அழகைக் கெடுத்து விடுகிறது. சாந்தம் முகத்திற்கு அழகு தருகிறது.

பொது வாழ்க்கையிலும், சொந்த வாழ்க்கையிலும் பற்றின்றி, சுயநலமின்றி வாழவேண்டும், இல்லையேல், நமக்கு விமோசனமில்லை.

ஒழுக்கத்துடனும், நாணயத்துடனும், ஒவ்வொருவரும் நடந்து கொண்டால், எல்லோருக்கும் நன்மை விளையும்.

வாழ்க்கையில் தைரியமாக இருப்பதைவிட, மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விஷயம் வேறு என்ன இருக்க முடியும்.

ஒரு பெண்ணின் கல்விக்கு நாம் செலவிடும் பணம் ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்கு முதலீடு செய்வதாகும்.

தொகுப்பு: வ. இராசமனோகரன்



# மேதகு ஆளுநர் வடஆர்க்காடு மாவட்டம் வருகை..

மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் 17.3.88 அன்று மாலை வேலூர் சத்துவாச்சாரியில் இந்தியன் வங்கி சார்பில் நடைபெற்ற நலிந்த பிரிவினருக்கான கடன் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு 261 நபர்களுக்கு ரூ.10 இலட்சத்து 28 ஆயிரம் கடன் வழங்கி உரையாற்றினார். மேதகு ஆளுநர் அவர்கள் தமது உரையில்:-

''நான் கவர்னர் பொறுப்பு ஏற்று ஒரு மாதம் ஆகிறது. கடந்த ஒரு மாத காலமாகச் சென்னையில் இருந்து அவசர வேலைகளைக் கவனித்தேன். இன்றுதான் மாவட்டங்களின் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டேன்''.

''வட ஆர்க்காடு மாவட்டத்தில் முதல் நிகழ்ச்சியாக நலிந்த பிரிவினருக்கு நிதிஉதவி அளிக்கும் விழாவில் கலந்துகொள்வதில் பெருமை அடைகிறேன். மறைந்த இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி சாதாரண மக்களுக்கு வங்கிகள் மூலமாக நிதி உதவி கிடைக்கவேண்டும் என்று கருதி, வங்கிகளைத் தேசிய மயமாக்கினார். அதன்பிறகு தான் பணக்காரர்களுக்கு மட்டுமே கிடைத்துவந்த கடன்உதவி, ஏழை மக்களுக்கும் கிடைத்து வருகிறது.

சிறுதொழில் தொடங்குவதற்காக வங்கிகளில் வாங்கிய கடனை நீங்கள் ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தவேண்டும். தாமதம் இல்லாமல் கடனைத் திருப்பிச் செலுத்தியவர்களுக்கு இந்த விழாவில் பரிசுகள் வழங்கப்படுவதையும் நான் பாராட்டுகிறேன். அதேபோல இன்று கடன் பெறுகிறவர்களும் குறித்த காலத்தில் கடனைத் திருப்பிச்செலுத்தி, திட்டம் வெற்றிபெற ஒத்துழைப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்'' என்று கூறினார்.

விழாவில் சேமியா தொழிற்சாலை, பெட்டிக்கடை, அப்பளம் தயாரிப்பு, கறவைமாடு வாங்குவது, சைக்கிள்கடை, நெசவுத்தொழில் ஆகியவற்றிற்காக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேதகு ஆளுநர் கடன் தொகை வழங்கினார்.

சிறப்பாகப் பணியாற்றிவரும் இந்தியன்வங்கிக் கிளை மேலாளர்கள், கடனைத் தவணை தவறாமல் திருப்பிச் செலுத்தும் வாடிக்கையாளர்கள் ஆகியோருக்கு ஆளுநரின் துணைவியார் திருமதி அக்கம்மா அலெக்சாண்டர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

இந்தியன் வங்கி பொதுமேலாளர் திரு கே.எஸ்.இராமநாதன் விழாவிற்குத் தலைமை வகித்தார். வடார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எஸ். மாலதி இ.ஆ.ப., திருப்பத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஏ.ஜெயமோகன் ஆகியோர் விழாவில் பேசினார்கள்.

கணியம்பாடி ஊராட்சி ஒன்றியம், விருபாட்சிபுரம் கிராமத்தில் தேசிய ஊரகவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 5,10,000 செலவில் 50 தொகுப்பு வீடுகள் கட்டப்பட உள்ளன. இவற்றில் முதற்கட்டமாக ரூ. 2,34,600 செலவில் கட்டப்பட்ட 23 வீடுகளை மேதகு ஆளுநர் அவர்கள் 18.3.88 அன்று பார்வையிட்டார். குடியிருப்போர் உபயோகத்திற்கு அங்கு புதியதாகப் போடப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணற்றையும் பார்வையிட்டார். அங்கு வசிக்கும் மக்களிடம் ''வீடு வசதியாக இருக்கிறதா? குறை ஏதும் உள்ளதா? சுகமாக இருக்கிறீர்களா?'' என்று தமிழில் கேட்டார். குடியிருப்புப் பகுதியில் தென்னங்கன்றுகளை நட்டார்.

வேலூர் ஊராட்சி ஒன்றியம் சிவனாதபுரம் கிராமத்தில் ஊரக

# பம்மல் சம்பந்தனார் பிறந்த நாள் விழா



தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில், நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்தனார் அவர்களின் பிறந்தநாள் விழா, 28.3.88 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடந்தது.

மன்றச் செயலாளர் திரு வி.எஸ். இராகவன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், ''நாடகக் கலை வளர்ச்சியில் மிக்க ஆர்வம் கொண்டு, அதற்காக உழைப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தவர் சம்பந்தனார். அவர் தமிழ் நாடகக் கலைக்குப் பெருமை தேடித்தந்தவர்'' என்றார்.

சென்னை வானொலி நிலைய இயக்குநர் திரு கோ. செல்வம் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''பம்மல் சம்பந்தனார் சிறந்த நாடகாசிரியர். சமுதாயத்தின் நன்மை தீமைகளை அச்சமின்றி, நகைச்சுவையுடன் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கருதியவர். தமிழ்நாடக உலகில் மறுமலர்ச்சியை - விழிப்புணர்ச்சியை உண்டாக்கியவர். அவரது நாடகக் கலையை வளர்க்க நாமெல்லாம் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்."

கலைமாமணி திரு டி.என். சிவதாணு அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''நாடகக் கலைதான் நாட்டுக்கு, சமுதாயத்துக்கு, மனித வளர்ச்சிக்கு உகந்தது என்று மேலைநாட்டினர் கருதுகிறார்கள்."

''தமிழ்நாடகக் கலையை உயர்த்திய பெருமகனார் பம்மல் சம்பந்தனார். தொழில் முறை நாடகக் கலைஞர்களுக்கு ஒரு நல்ல இடத்தைத் தந்தவர் அவர்."

''அந்தக் காலம் நாடகக் கலைக்குப் பொற்காலமாக விளங்கியது. அந்தக் காலத்திலேயே 'ராஜேந்திரன்' என்னும் நாடகத்தில் வரதட்சிணைக் கொடுமை சித்திரிக்கப்பட்டது. பேராசிரியர் சம்பந்தனாரின் பழைய நாடகங்களை இயலிசை நாடக மன்றம் மீண்டும் நடத்த வேண்டும்."

''பேராசிரியர் சம்பந்தனாரின் பெயரைத் தெருவுக்கு வைக்க வேண்டும். அவரது திருவுருவச் சிலையைத் திறந்து வைக்க வேண்டும். அவரது உருவம் தாங்கிய அஞ்சல் தலையையும் வெளியிடவேண்டும்''

அன்று இரவு, பம்மல் சம்பந்தனார் எழுதிய ''கொடையாளி கர்ணன்'' என்னும் நாடகத்தினை ஏ.பி. என்.ஆர்ட்ஸ் குழுவினர் நடத்தினர். நாடகம் அனைவரையும் கவர்ந்தது.

— நமது செய்தியாளர்

---

நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத்திட்டத்தின் கீழ் ரூ. 1 இலட்சத்து 567 ஆயிரம் மதிப்பில் வேளாண்பொறியியல் துறைமூலம் கட்டப்பட்ட கசிவுநீர்க் குட்டையினைப் பார்வையிட்டார். அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களிடம் ஊதியம் குறித்துக் கேட்டறிந்தார். தினமும் 1 கிலோ அரிசியும், ஒரு கிலோ கோதுமையும், ரூ.5.65 பைசாவும் கொடுப்பதாகத் தொழிலாளர்கள் கூறினார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்குக் கோதுமைப் பைகளையும், கூலிப்பணத்தையும் மேதகு ஆளுநர் வழங்கினார். கிராம மக்களிடம் கோரிக்கை மனுக்களையும் பெற்றுக்கொண்டார்.

பின்பு ஆவாரம்பாளையத்திற்குச் சென்றார். அங்கு சமூகநலக் காடுகள் திட்டத்தின் கீழ் வளர்க்கப்பட்டுள்ள செடிகளைப் பார்வையிட்டார். கூடியிருந்த பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

18.3.88 அன்று மதியம் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டு அவர்களது குறைகளைக் கேட்டறிந்தார்.

வடார்க்காடு மாவட்டப் பயணத்தை முடித்துக் கொண்டு சென்னை புறப்படுவதற்கு முன்பாக வேலூர் செய்தியாளர்களிடம் பேசினார்.

''ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் பணிகளை நேரில் கண்டறிய மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம் செய்து வருகிறேன்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் நடந்துவரும் அரிசனங்கள், மலைவாழ் மக்களுக்காகக் கட்டப்படும் வீடுகளையும், சமூகக்காடுவளர்ப்புத் திட்டம் போன்ற நல்ல திட்டங்களைப் பார்த்தேன். இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அரிஜனங்களுக்கு மேலும் வீடுகள் கட்டவும், இணைப்புச்சாலைகள் போடவும் ரூ,27 கோடி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. குடிதண்ணீர்த் திட்டத்துக்கு முதல் இடம் அளித்துச் செயல்படுத்தப்படும். சாலைகள் போடுவதிலும் கவனம் செலுத்துவோம்.


அரசின் திட்டங்களை விரைவாக செயல்படுத்த மாவட்ட அதிகாரிகளுக்குக் கூடுதல் அதிகாரம் அளிக்கப்பட்டு உள்ளது. தாமதம் இல்லாமல் திட்டங்களை நிறைவேற்றவும், பிறகு அரசின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளவும் வசதி செய்திருக்கிறோம்.

பொதுமக்களின் தேவைகளைக் கண்டு அறிந்து, அவற்றை நிறைவேற்ற, உயர் அலுவலர்களை ஒவ்வொரு வட்டாரத்துக்கும் நியமித்து இருக்கிறோம். அந்த அலுவலர்கள் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து, தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். தமிழகத்தின் புதிய தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்தி வருகிறேன். இதற்காகத் திட்டங்களைத் தயாரித்துக் கொடுக்குமாறு கேட்டு இருக்கிறேன். அதிகாரிகள் அந்தப் பணியில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

நான் சுற்றுப்பயணம் செய்த இடங்களில் குடிதண்ணீர் வேண்டும், நிலப்பட்டா வேண்டும், வேலை வாய்ப்பு வேண்டும் என்று பொதுமக்கள் மனு கொடுக்கிறார்கள். குடிதண்ணீர்த் திட்டத்துக்கு முக்கியத்துவம் அளித்து நடவடிக்கை எடுத்து வருகிறோம். புதியதொழிற்சாலைகளைத் தொடங்குவதன் மூலமே வேலைவாய்ப்பு வசதி கிடைக்கும். எனவே புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதில் தீவிரக் கவனம் செலுத்தப்படும்.

இவ்வாறு மேதகு ஆளுநர் செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

**இரா. பா. கார்மேகம்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**வட ஆர்க்காடு மாவட்டம்.**



# காதி பவன்

சென்னை அண்ணாசாலையில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு அருகில் உள்ளதுதான், காதி கிராமோத்யோக் பவன்.

இங்கே இல்லாத பொருள்களே இல்லை எனலாம். தரமான பொருள்கள் இங்கே தட் டாமல் கிடைக்கப்பெறுவதால், திரளான கூட்டம் தினமும் வருகிறது.

'கிராமக் கைத்தொழில்கள் வளர வேண் டும்' என்ற அண்ணல் காந்தியடிகளின் கனவு நனவாகும் வகையில், காதிபவன் கிராமப் புறத் தொழில்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்து வருகிறது; அதே சமயத்தில் கிராமப் பொருளாதாரம் வளரவும், கிராம மக்களுக்கு வேலைவாய்ப்புத் தரவும் இது உதவி வரு கிறது.

கதர்த்துணிகள் என்றதும் நமக்குக் காதி பவனே நினைவுக்கு வரும். கதர்த் துணிகள் இங்கே மலிவு விலையில் கிடைக்கின்றன. பம் பாய் காதி கமிஷனின் அங்கீகாரம் பெற்றவர் களிடமிருந்து, இது கதர்த் துணிகளை-ஆடை களை வாங்கி இங்கே விற்பனை செய்கிறது.

17.2.88 முதல் 26.3.88 முடிய கதருக்கு 25 சதவீதமும், பட்டுக்கு 10 சதவீதமும் சிறப்புத் தள்ளுபடி தரப்பட்டது. ரூபாய் 45-க்கு ஒரு கதர் வேட்டி, சட்டை, உள்ளுறை, துண்டு, பனியன், ஒரு பை ஆகியவை மலிவு விலையில் கிடைத்த செய்தி மகிழ்ச்சியைத் தருகிறது அல்லவா?

அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் அத்தியாவசியப் பண்டங்களிலிருந்து, அலங் காரப் பொருள்கள் வரை இங்கே அணி அணி யாய்க் காட்சி தருகின்றன.

வீட்டுக்குத் தேவையான மிளகாய்ப் பொடி, இட்லிப்பொடி, ரசப்பொடி, சுக்குக் காப்பிப்பொடி முதலானவை இங்கே கிடைக் கின்றன. வெளியில், மிளகாயைக் காம் போடு அரைப்பார்கள். இங்கே காம்பு நீக்கி,



மிளகாயை இடித்துப் பொடி செய்கிறார்கள. இந்த வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் பெண் களே, இதேபோல ரொட்டி, கேக் முதலான வையும் முட்டை கலவாமல் சுத்தமாகத் தயா ரிக்கப்படுகின்றன. சர்க்கரைக்குப் பதிலாகப் பனஞ்சர்க்கரையே சேர்க்கப்படுகிறது.

இங்கே விற்கப்படும் உணவுப் பொருள் களில் செக்கில் ஆட்டிய நல்லெண்ணெயே பயன்படுத்தப்படுகிறது. எள்ளோடு கருப் பட்டியும் சேர்த்து எண்ணெய் தயாரிப்பதால் அது கெடாமல் நாள்பட இருக்கிறது. அத் துடன் உடலுக்கும் நல்லது.

இங்கே உள்ள உணவு விடுதியில், கைக் குத்தல் அரிசி மட்டுமே பயன்படுத்தப்படு கிறது. இந்த உணவு விடுதியிலிருந்து வரும் லாபத்தைக் கொண்டு கிராமங்களில் நூல் நூற்போர், நெசவு செய்வோர் ஆகியோருக்கு உதவிகள் செய்யப்படுகின்றன. மேலும் கிணறு வெட்டித் தருதல், பார்வையற்றவர் களுக்குத் துணிகள் வழங்குதல் முதலான உதவிகள் செய்யப்படுகின்றன.

அப்பளம், ஊறுகாய் முதலானவையும் பெண்களாலேயே தயாரிக்கப்படுகின்றன. இவர்களுக்கு நல்ல ஊதியம் வழங்கப்படுவ தால் இவர்களது வாழ்க்கைத்தரமும் உயர்ந் துள்ளது.

காதி கிராமோத்யோக் பவன் மேலாளர் திரு சி. டி. வி. ராகவுலு அவர்கள் மேலும் கூறுகையில் குறிப்பிட்டதாவது:

கண்ணைக் கவரும் வண்ணப் பொம்மைகள் இங்கே காட்சிக்கு மட்டுமல்ல; காசுக்கும் கிடைக்கின்றன.

மண், காகித, உலோக, மர, கருங்கல், மாக்கல், சந்தனமர, பீங்கான் முதலானவற் றால் உருவான பொம்மைகள் உயிருள்ளவை போலவே தோற்றமளிக்கின்றன. இங்கே ஆண்டுதோறும் நடைபெறும், நவராத்திரி பொம்மைக் கொலு நம்மை மெய்மறக்கச் செய்யும்.

இங்கே விற்பனைக்கு வரும் பொம்மை கள், சென்னைக் கொசப்பேட்டை, மீஞ்சூர், மடிப்பாக்கம், பண்ருட்டி, கடலூர், வேலூர், பாண்டிச்சேரி ஆகிய இடங்களிலிருந்து தயா ராகி இங்கே விற்பனைக்கு வருகின்றன. அத் துடன் மகாராஷ்டிராவில் கோலாப்பூர் மற் றும் ஆக்ரா, பெங்கால் ஆகிய இடங்களிலிருந் தும் பொம்மைகள் தருவிக்கப்படுகின்றன.

பொம்மைகள் ஒரு ரூபாய் விலையி லிருந்து. ஆயிரம் ரூபாய் விலை வரை கிடைக் கின்றன.

மனத்தைக் கவரும் மரச்சிற்பங்கள், மணி மாலைகள் முதலியனவும் இங்கே கிடைக் கின்றன.

முத்து, பவளம், மரகதம் மற்றும் இந்திர நீலம் இவற்றால் ஆன மணி மாலைகள் இங்கே விலைக்குக் கிடைக்கின்றன. இந்திர நீலத்தினால் ஆன மணிமாலையின் விலை எவ்வளவு தெரியுமா? ரூ. 6,000.

இங்கே பல்வேறு வடிவமைப்புகளில் வெள்ளியில் தங்க முலாம் பூசிய நகைகள்-




நெக்லஸ், செயின், காதணிகள், வளையல்கள் நடன நங்கையர் அணிந்து கொள்ளும் அணி கலன்கள், வேலைப்பாடுடைய ஒரிசா, கட் டாக்கிலிருந்து வரும் வெள்ளி மாலைகள், ஜெய்ப்பூர் கல் மணிகள் முதலானவை காட் சிக்கு மட்டுமல்ல, காசு கொடுத்தால் நம் கைக்கும் வரும் வகையில் வைக்கப்பட்டுள்ளன.

'டெம்பிள் ஜுவல்லரி' என்னும் கோயில் நகைகள் கொள்ளை அழகுடன் காட்சியளிக் கின்றன. இங்கே, பூசைக்குரிய சாமான்களும் பெருமளவில் விற்பனையாகின்றன. ஸ்படிக லிங்கம், வெள்ளெருக்கால் ஆன விநாயகர், வலம்புரிச்சங்கு, வெள்ளி விளக்குகள், வேறெங்கும் கிடைக்காத அரிய உருத்திராட்ச மாலைகள் முதலானவை நம்மவரையும் மட்டுமல்ல, வெளிநாட்டினரையும் வெகுவா கக் கவர்கின்றன.

பித்தளைச் சாமான்கள்-வேலைப்பாடு டைய தஞ்சாவூர்த் தட்டு, அழகிய விளக்குகள், மொராதாபாத்திலிருந்து வரும் பித்தளை, எனாமல் பொருள்கள், ஐம்பொன்னாலான வடிவமைப்புகள் மற்றும் சலவைக்கல் சிற் பங்கள், ஒரே மரத்தாலான உத்திரப்பிரதேச, காஷ்மீர் பொருள்கள், அரக்கு, காய்கறியி லிருந்து தயாரிக்கும் ஒரு வகை வண்ணத்தா லான கடவுள் சித்திரங்கள், மான் கொம்பா லான பொருட்கள் எல்லாம் இங்கே கிடைக் கின்றன.

காதிகிராமோத்யோக் பவனில் 170 பேர் பணியாற்றுகிறார்கள். இவர்களில் பெண் களுக்குப் பெருமளவில் வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நிர்வாகத்தில் தொழிலாளருக்குப் பங்கும் இருப்பதால், எல் லாரும் கடுமையாக உழைக்கிறார்கள். காதி பவன் ஓராண்டுக்கு ரூ. 3½ கோடிக்குப் பொருள்களை விற்பனை செய்கிறது என் றால், இதன் தரமான பொருள்களுக்கு மக்கள் தரும் ஆதரவினை நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

—பி. வி. கிரி




# உங்கள் வளர்ச்சிக்கு எங்கள் பாதுகாப்பான திட்டங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான சிறந்த பல சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.

இன்றே வருவீர்—உங்கள் வாழ்க்கை வளம்பெற செய்திடுவீர்.


உங்கள் சேமிப்பிற்கு 1/4% கூடுதல் வட்டி உண்டு.

- சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டம்.
- தொடர் வைப்புத் திட்டம்.
- ரொக்க சான்றிதழ்.
- சிறப்பு வைப்பீட்டுத் திட்டம்.

TNSC BANK

தமிழ்நாடு மாநிலத்
தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001.

*TNSC வங்கி—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*



# கலைவாணர் என். எஸ். கே.

அரிய குணங்களும், அரிய சாதனைகளும் படைத்தவர் கலைவாணர். மனிதாபிமானம் கொண்ட அவர், இரண்டு நண்பர்களைப் பகைவர்கள் ஆக்குவதில்லை. தமிழ் வளர வேண்டும் என்று விரும்பியவர்; தமிழை மனமார நேசித்தவர்.

நகைச்சுவை என்பது அரிய கலை. அதைச் சரியாகப் பயன்படுத்தாவிட்டால், அது நையாண்டியாகிவிடும். அந்த வகையில் நகைச்சுவையை எச்சரிக்கையாகக் கையாண்டவர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.

**சிலம்புச் செல்வர்**
**டாக்டர் ம.பொ. சிவஞானம்**
**(தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர்).**

சீர்திருத்தக் கொள்கைக்காக, நாடகத்திற்காக, காந்தியத்துக்காக, கிராமப்புறக் கலைகளுக்காக, நாட்டுக்காக - பாடுபட்டவர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.

கலைவாணர் சாதாரணக் குடும்பத்தில், மிகமிக ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர். அவர் நாடகக் கம்பெனியில் சேர்ந்தபோது அவரது ஆசானான டி.கே. சண்முகத்தைவிட 4 அல்லது 5 வயது மூத்தவராகத் திகழ்ந்தார். டி. கே. சண்முகம் ஆசிரியர் ஸ்தானத்திலிருந்து அவருக்குப் பாடங்கள் சொல்லித் தந்தார். தனது திறமையினால்-அனுபவத்தினால் ஆசானுக்கு ஆசானாக விளங்கினார் என். எஸ். கே.

பல அற்புதமான காரியங்களை அவர் செய்திருக்கிறார். வள்ளலாக விளங்கினார். ஏழைக் கலைஞர்களுக்கு உதவி செய்தார். பல மேடைகளில் பேசினார். தனக்குப்பின், வள்ளல்தன்மைக்குரிய சிலரைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற எண்ணம் கலைவாணர் ஒருவருக்குத்தான் இருந்தது.

**—கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி**

நாடகத்துறையின் மூலமாகவும், திரைப்படங்களின் மூலமாகவும் மறுமலர்ச்சிக் கருத்துக்களைப் புகுத்தியதுடன் எவர் மனமும் புண்படாத வகையில் நகைச்சுவையைப் பரப்பியவர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.

**வி. எஸ். ராகவன்,**
**(செயலர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்)**

**[25.3.88 அன்று சென்னையில் நடைபெற்ற கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் பிறந்தநாள் விழா நிகழ்ச்சியிலிருந்து]**




# நோய்த் தடுப்புப் பணியில் சித்த மருத்துவத்தின் பங்கு

டாக்டர் எஸ். சிதம்பரதாணுப் பிள்ளை

சித்த மருத்துவம், நோய் அகற்றும் விஞ்ஞானம் மாத்திரமல்ல; நோய்த் தடுப்புக் கலையும் ஆகும். இதனால்தான், நம் முன்னோர் சித்த மருத்துவத்தை 'சிந்தாமணி' என்று பெயர் சூட்டி அழைத்தார் போலும்; சித்தமருத்துவ சிகிச்சை எளிதானது; நினைத்த வேளையில் செய்யக்கூடியது; செலவு குறைந்தது; நிறைந்ததும், நிரந்தரமானதுமான பயன் அளிப்பது; உயிர் வளர்க்கும் கலை; தத்துவம் செறிந்த ஜீவக்கலை. சுருங்கக் கூறின், சித்த மருத்துவம் உடலுக்கும், உயிருக்கும் உய்வளிக்கும் தெய்வீகக்கலை.

## மனிதனின் நிரந்தர சொத்து

பிறவி எடுத்த மனிதனுக்கு, அவன் மண்ணில் வாழும் நாள் மட்டும் நிரந்தரமாக இருந்துவரும் சொத்து அவன் உடல் மாத்திரமே. விலை மதிக்க முடியாத உடலைப் பெற்ற மனிதன், உடலை நலமுடன் வைத்துக்கொள்ளும் உபாயம் தெரிந்திருக்க வேண்டியது அவசியமல்லவா? நலமுள்ள உடலால் மாத்திரமே, இப்பிறப்பின் பூரண இன்பத்தை அனுபவிக்க முடியும். இளமையில் மனம்போல், தாறுமாறாக நடந்து, நோய்வாய்ப்படுகின்றனர். கடைசியாக, உடலைப் பேணும் அறிவைப் பெறுவதால் யாதொரு சிலாக்கியமும் ஏற்படாது. இது, ''கணகெட்டபின் சூரிய நமஸ்காரம்'' செய்வதற்கு ஒப்பாகும். எனவே இநத அருமையான உடலைச் செம்மையாக வைத்துக் கொள்ளும் நலவாழ்வுக் கலையைச் சிறு வயது முதல் தெரிந்திருத்தல் இன்றியமையாததாகும்.

## உடல் வகுப்பும், நலம் பேணும் வழிகளும்

பிறவியின் தன்மைக்கேற்ப, மனிதரின் உடலை, வாத, தேகம், பித்த தேகம், சிலேற்பன தேகம், தொந்தத் தேகம் என்று தமிழ் மருத்துவம் வகுத்துள்ளது. பல்வேறு காரணங்களால் உடல் கூறுகள் குறையவோ, கூடவோ செய்கின்றன. இந்தப் பேதத்தை நோய் என்கிறோம். இதைச் சமநிலைப்படுத்த உணவு, செய்கை, சூழ்நிலை முதலியவற்றின் சில கட்டுப்பாட்டைப் பின்பற்ற வேண்டியதோடு, உடலில் ஏற்படும் உபாதைகளை அகற்ற சில பதார்த்தங்களைச் சேர்த்தல் வேண்டும். உதாரணமாக, வாத உடம்புடையோர் குளிர்ப்பிரதேசங்களில் வாழ நேர்ந்தாலோ, குளிர்ப் பதார்த்தங்களை அதிகம் சாப்பிட நேர்ந்தாலோ, உடல் நலம் குன்றும். சமசீதோஷ்ண நிலையில் வாழ்தலும், சூடான பதார்த்தங்களைப் புசித்தலும் சிறப்பூட்டும். அப்படியே, குளிர்ப்பிரதேசத்தில் வாழ நேர்ந்தால், வாழும் சூழ்நிலை எப்படி அமைய வேண்டும், உடலை எப்படிக்காக்க வேண்டும், எந்த எந்த உணவைச்சாப்பிட வேண்டும், முதலிய கருத்துக்களைத் தழுவுவது வேண்டற் பாலது. இதனால் வாத உபாதைகளுக்கு ஆளாகாது வாழலாம். பிறவி எடுத்த மனிதன் தன் வாழ்க்கையை இயற்கையோடு இயைந்து அமைக்க, வாழ்வு இனிமையாக இருக்கும். இந்த இரகசியத்தை, சித்த மருத்துவக் கருவூலங்களில் காணலாம்.

## உணவே மருந்து, மருந்தே உணவு

தமிழக மக்கள் செய்யும் பல்வேறு உணவு வகைகளையும் அவற்றின் ருசியையும் எந்த நாட்டிலும் காணமுடியாது. இது தமிழர் பண்பாட்டிற்கும், நாகரிகத்திற்கும் முக்கிய முத்திரையாகும். நம் பெண்கள் உணவு தயாரிப்பில் பின்பற்றும் சில மாற்றங்களால் நம் உடலின் நலன் செம்மை பெறுகின்றது. அதாவது, ஒவ்வாத பதார்த்தப் பொருட்களை நீக்குவதிலும், ஆற்றல் மிகும் பதார்த்தங்களைச் சேர்ப்பதிலும் நம் பெண்கள் கைதேர்ந்து விளங்குவதைக் காண்கிறோம்.

உடலில் ஏற்படும் அலுப்பு, சுரம், நடுக்கம், அசீரணம் போன்ற திடீர் உபாதைகளுக்கு சுக்கு-மிளகு-திப்பிலி எனும் திரிகடுகைச் சூரணமாகவோ, கஷாயமாகவோ அருந்த நலமேற்படுகிறது. தொண்டையில் கரகரப்பு, ஒலிப்பிடிப்பு, நீரேற்றம் எழும்போது பாலில் மிளகு, மஞ்சள், பனங்கற்கண்டு சேர்த்துக் காய்ச்சிப் பருக, அவை மாயும். வாந்தி ஏற்பட்டால் தனியாவை, காப்பிபோல் கஷாயமிட்டு அருந்த அதுவும் போகும். சுண்ணாம்பில் சுக்கைப் பொதித்து சுட்டு எடுத்துப் பொடித்து, தேனில் தர, பேதி பிடிக்கும். அடிக்கடி பேதிக்கு வந்தால், மஞ்சளைச் சுட்டுப் பொடித்து தேனில் கலந்து சாப்பிட, அதுவும் குணப்படும். வயிறு உப்பிசப்பட சுக்கு நீரைப்பருக அது நலப்படும். சில விடங்களினாலோ அடியிடிபடுவதாலோ, உறுப்புகளில் வீக்கம் ஏற்பட, மிளகும்சுக்கும் சுடுநீரில் மைபோல் அரைத்துக் கொதிப்பித்துப் பூச நலமேற்படும். இதுபோன்ற எண்ணற்ற பண்டுவங்களை நம் வீட்டுப்பெண்கள் செய்து வருகின்றதைப் பார்க்கிறோம். . எனவே, சித்தமருத்துவத்தை நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கைத் துணைக் கல்வியெனக் கற்று நடைமுறையில் பின்பற்ற, கோடிப்பயனுண்டு. நினைத்தற்கெல்லாம் மருத்துவரைத் தேடி நாடி, பணத்தையும், நேரத்தையும் வீணாக்காது, தன் கையே தனக்குதவி என்று பாங்குடன் நாம் வாழத்துணிதல் அறிவுடைமையல்லவா?

மனித நலமின்மை பல மட்டங்களைச்சாரும். சிறு தவறுகளைச் சிலபோது பொறுக்கும் தன்மை உடலுக்குண்டு. ஆனால் பல தவறுகளைப் பல வேளை செய்ய நம் உடல் பொறுமை இழந்து விடுகிறது.

'பசி' என்பது வயிற்றுள் உற்பத்தியாகும் ஒருசில அமிலங்களின் சுரப்பால் எழும் ஒருவகை உணர்ச்சி. இந்த அமிலங்கள் நாம் சாப்பிடும் உணவுகளைச் செரிக்கப் பயன்படுகின்றன. மதியம் சாப்பாடு ஒரு மணிக்குச் சாப்பிட வேண்டும். ஆனால், சிலர் வேளாவேளைக்குச் சாப்பிடுவதில்லை. 3 மணி, 4 மணி என்று காலத்தை வரையறாது சாப்பிடுகின்றனர். இதனால் 'பசி' என்பது மாய்ந்து போகிறது. வயிற்றில் சுரக்கும் அமிலங்கள் வயிற்றின் பாகத்தையே அரித்துப் பல்வேறு பிணிகளை உருவாக்குகின்றன.



மருந்துப் பொருட்கள் சேமிப்பு

'ஆதி நூலில்' உலகில் மனிதர்கள் பிணிவாய்ப்பட்டு அல்லலுறும் காரணத்தை உமையாள் சிவனிடம், ''மனிதனைப் படைத்து வன் பிணியூட்டுதல் ஏன்?'' என்று கேட்க சிவன் மனிதனுடையநோய்களுக்குக் காரணம் மனிதனே'' என்பதை, 'அடம்பட நின்ற மடம்படு மாக்கள் தம்மா லின்றி, நம்மேல் குற்றம் இலை'' யென இரத்தினச் சுருக்கமாய்க் கூறியது சிந்திக்கவல்லது.

உடலில் உறைந்த நோய், சக்தி வாய்ந்த அயல் நாட்டு மருந்தால் கூட அகலுவதில்லை. மருந்தின் வன்மையால் நோயின் சூரத்தனம் அப்போதைக்கப்போது அடங்கி நிற்கிறது. அடுத்து, அதன் தன்மையைக் காட்டிய வண்ணமாய் இருக்கும். இதைக் கண்கூடாகக் காண்கிறோம். இதனால் தான், ''நோய்க்கு இடம் கொடேல்'' என்ற தாரக மந்திரத்தை நம் முன்னோர்கள் ஓதிச் சென்றார் போலும்.

'நலவாழ்வுக்கு நோய்த்தடுப்பு' ஒரு சிறந்த திட்டம் மாத்திரமல்ல, நிரந்தரமானதும்கூட, இது இளஞ் சந்ததியரை - ஏன் வருங்கால இந்தியாவை நலவாழ்வில் நடத்திச் செல்லப்பயன்படும் கலங்கரை விளக்காகும்.

இப்போது தேவைப்படுவதெல்லாம் இயற்கை வாழ்வு என்றால் என்ன? ஏன் மனிதன் நோய்வாய்ப் படுகின்றான். உணவு அடிப்படையில் உடல் நலம் பேணுவதெப்படி? உடல் உபாதைகள் வராதிருக்க, என்னென்ன பின்பற்ற வேண்டும்; எளிய வாழ்க்கையிலும், சுகாதார விதிமுறைகள் என்ன? என்பனவற்றைக் காலதாமதமின்றி சிறியோர்-பெரியோர், ஆண்-பெண் என்ற எல்லா நிலையினரும் கற்றுணர வேண்டும்.

# விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கான தொகுதிக் காப்பீட்டுத் திட்டம் என்னும் மத்திய அரசின் திட்டம் 1987 ஆகஸ்ட் முதல் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் ஒத்துழைப்புடன் தமிழ் நாட்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்து அதற்கான விரிவான வழிமுறைகளையும் அரசு தற்போது வெளியிட்டுள்ளது.



மத்திய அரசின் இத்திட்டத்தின் கீழ் 18 வயது முதல் 60 வயது வரையிலான நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஆயுள் பாதுகாப்பு கிடைக்கும். இத்திட்டத்தின்கீழ், நிலமற்ற விவசாயத் தொழிலாளி ஒருவர் இறந்துவிட்டால், அவரது நியமனதாரருக்கு ரூ. 1000 இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தால் வழங்கப்படும். ஒவ்வொரு நிலமற்ற விவசாயத் தொழிலாளரின் குடும்பத்திலும், ஒருவர் மட்டுமே இத்திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ளப்படுவர். இத்திட்டத்தின் கீழ் நிலமற்ற விவசாயத் தொழிலாளர், பிரிமியம் செலுத்தத் தேவையில்லை. பிரிமியத்திற்கான தொகையை மத்திய அரசே இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு நேரடியாகக் கொடுக்கும்.

இத்திட்டம், தமிழ்நாட்டில் வருவாய்த் துறையின் மூலம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் சேர்த்துக்கொள்ளப்படத் தகுதியுடைய நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்களால் கண்டறியப்பட்டு, அத்தகையோருக்கு சம்பந்தப்பட்ட வட்டாட்சியரின் கையெழுத்துடன் கூடிய ''அடையாள அட்டை'' ஒன்று வழங்கப்படும். இத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள நிலமற்ற விவசாயத் தொழிலாளி ஒருவர் இறந்துவிட்டால், அவரது நியமனதாரர் இறப்புச் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை ஆகியவற்றைத் தாக்கல் செய்தால், அவருக்கு, இறந்தவருக்குரிய பணத்தை, சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் மூலமாக, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் வழங்கும்.

# திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் திட்டப் பணிகள்



திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் திட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அவசியத் திட்டங்களை நிறைவேற்ற இம்மாவட்டத்திற்கு ரூ. 30 இலட்சம் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

நிறைவேற்றப்பட இருக்கும் திட்டப்பணிகளின் விவரம் வருமாறு:—

1. திருநெல்வேலி நகராட்சி, திருநெல்வேலி சந்திப்பில் மீனாட்சிபுரம், கைலாசபுரம், சிந்துபூந்துறைப் பகுதிகளிலிருந்து சாக்கடை நீர் தாமிரபரணி ஆற்றில் கலக்கிறது. இதைத் தடுப்பதற்காக ரூ. 2.62 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது.

2. மணிமுத்தாறு அரசு மீன் பண்ணையில் நவீன முறையில் உற்பத்தியை அதிகரிக்க ரூ.5 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது.

3. தென்காசி ஊராட்சி ஒன்றியத்தில் மந்தலம்பாறை கிராமத்தில் ஆதிதிராவிட மக்கள் இடுகாட்டிற்குச் செல்ல ஓடையைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது. இதனால் மூன்று கிராம மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்தச் சிரமத்தைப் போக்க இந்த ஓடையின் குறுக்கே சிறுபாலம் அமைக்க ரூ.75 ஆயிரம் அரசு அனுமதித்துள்ளது.

4. கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் இரவண சமுத்திரம் கிராமத்தில் இரவண சமுத்திரம் வழியே செல்லும் வீராநதியில் மழைக் காலங்களில் தண்ணீரினால் அருகிலுள்ள சாலை அரிக்கப்பட்டு உபயோகப்படுத்தமுடியாத நிலை உள்ளது. ஆகவே வீரா நதியின் கரை ஓரமாக வெள்ளத்தடுப்புச் சுவர் கட்ட ரூ.1.70 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது.

5. களக்காடு ஊராட்சி ஒன்றிய தேவநல்லூர் கிராமத்தில் பச்சையாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்ட ரூ. 6 லட்சம் அனுமதிக்கப்பட்டு உள்ளது.

6. பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தச்சநல்லூர், வேலன்குளம் கிராமங்களில் சிறிய பாலங்கள் கட்ட ரூ. 10 இலட்சம் வழங்க அரசு அனுமதித்துள்ளது.

7. வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம் பழவூர் கிராமத்தில் காட்டாற்று வெள்ளத்தினால் கிராமத்திற்குள் நீர் புகுந்து குடிசைகளும், கால்நடைகளும் அடித்துச் செல்லப்படுகின்றன. இதைத் தடுக்க 300 மீட்டர் தூரத்திற்கு தடுப்புச்சுவர் கட்ட ரூ.3 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

8. இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம் மலையான் குடியிருப்புப் பகுதியில் காட்டு ஓடையில் வரக்கூடிய மழை நீரைத் தடுக்க ஏற்கனவே 100 மீ. அளவில் தடுப்புச் சுவர் உள்ளது. இதை மேலும் உயர்த்திக் கட்ட ரூ. 15 ஆயிரம் அரசு அனுமதித்துள்ளது. இதனால் நீர் கடலில் சேர்ந்து விடாமல், அருகிலுள்ள 7 குளங்களில் நிரம்பி, 1000 ஏக்கர் பரப்பு கூடுதலாகப்பாசனம் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

9. மானூர் ஊராட்சி ஒன்றியம் சுத்தமல்லி கிராமத்தில் தாமிரபரணி நதியில் வடக்குக் கரையின் கீழ்ப்பக்கம் வயல்கள் உள்ளன. இக்கிராம மக்கள் வயல் வேலைகளில் ஈடுபட இக்கால்வாயின் குறுக்கே ஒரு சிறிய பாலம் கட்ட ரூ. 68 ஆயிரம் அரசு அனுமதித்துள்ளது.

## தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டக்கூடுதல் திட்டம்

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக அதிகப்படி மானியமாக அரசு ரூ.75.12 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தொகையில் 494 தொகுதி வீடுகள், 1 பள்ளிக் கட்டடம், 11 குடிநீர்க் கிணறுகள், 29 கசிவு நீர்க்குட்டைகள், 37 கழிவு நீர்க்கால்கள், 10 வெள்ளத்தடுப்புச் சுவர்கள், 6 சாலை வேலைகள் மற்றும் 5 இதரப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. தவிரவும் இத்தொகையில் ரூ. 12.54 இலட்சத்திற்குப் பேரூராட்சிப் பகுதிகளில் சாலைகள் மற்றும் கழிவு நீர்க் கால்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

## தொகுதி வீடுகள்

பல்வேறு திட்டங்களில் 1987-88இல் தேசிய ஊரக வேலை வாய்ப்பு மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டங்களின் கீழ் 2,741 தொகுதி வீடுகள் கட்டுமானப் பணி தொடங்கப்பட்டு, அவற்றில் 1,830 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகள் விரைவில் கட்டி முடிக்கப்பட்டுவிடும்.

| | மேற்கொள்ளப்பட்ட வீடுகள் | முடிக்கப்பட்ட வீடுகள் |
|---|---|---|
| தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம். | 1,177 | 971 |
| ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டம். | 1,020 | 859 |
| கூடுதல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம். | 494 | இல்லை |

## சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம்

29.2.88 முடிய சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் இவ்வருட ஒதுக்கீடு 665 நபர்களில் 600 நபர்களுக்கு வெவ்வேறு தொழில் இனங்களில் பயிற்சி முடிவடைந்துள்ளது. இன்னும் 65 நபர்களுக்குப் பயிற்சி முடிவடைந்துவிடும்.

இந்த நபர்களுக்குச் சுயமாகத் தொழில் செய்வதற்காகத் தொழிற்கருவிகள் ரூ. 500 வீதம் 564 நபர்களுக்கு ரூ. 2,82,000 செலவில் இலவசமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த நபர்கள் சுயவேலை வாய்ப்புப் பெற நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியின் மூலம் 329 நபர்களுக்குக் கடன் மனுக்கள் பெறப்பட்டு, கடன் தொகை வழங்கப்படுகிறது.

இம்மாவட்டத்திற்கு 1987-88 சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்திற்கு அரசு நிதி ஒதுக்கீடு ரூ. 11,84,750. இதுவரை (25.2.88 முடிய) செலவு செய்த தொகை ரூ. 10,80,871.



ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப்பணிகள்

திருநெல்வேலி, கட்டபொம்மன் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழ் 1987-88ஆம்ஆண்டிற்குரூ.212.846 இலட்சம் அனுமதிக்கப்பட்டு இதுவரை ரூ.208.447 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இத்தொகையில் 15.3.88 முடிய ரூ. 205.99 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதனால் 12,296 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

1987-88ஆம் ஆண்டிற்கு திரள் வேளாண்மைத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. 68.180 இலட்சம். ரூ. 57.558 இலட்சம் இதுவரை பெறப்பட்டுள்ளது. ரூ. 34.220 இலட்சம் 15.3.88 முடிய செலவிடப்பட்டுள்ளது. இதனால் 1,129 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1987-88-ஆம் ஆண்டிற்கு ரூ. 156.860 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ. 156.860 இலட்சம் பெறப்பட்டுள்ளது. மேலும் இவ்வாண்டிற்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு ரூ. 75.160 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 15.3.88 முடிய ரூ. 177.092 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக அடைந்த மனித நாட்டிறன் எண்ணிக்கை 14.68 இலட்சமாகும்.

கிராம நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 1987-88ம் ஆண்டிற்கு ரூ. 154.89 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ. 138.77 இலட்சம் பெறப்பட்டு அதில் 15.3 88 முடிய ரூ. 136.030 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக அடைந்த மனித நாட்திறன் எண்ணிக்கை 11.85 இலட்சம் ஆகும்.

## குடிநீர்த் திட்டம்

வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கு, குடிநீர்த் திட்டத்திற்கு ரூ. 216.907 இலட்சமும்,வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு ரூ. 116.625 இலட்சமும், ஆக ரூ. 333.532 லட்சம் ஒதுக்கப்பட்டது.

குடிநீர்த் திட்டத்தில் கிணறுகள் ஆழப்படுத்துவதில் 620 வேலைகளும், புதிய கிணறுகள் வெட்டுவதில் 44 வேலைகளும், உறைக் கிணறுகள் அமைப்பதில் 37 வேலைகளும், குடிநீர்த் திட்ட மேம்பாட்டு வேலைகள் ஐந்தும், இத்திட்டத்தின் கீழ் தனி மின் இணைப்பு வேலை ஒன்றும், ஆழ்குழாய்க் கிணறுகள் தூரெடுத்தலில் 174 வேலைகளும், ஆழ்குழாய்க் கிணறு அமைப்பதில் 446 வேலைகளும் ரூ. 211 இலட்சம் செலவில் இதுவரை செய்து முடிக்கப்பட்டுள்ளன.


வேலை வாய்ப்புத் திட்டத்தில் குளங்கள், ஊருணிகள் தூரெடுத்தல் 767 வேலைகளும், மண் வள்ப்பாது காப்பு வேலைகள் 73, சமூக நலக் காடு அமைப்பு வேலைகள் நான்கும் இதுவரை செய்து முடிக்கப்பட்டுள்ளன. அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்த மழையின் காரணமாக குளங்கள், ஊருணிகள் தூரெடுக்க இயலாததால் கச்சா சாலைகள் அமைக்க ரூ. 15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்தத் திட்டத்தில் 51 வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இன்னும் 59 வேலைகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 116.62 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் இராதாபுரம் மறறும் நாங்குநேரி வட்டங்களைத் தவிர மற்ற வட்டாரங்களில் தற்போது குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் ராதாபுரம் மற்றும் நாங்குநேரி வட்டங்களில் மட்டும் மார்ச் மாதத்தில் இருந்து குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படலாமென்று கருதுவதால், கீழ்க்கண்ட விபரப்படி குடிநீர் விநியோகம் மற்றும் வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டங்களுக்கு ரூ. 81 இலட்சம் நிதி அளிக்கக் கோரி அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

இதில் முதல் கட்டமாக 30 ஆழ்குழாய்க் கிணறுகள் புதிதாகத் தோண்டுவதற்கு அரசினால் உத்தரவிடப்பட்டு ராதாபுரம் வட்டாரத்தில் 20 ஆழ்குழாய்க் கிணறுகளும், வள்ளியூர் வட்டாரத்தில் 6 ஆழ்குழாய்க் கிணறுகளும், நாங்குநேரி வட்டாரத்தில் 4 ஆழ்குழாய்க் கிணறுகளும் தோண்டுவதற்குத் துவக்கப்பட்டுக் குடிநீர் வடிகால் வாரியத்தால் வேலை நடைபெற்று வருகின்றது.

நடப்பு நிதியாண்டில் (1987-88) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் கிராமக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக 209 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்குடிநீர்த் திட்டங்களுக்காக சுமார் ரூ. 200 இலட்சம் செலவாகும் எனக் கணக்கிடப்பட்டு திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை 128 கிராமங்களில் திட்டப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதர கிராமங்களில்திட்டப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதுவரை முடிக்கப்பட்ட திட்டங்கள் மூலம் சுமார் 71,828 மக்கள் பயனடைகிறார்கள். இத்திட்டங்களுக்கு இதுவரை ரூ.184.23 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**தகவல்: எம். அண்ணாமலை**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருநெல்வேலி.**




# நவீன ரகத் தேனீப்பெட்டி

மரத்தினால் செய்யப்பட்ட தேனீப் பெட்டிகளைத்தான் நாம் இதுவரை பார்த்திருக்கிறோம். ஆனால் களி மண்ணால் செய்யப் பட்ட நவீன ரக தேனீப்பெட்டி ஒன்று தற்சமயம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இந்தப் புதுரக தேனீப் பெட்டி விலையில் குறைந்ததாகவும் தயாரிப்பதற்குச் சுலபமாகவும் இருப்பதாகக் கருதப்படுகிறது.

தருமபுரி மாவட்டம் பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சிந்தகம் பள்ளியில் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் ராணி தேனீ உற்பத்தி ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தின் முதுநிலை தேனீ களப்பணியாளர் திரு குமாரவேலு என்பவர்தான் இந்த நவீன ரக களிமண் தேன் பெட்டியை உரு வாக்கியிருக்கிறார். இந்த களிமண் நவீனரக தேனீப் பெட்டியை தயா ரிக்கக் குறைந்த அளவிலான மூல தனமே போதுமென்று கூறுகிறார். மேலும் தற்போது உபயோகத்தி லிருக்கும் மரப்பெட்டியுடன் ஒப் பிடும்போது, இந்த களிமண் பெட்டி யின் தயாரிப்புக் கூலியும், தயாரிப்பு நேரமும் குறைவானதே என்கிறார். பாரம்பரிய மரப்பெட்டியைவிட இந்தக் களிமண் தேனிப்பெட்டியின் உபயோகங்களும் மிக அதிகம்.

பொதுவாகவே களிமண் துவா ரங்கள் சுவர் வெடிப்பு, உடைந்த பானை மற்றும் மரப்பொந்து போன்றவற்றைத்தான் தேனீக்கள் இயற்கையாக வாழத் தேர்ந்தெடுக் கும். இந்த நவீன ரக மண்பெட்டி இயற்கையோடு ஒட்டியதால், மரப் பெட்டிகளில் நடைபெறுவதுபோல் அடிக்கடி பிரிந்து ஓடாமல் இந்தக் களிமண் பெட்டிகளை இயற்கைக்கு ஒத்ததாகக் கருதி, சுதந்திரமாகச் செயல்படுவதுடன் அதிக அளவில் இனவிருத்தியும் செய்து கொள்ளும். இந்த நவீனப் பெட்டி உள்ளூர்க் களிமண்ணாலேயே செய்யப்படுவ தால், இதற்கு அதிக முதலீடோ அல்லது உள்கட்டமைப்போ தேவை யில்லை. தற்சமயம் உபயோகத்தி லிருக்கும் மரப்பெட்டியை நன்றாக பராமரித்தாலொழிய அவை அதிக ஆண்டுகள் உழைப்பதில்லை. அவற்றை அடிக்கடி வர்ணம் பூசி, மழை ஈரக்காற்று படாமல் பாது காக்க வேண்டும். மேலும் இந்தப் பராமரிப்புக்குக் கூடுதல் செலவும் செய்ய வேண்டும். ஆனால் நவீன ரக மண்பெட்டிக்கு இத்தகைய பராமரிப்பு தேவையில்லை. ஒரு முறை தேனீக்களைப் பிடித்து இதில் போட்டுவிட்டால், இதை நிரந்தர மாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மரப்பெட்டிகளை விட்டு தேனீக்கள் அடிக்கடி வெளியேறி விடுவதால் இதனால் கிடைக்கும் தேனின் அளவும் மிகக்குறைவே. மாறாக இந்த நவீனரகக் களிமண் பெட்டிகளோ இயற்கையாகவும் தேனீக்களுக்கு உகந்ததாகவும் இருப்பதால், தேனீக்கள் அவற்றை விட்டு அவ்வளவு சுலபமாக வெளி யேறுவதில்லை. இதனால் அதிக அளவில் தேன் கிடைப்பதோடு, இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள வர்களுக்குக் கணிசமான தொகை யும் வருமானமாகக் கிடைக்க வழி யுண்டு.

இந்தக் களிமண் பெட்டிகள் கிராமப்புற மக்களுக்கு மிகவும் அதிகமாகப் பயன்படுவதால் இதை ஒரு சிறு தொழிலாக ஏற்றுக் கொள்ளலாம். கிராமப்புறங்களில் இத்தகைய குறைந்த விலையிலான மண் தேனீப் பெட்டிகளை அறி முகப்படுத்துவதால் கிராமத்தி லுள்ள ஒவ்வொரு குடும்பமும் இத னால் பயன்பெறுவதுடன் ஒரு கணிசமான வருமானத்தை நிரந் தரமாகப் பெற்று தங்களின் வாழ்க் கைத் தரத்தையும் உயர்த்திக் கொள்ள முடியும்.


**தகவல் :**

**ஜோ. சந்திரன்,**

**உதவி மக்கள் தொடர்பு அலுவலர், (செய்தி) தருமபுரி.**

புதுக்கோட்டைச் சந்தைக்கு வடக்கே உள்ள குளம் ''அக்சாகுளம்'' எனத் தற்போது வழங்கப் படுகிறது. ஆனால் இதன் பெயர் ''அக்கச்சிக் குளம்' எனக் கல்வெட்டுகள் மூலம் தெரிய வரு கிறது. ''அக்கச்சி'' என்பவள் கி.பி. 16ஆம் நூற் றாண்டில் விஜயநகரப் பேரரசின் படையிலிருந்த பெண் தளபதி; அவரது நினைவாக இக்குளம் பெயர்பெற்றது. தற்பொழுது பெயர் மருவி வழங் கப்படுகிறது.

தமிழ்நாட்டிற்கு வருகை தந்த மேதகு குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்களைச் சென்னை விமான நிலையத்தில் மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் வரவேற்றார். (7-4-88)




# படமும் செய்தியும்



கடற்படைக் கொடி தின வசூலை மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் 5.4.88 அன்று சென்னையில் நிதி வழங்கித் தொடங்கி வைத்தார்.


ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ்.எஸ். சித்து அவர்கள் குமரிமுனையில், 30.3.88 அன்று 40-வது சுதந்திரநாள் ஓட்ட ஜோதியை ஓட்டவீரர்களிடம் கொடுத்துத் தொடங்கி வைத்தார். இந்த ஜோதியைக் குமரிமுனையிலிருந்து குருவாயூர் வரை ஓட்ட வீரர்கள் எடுத்துச் செல்வர்.







மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கூட்டத்தை மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் 8.4.88 அன்று சென்னையில் தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்.








தமிழக அரசின் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கான கருத்தரங்கத்தை ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ். எஸ். சித்து அவர்கள் 25.3.88 அன்று சென்னையில் தொடங்கி வைத்தார்கள். செய்தி மற்றும் சுற்றுலாத்துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலர் திரு சி. என். ராம்தாஸ் இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார்.

# காந்தி கண்ட உப்புச் சத்தியாக்கிரகம்



புலவர் கி. துரைசாமி

பொன்விளை தாய கத்தை
    புவிபுகழ் பார தத்தை
அன்னிய வெள்ளை யர்கள்
    ஆள்வதா என்றே வெம்பி
தன்மனம் பொறுத் திடாது
    தகவுடன் எழுந்த அண்ணல்
உன்னத அகிம்சைப் போரை
    உறுதியாய் மேற்கொண் டாரே!

வெள்ளையர் லார்டு இர்வின்
    வாய்த்ததோர் வைசி ராமாம்
உள்ளத்தை உலுக்க வைக்கும்
    உப்புறும் வரியால், செல்வம்
கொள்ளையே போகா வண்ணம்
    வரிகொடா இயக்கம் ஒன்றே
வெள்ளையர்க் கெதிராய்க் கொள்ள
    விடுத்திட்டார் காந்தி. அஞ்சல்!

காந்தியின் அஞ்சல் கண்டே
    கலங்கிய வைசிராய் நெஞ்சம்
ஏந்திய பிரிட்டன் ஆட்சிக்(கு)
    எதிர்குற்றம் இதுவென் றப்பால்
சாந்தத்தை விடுத்து பரங்கி
    அரசுடை அறிக்கை ஒன்றால்
காந்தியை எச்ச ரித்து
    கடுஞ்சினம் ஊட்டி னாரே!

திக்கெட்டும் சுதந்தி ரத்தீ
    தெருவெல்லாம் பற்றிப் பொங்க
தக்கதோர் பாடம் தன்னை
    பரங்கிக்குப் புகட்ட அதைகாண்
இக்கணம் சொல்ல வேண்டும்
    என்பதில் முடிவில் காந்தி
மக்கள்முன் உப்பு சத்யாக்
    கிரகத்தை அறிவித் தாரே!

மோதிலால் மகனார் நேரு
முழுமன துடனே காந்தி
ஒதிய தண்டி யாத்ரை
உலகினில் வெற்றி காண
போதிய தொண்டர் படையும்
புறப்பட பாத யாத்ரை
நீதியின் பாதை வாழ்த்தி
நேர்மையாய் அனுப்பி வைத்தார்!

அண்டங்கள் அதிர, காந்தி
அறிவித்த ஆணை கேட்டு
தண்டியாத் திரைக்கு ஒப்ப
தனிப்படை தன்னுட் கொண்டே
மண்டலம் கிடுகி டுக்க
மாநிலம் அதிர தம்மின்
தொண்டரும் நடந்து போனார்
இருநூற்று நாற்ப தாம்கல்.

சத்தியம் முன்னால் செல்ல
சரித்திரப் படைகள் பின்னால்
கத்தியும் ரத்த மின்றி
புத்தியால் வெல்வோம் என்று
வித்தகர் இளைஞர் பல்லோர்
வீரமும் நரைமூப் புற்றோர்
உத்தமத் தண்டி என்னும்
ஊரினை அடைந்தார் அன்றோ!

ஒலித்தது காந்தி சங்கம்
மூன்றுல கத்தோர் கேட்ப!
எலியது கடல்போல் கூடி
நாகமுன் பட்ட பாடாய்
அலிஒக்கும் பரங்கி ஆட்சி
அஞ்சிட காந்தி யுத்தம்
வலியதே என்று காந்தி
வாரிசைச் சிறையில் வைத்தார்.

கொண்டதோர் எண்ணம் வெற்றி
குலைவதோ பரங்கி ஆட்சி
தண்டியாத் திரையில் காந்தி
தான்கொண்ட விரதம் வெல்ல
மண்டலம் கொதிக்க நாட்டு
மக்கள்தாம் துயரில் வீழ
தண்டியாத் திரையால் வென்றார்
தாயகம் மீட்புத் தானே!

உலகிற்கே மறையைத் தந்த
உயர்தமிழ் நாட்டி னூடே
கலக்கிய உப்பு சத்யாக்
கிரகத்தில் வேதா ரண்யம்
துலக்கிய கொள்கை கண்டு
தூய்மையாம் தமிழர் மக்கள்
நிலவுல கனைத்தும் போற்ற
நீள்புகழ் படைத்தார் அன்றோ!



# லைப்பாய் இருக்குமிடம்... அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!




**லைப்பாய்**

**அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது**

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS L 98 203 TM




# மூதறிஞர் பிறந்தநாள் விழா

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பாக, மாநில அளவிலான மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா மற்றும் 40-வது ஆண்டு சுதந்திர. தின நினைவு இராஜாஜி நீச்சல் குளம் திறப்பு விழா தர்மபுரி இலக்கியம்பட்டியில் 26.3.'88 அன்று நடைபெற்றது. விழாவுக்குத்தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மோகன் வர்கீஸ்சுன்கத், இ.ஆ.ப. அவர்கள் தலைமை தாங்கி மூதறிஞர் இராஜாஜி திருவுருவப் படத்தைத் திறந்துவைத்தார்.

விழாவினையொட்டி அமைக்கப்பட்ட இராஜாஜி புகைப்படக் கண்காட்சியை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வி.கனகராஜ் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் டாக்டர் சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

தமிழ்நாடு இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறை இயக்குநர் திரு ஏ. என். தியானேசுவரன், இ.ஆ.ப, அவர்கள் இராஜாஜி நீச்சல் குளத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். விழாவில் பாப்பிரெட்டிப்பட்டி, பெரிய தள்ளப்பாடி மற்றும் பெரும்பாளை ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகளில் விளையாட்டு மைதானங்கள் அமைக்க, ரூ. 94 ஆயிரத்துக்கான காசோலையை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மோகன் வர்கீஸ்சுன்கத்திடம் விளையாட்டுப் பயிற்சித்துறை இயக்குநர் வழங்கினார்.

முன்னதாக இராஜாஜி பேரன் திரு சேஷாத்திரிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

விழாவில் தருமபுரி மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் திரு ஜெகநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு வி. கனகராஜ், கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு கே. இராமமூர்த்தி, கிருஷ்ணகிரி அரசு மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் திருமதி ருக்குமணியம்மாள், தருமபுரி நகர மன்றத் தலைவர் திரு டி.என்.வடிவேலு, வழக்கறிஞர் திரு சி. கே. சீனிவாசராவ், திருச்செங்கோடு காந்தி ஆசிரமச்செயலர் திரு ஆராவமுதன், தருமபுரி சார் ஆட்சியர் திரு விஸ்வநாத் ஆகியோர் கலந்து கொண்டுசிறப்புரை ஆற்றினார்கள்.

விழாவில், செய்தி மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் திரு வி.டி.வீரப்பன் அவாகள் வரவேற்புரை நிகழ்த்த, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சி) திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

முன்னதாக நீச்சல் குளம் திறக்கப்பட்டதும், ஆசிய நீச்சல் விளையாட்டு வீராங்கனைகள் பவுசியா பேகம் மற்றும் சுனிதா, சபிலா ஆகியோர் கூடியிருந்த மக்களுக்குப் பல விதமான நீச்சல் பயிற்சிகளைச் செய்து காட்டினார்கள். விழாவின் முடிவில் தர்மபுரி மாவட்டக் காவல் துறையினரின் கரக ஆட்டமும், பள்ளி மாணவியரின் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றன.

## வியப்பூட்டும் பிரசங்கம்

ஆச்சாரியாரின் வேதாரண்ய உப்பு ஸத்தியாக் கிரக யாத்திரை புராணம் போல ஆகிவிட்டது. பொய்யாய், பழையதாய்ப் போய் விட்டது என்று அர்த்தமில்லை. தஞ்சைஜில்லா கலெக்டர் தார்ன் அவர்களின் அடாத, அர்த்தமில்லாத உத்தரவுக்கு ஆச்சாரியாரின் யாத்திரை தக்க பதிலாகும். கலெக்டரின் உத்தரவினால் ஏற்பட்ட கேவலமான, வெறுக்கத்தக்க அச்சத்தை, ஆச்சாரியார் ஜனங்களிடமிருந்து ஓட்டியதை ஜாலவித்தை என்றுதான் சொல்ல வேண்டும். என்ன அமரிக்கை! என்ன தைரியம்! என்ன சாதூர்யம்! எத்தகைய அழகான கிராமியப் பேச்சு! என்ன நகைச்சுவை,! எத்தகைய உருக்கம்! என்ன ரம்மியமான உபமானங்கள், உபகதைகள்! இவை யாவையும், ஆச்சாரியாரின் உப்பு சத்தியாக்கிரகயாத்திரைப் பிரசங்கங்களில் கண்டு வியந்தவர்களைக் கேட்டால்தான் மற்றவர்களுக்கு அது தெரியும்.

[வ.ரா. எழுதிய 'தமிழ்ப் பெரியார்கள்' என்ற நூலிலிருந்து].

# மீண்டும் உப்பு யாத்திரை ஏன்?

அண்ணல் மகாத்மா ஒரு பிடி உப்பை அள்ளிய அந்தக் கணத்தில்.....

மாபெரும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமே
சடசடவெனச் சரியத் தொடங்கியது.

இன்றைக்கு 58 ஆண்டுகளுக்கு முன்—

1930—மார்ச் 12-ந் தேதி
சபர்மதி ஆசிரமத்திலிருந்து சரித்திரம் காணாத ஒரு அகிம்சைப் படையெடுப்பை மகாத்மா தொடங்கினார். அந்த அணிவகுப்பை அகில உலகும் கூர்ந்து கவனித்தது.

இந்தியன் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத தேவை உப்பு. அந்த உப்புக்கு வரி. அதன் ஏகபோக விற்பனை உரிமை ஆங்கில அரசிடம். இதற்கு வகைசெய்யும் உப்புச் சட்டத்தை உடைப்போம்! பூரண சுதந்திரப் போருக்கு இந்த உப்புச் சத்யாக்கிரகம் ஒரு ஆரம்பச் சமிக்ஞை' என்றார் மகாத்மா!

மகாத்மா காந்தி காட்டிய சமிக்ஞையை தேசம் புரிந்து கொண்டது! புறப்பட்டது செயல்பட—

1930 ஏப்ரல் 6-ந் தேதி குஜராத் மாநிலம் தண்டி கடற்கரையில் ஒரு பிடி உப்பை அள்ளினார் மகாத்மா! உப்பு சத்தியாக்கிரகம் தொடங்கியது!

தேசமெங்கும் புதியதோர்
எழுச்சி பொங்கிப் பிரவாகித்தது!
மகாத்மாவின் அறைகூவலை அவருடைய செய்தியை தமிழ்நாடு உடனே ஏற்றது.
மூதறிஞர் ராஜாஜி தலைமையில் ஆங்கிலேய ஏகாதிபத்திய எதிர்ப்புக்கு ஒரு வடிவம் கொடுத்தது தமிழ்நாடு.

மகாத்மாவின் தண்டியாத்திரை போன்றே அவரது மனச்சாட்சியின் காவலர் என்று புகழப்பட்ட—மூதறிஞர் ராஜாஜி நடத்திய வேதாரணியம் யாத்திரையும் சரித்திரத்தில் இடம் பெற்றது.
1930-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி நகரிலிருந்து மூதறிஞர் ராஜாஜி தலைமை தாங்கிட வேதாரணியம் நோக்கிப் படை புறப்பட்டது!

இடையில் வெள்ளைக்கார ஏகாதிபத்திய அரசின் மிரட்டல்கள்; தண்டோரா மூலம் தடைஉத்தரவுகள்; சத்தியாக்கிரகப் படையினருக்கு உணவு அளித்தாலோ—தங்க இடம் தந்தாலோ—ஆறு மாதம் சிறைத்தண்டனை என்று தாரன் எனும் மாவட்டக் கலெக்டர் கொக்கரித்தான்!

தமிழக மக்கள் அந்த உத்தரவைத் துச்சமெனத் தூக்கி எறிந்தனர்.

சத்தியாக்கிரகப் படையினருக்குச் சாதி-மத—இன வேறுபாடு இன்றி உணவு-தங்கிட இடம் அளித்து மாபெரும் வரவேற்பை வழங்கியது தஞ்சைத்தரணி.

அத்தகைய நமது
தேசிய ஆவேசத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு
உப்புச் சத்தியாக்கிரகம்.

நாம் இந்தியர்! நமது தேசம் இந்தியா' எனும் புனித உணர்வு இமயம் முதல் குமரி வரை எங்கும் பொங்கியது!

'பூரண சுதந்திரம்' 'ஒற்றுமை' எனும்
மகாத்மாவின் மூலமுழக்கங்கள்—நடைமுறை
உண்மையாக மாறிட—
அடித்தளம் அமைத்தது
உப்புச் சத்தியாக்கிரகம்!

புவிக்குள்ளே முதன்மையுற்று முடிவிலாக் கீர்த்தி பெற்ற மகாத்மாவைப் போல இன்னொரு மனிதரை உலக வரலாற்றில் இதுவரை கண்டதுமில்லை, இனிக் காணப்போவதுமில்லை!

அந்த மகாத்மா காந்தியை
அவரது லட்சிய வழியை
இன்றைய தலைமுறைக்கு
நினைவூட்டிடவே

உப்புச் சத்தியாக்கிரகம் மீண்டும் நடத்திக் காட்டப்படுகிறது! சத்தியம் -அகிம்சை-சகோதரத்வம், சமநீதி போன்ற புனிதமான காந்திய குறிக்கோள்களை நெஞ்சில் நிலை நிறுத்திக்கொள்வோமாக!

வறுமை—ஏழ்மை
அறியாமை—வகுப்புவாதம்
தீண்டாமை—வன்முறை

போன்ற சமூகக் கொடுமைகளை அறவழியில்
எதிர்த்து வெற்றி கண்டிட
மகாத்மாவின் போதனைகளும்
உப்புச் சத்தியாக்கிரக வரலாறும்
நமக்கு உத்வேகம் அளிக்கட்டும்!

அமைதியும், செழுமையும் நிரம்பிய பாதையில்
மாபெரும் தேசமான பாரதத்தை நடத்திச்
செல்ல தேசிய இயக்கத்தில் எழுச்சி நதைன்
நமக்குத் தூண்டுகோலாக விளங்கட்டும்!

# சென்னையில் மனங்கவர் மலர்க் காட்சி

சென்னை மாநகராட்சியின் 63-வது ஆண்டு மலர்க் கண்காட்சி, 6.4.'88 அன்று சென்னை ஷெனாய் நகர், திரு.வி.க. பூங்காவில் மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

பசும்புல் தரை! அழகிய நீரோடை! எண்ணம் கவரும் வண்ண மலர்கள் வகை வகையாக, தொகை தொகையாக! நெடிய மரஞ்செடி கொடிகள்! வனப்பு மிக்க இயற்கைக் காட்சி! காணக் கண்கோடி வேண்டும்!

பெண்களை மலருக்கு ஒப்பிடுவார்கள். ஆனால், மலரே பெண்ணாகக் காட்சியளித்தால்? பதுமைப் பெண்கள் அவ்வாறு இங்கே காட்சியளித்தார்கள்.

காய்கறிகள் உணவாக மட்டும் தானா உபயோகப்படுகின்றன? கலை நுணுக்கத்தைக் காட்டவும் காய்கறிகளை இங்கே பயன்படுத்தி இருக்கிறார்கள்.

காரட்டைக் கொண்டு அசல் மீன் போலவே செய்திருக்கிறார்கள். இதேபோல, வெள்ளரிக்காயில் மயிலையும், கத்தரிக்காயில் ஆமையையும், வெங்காயத்தில் தாமரையையும், அன்னாசியில் அழகிய பறவையையும் உருவாக்கி அனைவர் உள்ளங்களையும் கவர்ந்து விட்டார்கள்.

விழாமேடையும் மலராகவே காட்சியளித்தது.

சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு எல்.எம்.மெனசஸ், இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், ''சென்னையில் வீட்டுச் சொந்தக்காரர்கள் அவர்களது வீட்டு எதிரில், சாலை ஓரத்தில் செடிகளை வைத்துப் பராமரித்துக் கொள்ள மாநகராட்சி அனுமதி வழங்கும்'' என்றார்.

தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு ஜீ. வி. இராமகிருஷ்ணா, இ.ஆ.ப. அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், ''கடந்த ஆண்டு 10 ஆயிரம் மரங்கள் மாநகராட்சி சார்பில் சென்னையில் நடப்பட்டன. இந்த ஆண்டு அதேபோல் 10 மடங்கு அதிகமாக ஒரு லட்சம் மரங்கள் நடத் திட்டமிடப்பட்டிருக்கிறது'' என்றார்.

மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்களின் துணைவியார் திருமதி அக்கம்மா அலெக்சாண்டர் அவர்கள், மிகச் சிறந்த முறையில் சாலைத் திட்டுப் பூங்காக்களைப் பராமரித்தவர்களுக்கும், சிறந்த முறையில் பெட்ரோல் பங்கைப் பராமரித்தவர்களுக்கும், சிறந்த முறையில் பராமரிக்கப்பட்ட சிறிய, பெரிய பூங்காக்களுக்கும், இதேபோல தோட்டக்கலைத்துறையில் சிறந்தவர்களுக்கும், மலர் அலங்காரப் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கும் பரிசுகள் வழங்கினார்.



மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''சென்னை நகரை இனி நாம் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். இது ஒவ்வொருவரின் கடமை. சுத்தமாக வைக்கும் பணியை அரசு மட்டும் செய்து விட முடியாது. பொதுமக்கள் ஒத்துழைத்தால் இதை வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியும்.

''சென்னை நகரைச் சுத்தமாக ஆக்கும் தீவிரத் துப்புரவுப் பணியின்போது, 12 ஆயிரம் டன் குப்பைகளும், 1000 டன் கட்டட இடிபாடுகளும் அகற்றப்பட்டன. 600 இடங்களில் சாலைகள் செப்பனிடப்பட்டிருக்கின்றன. 700 இடங்களில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டிருக்கின்றன. 3 ஆயிரம் தெரு விளக்குகள் எரிய வைக்கப்பட்டிருக்கின்றன.


''சென்னை நகரைச் சுத்தமான நகரமாகவும், சுகாதாரமாக வசிக்கக்கூடிய நகராகவும் ஆக்க, பொதுமக்கள் ஒத்துழைப்பைத் தரவேண்டும். உலகிலேயே அழகிய கடற்கரை மெரினாக் கடற்கரை. இது இறைவன் தந்த பரிசு. இதைநாம் ஒழுங்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்''.

தொடக்கத்தில், மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் திருமதி அக்கம்மா அலெக்சாண்டர், ஆளுநர் ஆலோசகர் திரு ஜி. வி. இராமகிருஷ்ணா, இ.ஆ.ப. ஆகியோர் மரக்கன்றுகளை நட்டனர்.

சென்னை மாநகராட்சி ஆணையர் திருமதி சாந்தாஷீலா நாயர், இ.ஆ.ப., அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசுகையில், ''சென்னை மாநகரைச் சுத்தமாக, சுகாதாரமாக, அழகு நகரமாக ஆக்கிட நாம் அனைவரும் உறுதி எடுத்துக்கொள்வோம்'' என்றார்.

ஆம். அழகிய மலர்களைப்போல, நாம் வசிக்கும் சென்னை மாநகரையும் சிங்காரச் சென்னையாக-சுகாதாரச் சென்னையாக -சுத்தமான சென்னையாக உருவாக்குவதற்கு நமக்கும் கடமை இருக்கிறதல்லவா?

—நமது செய்தியாளர்



# சாண எரிவாயு வளர்ச்சித் திட்டம்

ம. கனகசபாபதி, இ.ஆ.ப., அரசு இணைச் செயலர்

பாரதப் பிரதமரின் இருபது அம்சத்திட்டத்தில் தேசிய சாண எரிவாயு-வளர்ச்சித் திட்டம் ஓர் அம்ச மாகும்.

நாட்டிலுள்ள வன வளத்தைக் காப்பாற்றுவதற் காகவும், எளிய முறையில் சிறந்த எரிபொருள்களுக்கு வசதிகள் செய்து கொடுத்து, பெட்ரோலியப் பொருள் கள் வீணாவதைத் தடுக்கவும் சாண எரிவாயுத் திட்டம் மிக முனைப்பாகச் செயல்படுத்தப்படுகிறது. தவிர, கிராமச் சூழ்நிலைகள், சுகாதார நிலை காப்பாற்றப்படு வதற்கும் சாண எரிவாயு பெரிதும் துணை செய்கிறது.

தமிழ்நாட்டில் இதுவரை அமைக்கப்பட்டுள்ள சாண எரிவாயுக் கலன்களைப் பற்றிய புள்ளி விவரங்கள் வருமாறு:

| ஆண்டு | இலக்கு | சாதனை |
|---|---|---|
| 1981-82 | 3,500 | 1,327 |
| 82-83 | 3,000 | 4,644 |
| 83-84 | 5,000 | 6,750 |
| 84-85 | 10,000 | 17,549 |
| 85-86 | 13,000 | 18,859 |
| 86-87 | 13,120 | 19,335 |
| 87-88 | 13,000 | 13,639 |
| | | (1988 பிப்ரவரி வரை) |

சாண எரிவாயுத் திட்டம் தமிழ் நாட்டில் தீவிர மாகச் செயல்படுத்தப்படுகிறது. 1984-85ஆம் ஆண்டில் அனைத்திந்திய அளவிலே தமிழ்நாடு இரண்டாம் இடம் வகித்தது. 1985-86ஆம் ஆண்டில் மூன்றாம் இடத்தைப் பெற்ற தமிழகம், 1986-87ல் நாட்டிலேயே முதன்மையிடத்தைப் பெற்றது. அவற்றிற்குரிய பரிசு களையும் தமிழகம் அடைந்தது.

வரும் ஆண்டுகளிலும் அனைத்திந்திய அளவிலே முதலிடத்தையே தொடர்ந்து பெறுவதற்குரிய முயற்சி கள் நடைபெற்று வருகின்றன.

சாண எரிவாயுக் கலனைப் பயன்படுத்தி நன்மை பெற்ற திருமதி கே.ராமசாமி அவர்களை நாம் சந்திக் கிறோம்.

''சாண எரிவாயுக்கலத்தை என் கணவர் சர்க்கார் உதவியுடன் அமைத்துக் கொடுத்தார். பெரும் நன்மை யாக இருக்கிறது. எனக்கு சமையல் நேரம் மிகவும் குறைந்து விட்டது; அதிலும் சீக்கிரமாகவே சமையல் ஆகிவிடுகிறது. பாத்திரங்கள், சமையலறை சுத்தமா கவே உள்ளன; முன்பெல்லாம் எனக்கு இருமலும், அவ்வப்போது கண் எரிச்சலும் வருவது உண்டு; அவை சென்ற திக்குத் தெரியவில்லை''.

எனக்கு 52 வயதாகிறது. 2 ஏக்கர் நஞ்சை நிலம் உண்டு. ஒரு எருமையும் ஒரு பசுவும் இருக்கின்றன. அவற்றின் சாணங்களைத் தினமும் மாலையில் கரைத்து ஊற்றுகிறோம். இப்போது 14 மாதங்கள் ஆகிவிட்டன; ஆனால் ஒரு நாள் கூட சாண எரிவாயு நிற்கவில்லை''

''இரண்டு மாடுகளில் கூட இவ்வளவு எரிவாயு எப்போதும் கிடைக்கிறதா?'' என்ற வினாவிற்கு, ''எருமை அதிகச் சாணமிடும். அதனால் எரிவாயுவிற்குப் பற்றாக்குறையில்லை'' என்று சொல்லி, நமது ஐயத்தை அகற்றுகிறார்.


சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி, பெரமனூர் வாசியான திரு ராமசாமிக்கு ஆண்டுதோறும் விறகு வாங்கும் வகையில் செலவான சுமார் ரூ. 1000 தற் போது மிச்சமாகிவிட்டது. மண்ணெண்ணெய் கூட அவர் வாங்குவதில்லை. தட்டுப்பாடில்லாத சாண எரிவாயு வால், சமையல் கூடத்தின் தலையாய பிரச்சினைக்கு நிலையான தீர்வு கண்டுவிட்டார்.

கடும் உழைப்பாளியான இவருடைய குடும்பத்தில் 9 பேர் இருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ரூ. 3,200 மானியத்துடன் ரூ. 7,800 கடனில் அமைக்கப்பட்ட சாண எரிவாயுக் கலத்தில், கடனுக்காக இதுவரை ரூ. 1,700 திருப்பிச் செலுத்தப்பட்டுவிட்டது.

கலன்களை அமைத்துக்கொடுக்க, உங்கள் ஊர்நல அலுவலர் அனைத்து உதவிகளும் செய்வார். வங்கியில் கடனுக்கும், அரசு தரப்பிலிருந்து மானியத்திற்கும் அவர் ஏற்பாடு செய்வார்.

நீங்களும் இந்த 82,104 குடும்பங்கள் பெற்ற நன் மைகளையும் குறிப்பாக, திருமதி ராமசாமி அடைந்து வரும் பலன்களையும் ஏன் அடையக்கூடாது?



# தருமபுரி மாவட்டத்தில் கசிவு நீர்க் குட்டைகள்

தருமபுரி மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 30 சதவிகிதம் வனப்பகுதியாகும். ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் முதல் நவம்பர் வரையிலும் பெய்யும் மழையளவு மிகுந்த மாறுதலுக்குட்பட்டுள்ளது. இம் மாவட்டத்தில் மலைப்பகுதி அதிகமிருப்பதால் ஒவ்வொரு இடத்திலும் மழையளவு வேறுபட்டுள்ளது. மழை அளவு போதுமானதாக இல்லாததாலும், மழையே இல்லாமலிருப்பதாலும் வேளாண்மை கடினமானதாகவும், வறட்சிக்கு இலக்கானதாகவும் இருக்கிறது.

இம்மாவட்டத்தின் மொத்த மக்கட் தொகையில் 90.60 சதவிகிதம் கிராமப்புற மக்கள் தொகையாகும். தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் பயிர் செய்யும் பரப்பில், நீர்ப்பாசன வசதிக் குறைவினால் இம் மாவட்டம் பிற்பட்ட நிலையில் உள்ளது. மொத்த நீர்ப்பாசனப் பகுதியில் 70 சதவிகிதம் கிணற்று நீரைக் கொண்டு பாய்ச்சப்படும் பரப்பாகும். இயற்கையின் பாதிப்பால் கிணற்றுப்பாசனம் மிகவும் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் உள்ளது. நிலத்தடி நீரை அதிகரிப்பதற்குக் கசிவு நீர்க்குட்டைகள் மிகவும் பலன் தருவதாக உள்ளன.

மேற்காணும் தேவைகளைக் கருத்தில் கொண்டு மத்திய அரசும், மாநில அரசும் கசிவுநீர்க்குட்டை கட்டும் திட்டங்களை அமல்படுத்தி வருகின்றன. வேளாண்மைப் பொறியியல் துறை கசிவுநீர்க்குட்டை கட்டும் பணிகளை ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் மற்றும் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் ஆகியவற்றின் வாயிலாகச் செயல்படுத்தி வருகின்றது.

தருமபுரி மாவட்டத்தில் கசிவு நீர்க்குட்டைகள் கட்டும் பணி கடந்த 15 ஆண்டுக் காலமாக நடைபெற்று வருகின்றது. ஊரக நிலமற்ற விவசாயக்கூலியாட்களுக்கு வேலை கொடுக்கும் நோக்கோடும், அதன் மூலம் நிரந்தரக் கட்டுமானப் பணிகளை அமைத்துக் கொள்ளவும், 1984-'85ஆம் ஆண்டு முதல் இம் மாவட்டத்தில் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் அமல்படுத்தப்பட்டு, கசிவு நீர்க் குட்டைகள் கட்டும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தில் இதுவரை வறட்சிக்கு இலக்காகும் இப்பகுதித் திட்டத்தின் கீழ், 550-க்கு மேற்பட்ட கசிவு நீர்க்குட்டைகளும், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் கீழ் 150க்கு மேற்பட்ட கசிவு நீர்க் குட்டைகளும் வேளாண்மைப் பொறியியல் துறையினரால் கட்டப்பட்டுள்ளன. இதுவரை 10,000-க்கு மேற்பட்ட கிணறுகள் பயன்பெற்றுள்ளன. 15,000 மெட்ரிக் டன்னுக்கு மேல் கூடுதல் உணவு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் கீழ் 30 கசிவு நீர்க்குட்டைகள் ரூபாய் 35 லட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 24 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பணியாளருக்கும் தினமும் ரூ. 10-க்குக் குறையாமல் கூலி கொடுக்க நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் இதுவரை 1.60 லட்சம் மனித நாட்கள் பணியில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பணியாளுக்கும் 1.5 கிலோ அரிசியும்,1 கிலோ கோதுமையும் வழங்கப்பட்டுள்ளது.

## கசிவு நீர்க்குட்டைகள் கட்டுவதால் உண்டாகும் பயன்கள்

கசிவு நீர்க்குட்டைக்குக் கீழ்ப்பகுதியில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் அதிகரிக்கப்படுகிறது. கிணற்று நீர்ப்பாசனத்திலுள்ள பகுதி திறம்படுத்தப்படுகிறது. கூடுதலான நிலப்பரப்பு கிணற்று நீர்ப்பாசனத்தின் கீழ் கொண்டு வரப்படுவதுடன், கூடுதல் உணவு உற்பத்திக்கும் வகை செய்யப்படுகிறது. நீர் நிலைகளில் வண்டல் படிவது குறைக்கப்படுகிறது. கால் நடைகளுக்கு நீர் அருந்தவும், நிலமற்ற விவசாயக் கூலிகளுக்கு வேலை கொடுக்கவும் இந்தக் கசிவு நீர்க் குட்டைகள் பெரிதும் உதவி புரிகின்றன.

தொகுப்பு

**ஜோ. சந்திரன்**

**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தருமபுரி.**

# நூல் நயம்

### யானைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம்

ஆசிரியர்: நெல்லை ஆ.கணபதி,
வெளியீடு: ஆண்டாள் பதிப்பகம்,
சைதாப்பேட்டை,
சென்னை-15.

விலை ரூ.10. பக்கம். 108.

பதினேழு சிறுகதைகளின் தொகுப்பு இந்நூல். சிறார்களுக்கு நீதி போதனைகள் சொல்லும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இக்கதைகளில் சுவை ததும்புகிறது. சிறு சேமிப்பின் அவசியம், பொய் சொல்லக்கூடாது என்ற இலட்சியம், காலணியின் பெருமை ஆகியவற்றைச் சில கதைகள் எடுத்துச் சொல்கின்றன. பட்டிமன்றப் பாங்கிலும் ஒரு கதை இதில் உள்ளது. மொத்தத்தில் நூலின் இனிய, எளிய நடை, நம்மை ஒரே மூச்சில் படிக்க வைத்து விடுகிறது.

எஸ்.எஸ்.சுந்தரம்.

### ரேடியோ ரிப்பேரிங்

ஆசிரியர் : வ. அருணாசலம்
வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600098.

விலை : ரூ.19. பக்கம்:164.

நமது வீட்டிலுள்ள வானொலிப் பெட்டி சரியாக இயங்கவில்லையென்றால், நம்மால் முடிந்தவற்றைச் செய்து கடைசியாக ரேடியோ ரிப்பேரிங் செய்யும் இடத்திற்கு எடுத்துச் செல்கிறோம்.

ஒரு சிறு பழுதினால்கூட அது இயங்காமல் போகலாம். அதைத் தெரிந்து வைத்துக் கொண்டால், வானொலிப் பெட்டியை மீண்டும் பழையபடி இயங்க வைக்கலாம் இல்லையா?

இந்த நூலில் உள்ள 21 அத்தியாயங்களில், ரேடியோ ரிப்பேரிங் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. குறுகிய காலத்தில், சிறந்த முறையில் பழுதுபட்ட வானொலிப் பெட்டிகளைச் சரி செய்யும் முறைகளை இந்நூல் தெளிவாகக் கூறியிருக்கிறது. விளக்கப்படங்களும் உள்ளன.

சுயவேலைவாய்ப்பில் ஈடுபடும் இளைஞர்களுக்கும், ரேடியோ ரிப்பேரிங் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கும் இந்நூல் நல்ல கையேடு

—பி.வி.ஜி.

### மாவட்ட வளர்ச்சி மன்றம்

ஆசிரியர் : முல்லை
பி.எல். முத்தையா

வெளியீடு: நியூ செஞ்சுரி புக்
ஹவுஸ் பிரைவேட்
லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்
டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600098.

விலை : ரூ. 9 பக்கம்: 87

ஜில்லா பரிவித், மண்டல் பரிஷத் என அனைத்திந்திய அளவில் வழங்கப்படும் இது தமிழ்நாட்டில் மாவட்ட வளர்ச்சி மன்றம் என அழைக்கப்படுகிறது. இம்மன்றத்தை அமைப்பது எப்படி? மன்றத்தின் நோக்கம், உறுப்பினர் சேர்க்கை, பொது அதிகாரங்கள் முதலான சட்டம்-விதிகள் குறித்த தகவல்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. கேள்வி-பதில் முறையில், எளிய நடையில், எல்லாருக்கும் புரியும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

### மூலிகைகளின் மருத்துவக் குணங்கள்:

ஆசிரியர் : டாக்டர் திருமங்கல
நடராசன்
வெளியீடு: தமிழ்ச்செல்வி
நிலையம்.
43, சித்திரைக் குளம்
வடக்குத்தெரு,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.

விலை: ரூ. 7.75 பக்: 108

நாம் அன்றாடம் சமையலில் பயன்படுத்தும் கடுகு, சீரகம் போன்றவற்றிற்கும் கீரை வகைகளுக்கும் இத்தனை மருத்துவ குணங்களா? இதற்கான விளக்கங்கள் இந்நூலில் 29 தலைப்புக்களின்கீழ் கிடைக்கின்றன.

ஹோமியோபதி வைத்திய நூல் வரிசையில் முதல் நூல் இது.

ஆஸ்த்மா, தோல்நோய், மஞ்சள் காமாலை போன்ற பல்வேறு நோய்களுக்குமான சிகிச்சைகளில் மூலிகைகள் எவ்விதம் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் மிக எளிய முறையில் விளக்குகிறது இந்நூல்.

### நந்தவனப் பூக்கள்

ஆசிரியர் : தண்டு குன்னத்தூர்
தமிழன்.

வெளியீடு: இளவழகி பதிப்பகம்
திம்மம்பேட்டைஅஞ்சல்
நிலையம்
(வழி) அம்பலூர்,
வாணியம்பாடி வட்டம்
வ. ஆ. மாவட்டம்.

விலை : ரூ. 12 பக்: 128

இலக்கிய நயங்களை எடுத்தியம்பும் ஒரு சில கட்டுரைகளும் இலக்கியகர்த்தாக்கள் ஒரிருவரின் வரலாறும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

'கற்பில்சிறந்தவள்மாதவி' என்ற தலைப்பில் கோவலன் மீது மாதவி கொண்டிருந்த அன்பின் தன்மையை சிலப்பதிகாரத்தின் துணைகொண்டு சிறப்பாக வர்ணிக்கிறார் ஆசிரியர்.

பாரதம், பெரிய புராணம், போன்றவற்றிலிருந்தும் இலக்கிய நயங்கள் சுவைபட விளக்கப்படுகின்றன.

### வரலாற்றில் வேரோடிய இந்திய சோவியத் நட்புறவு:

ஆசிரியர் : எம். பழனியாண்டி

வெளியீடு: நியு செஞ்சுரி புக்
ஹவுஸ் பிரைவேட்
லிமிடெட்.
41-பி, சிட்கோ
எஸ்டேட்
சென்னை-600 098.

விலை : ரூ. 8.00 பக்: 132

இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையே தொன்றுதொட்டு நட்புறவு நிலவி வருகிறது. இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இவ்வுறவு மேலும் நெருக்கமடைந்

தது. இந்த நட்புறவு எவ்வாறு தோன்றி வளர்ந்தது என்பதையும் அதன்மீது நிர்மாணிக்கப்பட்ட சமாதானத்தையும் வள வாழ்வையும் இந்நூல் விளக்குகிறது.

ரஷ்யப்புரட்சியும் அதே காலக் கட்டத்தில் இந்திய தேசிய இயக்கத்தில் தோன்றிய புத்தெழுச்சியும் விவரிக்கப்படுகிறது.

சோவியத் யூனியனுக்குச் செல்ல வெகு சிரமத்துடன் அனுமதி பெற்று 1937-ல் தந்தை பெரியார் அவர்கள் அங்கு சென்றதையும் சோவியத் சமய எதிர்ப்புப் பிரச்சாரக் கழகத்தின் விருந்தினராகத் தங்கி சோவியத் நாட்டின் பல்வேறு இடங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தியதையும் ஆசிரியர் நினைவு கூர்கிறார்.

**நோய்நீக்கும் ஹோமியோபதி மருத்துவ முறை அறிமுகம்**

ஆசிரியர்: டாக்டர் சி. இராமகிருஷ்ணன்.

வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் 41-பி, சிட்கோ எஸ்டேட் சென்னை-600 098.

விலை: ரூ. 10 பக்: 100

பல்வேறு வைத்திய முறைகளில் ஹோமியோபதி சிகிச்சை முறை சிறந்ததொன்றாக எல்லோராலும் கருதப்பட்டு வருகிறது.

ஹோமியோபதி வைத்திய முறையை டாக்டர் சாமுவேல் ஹானிமன் உலகிற்கு அறிமுகப்படுத்திய வரலாறு, சிகிச்சைமுறை, பரவலாகக் காணப்படும் நோய்களுக்கு மருந்து, தடுப்பு முன் எச்சரிக்கை நடவடிக்கைகள், மருந்து தயாரிப்பு முறைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

நலவாழ்வுக்கு வழிகோலும் ஆசிரியரின் இந்த நூலில் எல்லோரும் பயன்பெறத்தக்க விளக்கங்கள் உள்ளன.

**நானறிந்த இராஜாஜி**

ஆசிரியர்: சிலம்புச்செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம்,

வெளியீடு: பூங்கொடி பதிப்பகம் 14, சித்திரைக் குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை-600 004.

விலை: ரூ. 26 பக்: 335

மூதறிஞர் இராஜாஜி அவர்களுடன் தமக்கிருந்த தொடர்பை, அவர்மீது தாம் கொண்ட பக்தியை இந்நூலில் விளக்குகிறார் சிலம்புச் செல்வர். மூதறிஞர் வாழ்க்கையில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளில் சிலவும் அவரின் சொற்பொழிவுகளும் அவர் எழுதிய கடிதங்களும் இதில் இடம் பெற்றுள்ளன.

தமது பெருமைக்குக் குறைவு ஏற்படாத வகையில் தம்மையும் தமது குடும்பத்தையும் வறுமையிலிருந்து மீட்க மூதறிஞர் எடுத்துக் கொண்ட முயற்சிகளை நெஞ்சம் நெகிழ நன்றியுடன் நினைவு கூர்கிறார் ஆசிரியர்.

இந்நூலைப் படிப்போர் கடந்த 50 ஆண்டுகால தமிழக அரசியல் நிலையைத் தெரிந்து கொள்ளும் அளவிற்கு ஒரு வரலாற்று நூல் போலவும் தயாரிக்கப்பட்டுள்ளது.

வி. இராவணன்.

## சென்னை வானொலியில் முக்கிய நிகழ்ச்சிகள்

சென்னை வானொலியில் 16.4.1988 முதல் 30.4.1988 முடிய ஒலிபரப்பாக இருக்கும் முக்கிய நிகழ்ச்சிகள் பற்றிய விவரம்:

**சென்னை-1 அலைவரிசை (416.7 மீ 720 கி.ஹெ)**

**ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள்**

| | | |
|---|---|---|
| காலை | 5.55 | அறநெறி (நாள்தோறும்) |
| | 6.10 | வழிபாடு (நாள்தோறும்) |
| | 6.35 | விரிவாக்கப்பணியாளர்களுக்கு (வெள்ளி, ஞாயிறு, செவ்வாய், புதன், வியாழன்) |
| | | உழவர்களுக்கு ஒரு வார்த்தை (சனி, திங்கள்) |
| | 7.00 | நேசக் கரங்கள் (வெள்ளி, இரண்டாம் சனிக்கிழமை நீங்கலாக) |
| | 7.10 | காலை மலர் (வெள்ளி நீங்கலாக) |
| | 8.20 | நினைத்தால் வாழலாம் (ஞாயிறு நீங்கலாக) |
| பிற்பகல் | 1.05 | மாதர் நிகழ்ச்சி (ஞாயிறு, செவ்வாய், புதன், வெள்ளி) |
| | 1.30 | அன்புவழி (நாள்தோறும்) |
| | 2.45 | தொடர் நாடகம் (சனி, ஞாயிறு நீங்கலாக) |
| மாலை | 5.30 | வெற்றி மாலை (நாள்தோறும்) |
| | 6.05 | மனைமங்கலம் (நாள்தோறும்) |
| | 6.25 | ஒன்று நமது சிந்தனை (நாள்தோறும்) |
| | 7.25 | வீடும் வயலும் (நாள்தோறும்) |

**சென்னை-2 அலைவரிசையில் (215 மீ 1395 கே.எச்)**

**ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள்**

| | | |
|---|---|---|
| காலை | 6.10 | பக்திமாலை (நாள்தோறும்) |
| | 7.15 | இளையபாரதம் (நாள்தோறும்) |
| | 8.30 | தெலுங்கு நிகழ்ச்சி (ஞாயிறு நீங்கலாக நாள்தோறும்) |
| பிற்பகல் | 1.10 | மேற்கத்திய இசை (நாள்தோறும்) |
| | 6.15 | மேற்கத்திய இசை (நாள்தோறும்) |
| மாலை | 5.10 | விளையாட்டுக் களஞ்சியம் (நாள்தோறும்) |
| | 6.30, 7.15 | இளைய பாரதம் (நாள்தோறும்) |
| | 10.30 | மதுரை காமராசர் பல்கலைக்கழக அஞ்சல் வழிக்கல்வி ஒலிபரப்பு (வெள்ளி, சனி நீங்கலாக) |

# பொது அறிவுத் தகவல்கள்



மின்சார விளக்கைக் கண்டுபிடித்தவர் யார்?

தாமஸ் ஆல்வா எடிஸன். முதல் மின்சார விளக்கை எரியவிட்டது 1879 டிசம்பரில்.

ரவீந்திரநாத் தாகூர் பிறந்த தினத்தை அகில இந்திய விடுமுறை தினமாக அறிவித்த ஆண்டு எது?

9.5.1986.

மிக அதிக அளவில் குங்குமப்பூ உற்பத்தியாகும் மாநிலம் எது?

ஜம்மு, காஷ்மீர்.

அமைதிக் கடல் இருக்குமிடம் எது?

சந்திரன்.

'பார்த்திபன் கனவு' என்ற புகழ் பெற்ற நவீனத்தை எழுதியவரின் பெயர் என்ன?

'கல்கி' ஆசிரியர் ரா. கிருஷ்ண மூர்த்தி.

இந்தியாவின் முதல் பொதுத் தேர்தல் நடந்த ஆண்டு எது?

1952.

டைட்டானியம் என்ற உலோகம் எதைக் கட்டுவதற்குப் பயன்படுகிறது?

விமானங்கள்.

தர்மா மீட்டரை வெந்நீரில் கழுவக்கூடாது. ஏன்?

தர்மா மீட்டர் உடைந்து பாதரசம் வெளியேறிவிடும்.

ஒரு காலனுக்கு எத்தனை லிட்டர்கள்?

4.54 லிட்டர்கள்.

ஜெனிவா ஏரியில் ஒரு முனையில் சங்கமமாகி மறுமுனை மூலம் வெளியேறும் நதி எது?

ரோன் நதி

விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியர் யார்?

லெப்-ராகேஷ் சர்மா.

வைரம் எதிலிருந்து உற்பத்தியாகிறது?

கரியிலிருந்து.

அன்னை தெரசாவின் பெயரைக் கொண்டுள்ள பல்கலைக் கழகம் சமீபத்தில் எங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது?

கொடைக்கானலில்.

பண்டைக் காலத்தில் நேரத்தை அளக்கப் பயன்படுத்தப்பட்ட சாதனங்கள் இரண்டு கூறு:

நிழற்கடிகாரம், மணற்கடிகாரம்.

இந்திய சுதந்திரத்துக்காக அரும்பாடு பட்டவர்களில் ஒருவர் அயர்லாந்தைச்சேர்ந்தவர். அவர் யார்?

டாக்டர் அன்னிபெசண்ட்.

பூமிக்கடியில் வளர்ந்து ஸ்டார்ச் சேமிக்கும் கிழங்குக்கு என்ன பெயர்?
கருணைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு.


மின் அமைப்புகளில் 'பியூஸ்' எதற்காக வைக்கப்படுகிறது?

அதிக மின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், பழுதுபடுவதைக் காப்பதற்கும்.

'எலிப்பொறி' என்ற நாடகம் இலண்டனில் ஆண்டுக்கணக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் ஆசிரியர் யார்?


அகதா கிறிஸ்டி.

# ஓங்கி வளர்வோம்!



**அன்பாய் நடந்திட வேண்டும்! — பாப்பா**
**ஆற்றலை வளர்த்திட வேண்டும்!**
**இன்பம் காண வேண்டின் — நாளும்**
**ஈகை உள்ளம் வேண்டும்!**
**உண்மை பேசும் இதயம் — தன்னை**
**ஊரே போற்றிப் புகழும்!**
**எண்ணம் தெளிய வேண்டும்! - அது**
**ஏற்றம் பெறவே தூண்டும்!**
**ஐந்து விரல்களைப் போலே - கூடும்**
**ஒற்றுமை இருப்பது மேலே**
**ஓங்கி வளர்வோம் பாப்பா! - நீ**
**ஔவைசொல் படிப்பாய் பாப்பா!**

**—புலமைதாசன்**



# உப்பு யாத்திரையையொட்டி வளர்ச்சிப் பணிகள்

13.4.88 வேதாரணியம் உப்பு யாத்திரையையொட்டி திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் புனிதப்பயணம் செல்லும் வழியில் கீழ்க்கண்ட வளர்ச்சிப்பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.


திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அந்தநல்லூர் வட்டத்தில் திருவளர்சோலை, கிளிக்கோடு (கல்லணை அருகில்) ஆகிய கிராமங்களில் என்.ஆர்.ஈ.பி. மற்றும் ஆர்.எல்.ஈ.ஜி.பி. ஆகிய திட்டங்களின் கீழ் 20 ஆதிதிராவிடர்களுக்குக் குடியிருப்புகள் ஒவ்வொன்றும் முறையே ரூ. 2.40 இலட்சம் செலவில் கட்டிக்கொடுக்க அரசு திட்டமிட்டுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் என்.ஆர்.ஈ.பி. திட்டத்தின் கீழ், தொட்டக்காடு (நாடார் அருகில்) சாத்தனூர் (திருவையாறு), நல்லூர் (வலங்கைமான்), கர்சான்குளம் (மன்னார்குடி வட்டத்தில் தட்டான்கோவில்அருகே), ஆதிச்சபுரம்(கோட்டூர்), மேலமருதூர் (திருத்துறைப்பூண்டி), பூவனூர் (நீடாமங்கலம்) மற்றும் ஆயக்காரன்புலம் (வேதாரணியம்) ஆகிய கிராமங்களில் ஒவ்வொன்றும் ரூ. 50,000 செலவில், சமூகநலக் கூடங்கள் கட்டப்படும்.

ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் ஒவ்வொன்றும் முறையே ரூ. 50,000 செலவில் வழுத்தூர் (பாபநாசம்), தகட்டூர் (வேதாரணியம்) ஆகிய கிராமங்களில் கட்டப்படும்.

ரூ. 5,000 செலவில் ரொக்கக்கூத்தகைக் கிராமத்தில் (நீடாமங்கலம் வட்டத்தில் -ராஜப்பையன்சாவடி அருகில்) வாய்க்கால் ஒன்று கட்டப்படும்.

## நன்னிலம் எண்ணெய்க் கிணறு



காவிரிப் படுகையில் எண்ணெய்க் கிணறுகளைத் தோண்டும் பணியில் தொடர்ச்சியான வெற்றி கிடைத்து வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டம் நன்னிலத்தில் 3460 மீட்டர் ஆழத்திற்குத் தோண்டப்பட்டிருக்கும் எண்ணெய்க் கிணற்றிலிருந்து நாளொன்றுக்கு 150 பீப்பாய் எண்ணெய்யும், 2933 கன மீட்டர் எரிவாயுவும் கிடைக்கின்றன.

நன்னிலம் எண்ணெய்க் கிணற்றிலிருந்து எண்ணெய் எடுக்கும் அடுத்த கட்டச் சோதனைகள் நடைபெற்று வருகின்றன.

காவிரிப் படுகையில் தோண்டப்பட்டுள்ள நான்காவது எண்ணெய்க் கிணறாகும், நன்னிலம் எண்ணெய்க் கிணறு.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தஞ்சாவூர் மாவட்டம் நரிமணத்தில் முதலாவது எண்ணெய்க் கிணறும், அதனைத் தொடர்ந்து கோவில்களப்பாலில் இரண்டாவது எண்ணெய்க் கிணறும், தென்னார்க்காடு மாவட்டம் புவனகிரியில் மூன்றாவது எண்ணெய்க் கிணறும் தோண்டப்பட்டுள்ளன. இம்மூன்று எண்ணெய்க் கிணறுகளிலிருந்து இதுவரை சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு 1,40,500 பீப்பாய் எண்ணெய் அனுப்பப்பட்டுள்ளது.

காவிரி வட்ட எண்ணெய் தமிழ்நாட்டிலும், புதுவை மாநிலத்திலும் 48,000 சதுர கிலோ மீட்டர் அளவுக்குக் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் இந்த வட்டாரத்தின் வருங்கால வளர்ச்சி ஒளிமயமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

# கோட்டூர்புரம் பாலம்—

## சில தகவல்கள்:

சென்னை அடையாறு ஆற்றின் குறுக்கே கோட்டூர்புரத்தில் ரூ. 176 இலட்சத்தில் கட்டிமுடிக்கப்பட்ட பாலத்தை 2-4-1988 அன்று மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் திறந்து வைத்தார். விழாவிற்கு ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ்.எஸ். சித்து அவர்கள் தலைமை தாங்கினார். விழாவில் மைய அரசின் முன்னாள் நிதியமைச்சர் திரு சி. சுப்பிரமணியம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி வைஜயந்திமாலா பாலி, டாக்டர் அ. கலாநிதி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். நெடுஞ்சாலைத்துறையின் தலைமைப் பொறியாளர் திரு வி. குருமூர்த்தி பாலம் கட்டுமானப் பணிகுறித்த அறிக்கையைப் படித்தார். விழாவிற்கு வந்திருந்தோரை திரு எஸ். சிவசுப்பிரமணியன் இ.ஆ.ப., (ஆணையர் மற்றும் செயலர், போக்குவரத்துத்துறை) வரவேற்றார். விழா இறுதியில் நெடுஞ்சாலை மேற்பார்வைப் பொறியாளர் (உலக வங்கி) திரு. ஆர். எம். கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

சென்னை மாநகரில் பெருகி வரும் போக்குவரத்து நெரிசலைக் கூடிய மட்டும் குறைப்பதற்கும், சுற்றிச் செல்வதால் ஏற்படும் எரிபொருளைச் சிக்கனப்படுத்துவதற்கும், பயண தூரத்தையும், நேரத்தையும் குறைப்பதற்கும், சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாக்கவும், புறநகர் வளர்ச்சிக்கும், வெள்ளக் காலத்தில் துரித நிவாரணம் அளிக்கும் பொருட்டும், தேவையான சமயத்தில் போக்குவரத்தைத் திருப்பிவிடவும், மேலும் இதுபோன்று பல நன்மைகளைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு இத்திட்டத்தைத் தீட்டி நிறைவேற்றியுள்ளது.

இந்தப் பாலவேலை 1981 செப்டம்பர் மாதத்தில் தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அடித்தளக் கிணறுகள் இறக்கப்படும்பொழுது, கிணறுகளிலிருந்து கொடிய கந்தக வாயு வெளியேற்றத்தாலும், 1983 மற்றும் 1985-இல் எதிர்பாராத வெள்ளம் காரணமாகவும் பால வேலை முன்னேற்றத்தில் தவிர்க்க முடியாத தாமதம் ஏற்பட்டது. 1988 மார்ச்சு மாதத்தில் இப்பாலம் முடிக்கப்பட்டுவிட்டது.

இப்பாலம் சென்னை மாநகராட்சிக்காக ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

அடையாற்றின் குறுக்கே அமைந்திருக்கும் இப்பாலத்திற்கு ஆற்றின் மேற்புறத்தில், சைதாப்பேட்டையில், 3.15 கி.மீ. தொலைவில், மறைமலை அடிகளார் பாலமும், கீழ்ப்புறத்தில், 2 கி.மீ. தொலைவில், திரு.வி.க. பாலமும் அமைந்துள்ளன.

இப்பாலம் வினாடிக்கு 65,000 கன அடி நீர் வெளியேற்ற அளவைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாலத்தின் நீளம் 138.30 மீட்டர். மூன்று கண்கள் உடையது. நான்கு வழிப்பாதைப் போக்குவரத்திற்காக 16.20 மீட்டர் அகலத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. படகுப் போக்குவரத்தைக் கருத்தில் கொண்டு பாலத்தில் ஒவ்வொரு கண்ணும் விசாலமாக 40.3 மீட்டர் அகலத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பாலம் நெரிசல் மிகுந்த குடியிருப்புகளுக்கு இடையே அமையப்பெற்றதால், பாலத்தில் இரு பக்கங்களிலும் 1.575 மீட்டர் அகலமுள்ள நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது.

இப்பாலத்தின் அடித்தளம் கான்கிரீட் கிணறுகளால் ஆனது. சார்புச் சுவருக்கு ஐந்து கிணறுகளும், தூண்களுக்கு இரண்டு கிணறுகளும் என்ற விகிதத்தில் மொத்தம் பதினான்கு கிணறுகள் அமைந்துள்ளன. கற்கலவையினாலான 6 மீட்டர் விட்டமுள்ள கிணறுகள் ஏறத்தாழ 19.25 மீட்டர் ஆழம் வரை இறக்கப்பட்டுள்ளன.

ஆற்றின் இப்பகுதியில், தேசிய அளவில் ஆண்டுதோறும் படகுப் போட்டி நடைபெற்று வருகிறது. இப்போட்டியின் தேவைக்கு ஏற்றவாறும், 'V' வடிவத்தில் புதுமையான எழில்மிகு தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பாலத்தின் மேல்தளமானது, ஒரு கண்ணிற்கு பத்து உத்திரங்கள் வீதம் மொத்தம் முப்பது உத்திரங்களைக் கொண்டது. இவ்வுத்திரங்கள் முன் வலுவேற்றப்பட்ட கற்கலவையால் ஆனவை. ஒவ்வொரு உத்திரமும் நூறு டன் எடையுள்ளது. தனியாக, தளத்தில் உருவாக்கப்பட்டு நவீன முறையில் தூக்கும் உத்திரம் மூலம் உத்திரங்கள் பாலத்தில் வைக்கப்பட்டன.

கோட்டூர்புரம் பக்கம் 308 மீட்டர் நீளத்திற்கு அணுகுசாலை அமைக்கப்பட்டுள்ளது. இந்த அணுகுசாலை சர்தார்படேல் சாலையுடன் இணைகிறது. நந்தனம் பக்கம் 221 மீட்டர் நீளத்திற்கு அணுகுசாலை அமைக்கப்பட்டுள்ளது. இவ்வணுகுசாலை சாமியர்ஸ் சாலையையும், அதன் வழி அண்ணா சாலையையும் இணைக்கிறது.

இப்பாலத்தைக் கட்டி முடிக்க, 3,300 டன் சிமெண்ட்டும், 408 டன் சாதாரண இரும்புக்கம்பிகளும், 70 டன் வலுமிக்க இரும்புக் கம்பிகளும் பயன்படுத்தப்பட்டன.

இப்பாலத்தை உருவாக்க ரூ. 176 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இந்தப் பாலம் பராமரிப்புக்காக சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட உள்ளது.

# பார்த்தோம்-படித்தோம்

1.3.88 இதழில் வெளிவந்துள்ள 'அஞ்சல் தலையின்கதை' கட்டுரை மக்களுக்குக் குறிப்பாக மாணவர்களுக்குப் பயன் தரவல்லது.

அரிமா. பூபாளம்,
ப. முருகேசபாண்டியன்
கரப்பாடி.

1.3 88 இதழில் வெளிவந்துள்ள 'அண்ணலின் பொன்மொழிகள்' அரிய தொகுப்பு. 'மனச்சுமை' கதையின் மூலம் என் மனச்சுமை மறைந்தது.

ஆர். ஜி. துரைராஜு
கீழப்பழுவூர்.

1.3.88 இதழ் கண்டேன். அட்டை அருமை. காந்தியடிகள் பொன்மொழிகள், பிரதமரின் 20 அம்சத்திட்டம் முதலானவை சிறப்பாக இருந்தன.

—இரா. கலைஜெய்குமார்
சேலம்.

மாணவர் பக்கத்தில் வெளிவரும் 'பொது அறிவுச் சுடர்'' மிகவும் பயனுள்ள பகுதி.

—சக்கரபாணி
தீட்டுக்காட்டூர்.

1.3.88 இதழில், உழவர்களுக்கு வழங்கப்பட்ட புதிய வித்துக்கள், நன்முத்துக்கள். சிறப்பான இதழ்.

ஆர். அத்தியப்பன்
மூனுசாவடி.

'பிணி தீர்க்கும் மணத்தக்காளி' கட்டுரை அருமை.

பி. பாலாஜி கணேஷ்,
கோவிலாம்பூண்டி.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23






வேதாரணியம் உப்பு
சத்தியாக்கிரகம்
(1930)